[*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதாவது, பேரவை விதி 121 (1) என்ன சொல்லியிருக்கிறது என்றால், 'ஓர் உறுப்பினர், பேரவைத் தலைவரின் அதிகாரத்தை புறக்கணித்தோ அல்லது பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்தி, வேண்டுமென்றே பேரவையின் அலுவலை நடைபெறாது இடைமறித்தாலோ, பேரவைத் தலைவர் தேவை என்று கருதினால், அந்த உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடலாம்.*

(2) அவ்வாறு பேரவைத் தலைவரால் ஓர் உறுப்பினர் பெயரிட்டுக் குறிப்பிடப் பெற்றால், அந்த உறுப்பினர் பேரவைக் கூட்டத்தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு மிகாமல் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்' என்று விதியில் உள்ளது.

அந்த உறுப்பினர் ஒவ்வொரு முறையும் இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்கின்ற நாட்களில் இதே முறையைத்தான் கையாளுகிறார். ஆனாலும்கூட, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா மற்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றைக்கு ஒருநாள் மட்டும்தான் இந்த அவை நடவடிக்கைகளிருந்து அவரை விலக்கி வைக்குமாறு நான் ஆணையிட்டிருக்கிறேன். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் இந்த அவை தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19– மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பூமியில் ஆயிரம் தெய்வங்கள் இருந்தாலும், பூமியே வணங்கும் தெய்வமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் ஆயிரம் வள்ளல்கள் இருந்தாலும், வரலாறே வியக்கும் வள்ளலாக, பாரினில் ஆயிரம் தலைவர்கள் இருந்தாலும், தலைவர்களெல்லாம் மலைக்கும் தலைவராக, (மேசையைத் தட்டும் ஒலி) தரணியில் ஆயிரம் தாய்கள் இருந்தாலும், தாய்களெல்லாம் பாசம் காட்டும் தாயாக, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழ்வின் இயக்கமாக, எங்கள் இயக்கத்தின் வாழ்வாக, ஏழைத் தமிழனின் மூச்சாக, எங்களின் பேச்சாக, தேசம் காத்த தலைவியாக, நேசம் காட்டிய தாயாக, (மேசையைத் தட்டும் ஒலி) உயிர்கள் வாழ நிலமாக, பயிர்கள் வளர நீராக, இருளகற்றும் ஒளியாக, சக்தி கொடுக்கும் வளியாக, அண்டம் காக்கும் வானாக, பஞ்சபூத சக்தியாக, சக்தி நிறைந்த பிரபஞ்சமாக, பிரபஞ்சம் காக்கும் பிரம்மாண்டமாக எங்கோ இருக்கிறீர்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் இருக்கிறீர்கள் தாயே! நீங்கள் எங்கிருந்தாலும், எங்களைச் சிறப்பாக வழிநடத்தும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு, என் கண்ணீர் பூக்களைச் சமர்ப்பித்து, அம்மா அவர்களின் வழியிலே, அம்மா அவர்களின் கொள்கையிலே அமைதியும், ஆற்றலும் கொண்டு இயக்கத்தையும், இந்த ஆட்சியையும் மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. பழனிவேல் தியாக ராஜன்] [*2017 ஜூலை 4*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 840, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2283, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2312, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3983, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4812, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5338, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5415, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5738, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6136, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6551, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6623, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6641, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6670, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

பிற்பகல் 12–25

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1144, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1192, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1811, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.*

2017 ஜூலை 4]

திரு. ச. பாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4356, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 693, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லா கருத்தரிப்பு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1585, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.*

[பேரவைத் துணைத் தலைவர்] [*2017 ஜூலை 4*

வெட்டுத் தீர்மானம் எண் 2038, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2079, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2110, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2144, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2179, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2221, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2343, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஓரத்தநாடு தொகுதி, ஓரத்தநாடு வட்ட மருத்துவமனையில் எக்ஸ்–ரே மற்றும் ஈ.சி.ஜி. உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் தேவையான உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2471, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2507, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2517, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2647, மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன்.

திரு. செள. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் தலைக்கான சிகிச்சைப் பிரிவு, எலும்பு சிகிச்சைப் பிரிவு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2661, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2684, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, செங்கம் மற்றும் தாணிப்பாடி மருத்துவமனைகளில் மருத்துவ காலியிடம் நிரப்புதல் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மு.பெ. கிரி] [*2017 ஜூலை 4*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2897, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2946, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2964, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2991, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3091, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3204, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் தென்பாதி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3407, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், வில்லுகுறியில் ஆரம்ப*

2017 ஜூலை 4] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

சுகாதார நிலையத்தை விரைவாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3512, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3599, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3614, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3691, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3714, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செஞ்சி நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையை நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3746, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

[பேரவைத் துணைத் தலைவர்] [*2017 ஜூலை 4*

வெட்டுத் தீர்மானம் எண் 3900, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4040, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4169, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4218, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4305, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4637, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4701, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4732, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உள்ள தளி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4755, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4788, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாநகராட்சி, 18–வது வார்டில் மீனவர் மற்றும் சங்குகுளித் தொழிலாளர்களின் நலனுக்காக சுகாதார மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4950, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

மாண்புமிகு திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5033, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, கோவிலடி ஆரம்ப சுகாதார மைய மருத்துவமனைக்கு மருத்துவர், பணியாளர்களை நியமித்து, மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5079, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.*

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பாப்பாகுடி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சி, உடையாம்புளியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5156, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 5494, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5535, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

2017 ஜூலை 4]

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட இக்பால் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5611, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பூதூர் ஊராட்சி மற்றும் வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5795, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5806, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5832, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5891, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

[பேரவைத் துணைத் தலைவர்] [*2017 ஜூலை 4*

வெட்டுத் தீர்மானம் எண் 5911, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "துறையூரில் உள்ள வட்ட அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, M.S., M.D., D.G.O., போன்ற மருத்துவர்கள் போதிய அளவில் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5972, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6015, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுத்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பினை

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

@ இந்த மாமன்றத்தில் நான் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாமாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கையின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) இதையெல்லாம் கண்டு நாங்கள் அசர மாட்டோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)

டாக்டர் (திருமதி) பூங்கோதை: தைரியமாக இருங்கள். நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கூச்சல் போடலாம், நீங்கள் என்ன வேண்டுமானாலும் கிண்டல் பண்ணலாம், கூச்சல் போடலாம். It just shows your level of understanding. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் பூங்கோதை, நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: தேவையில்லாமல் அவர் ஏன் இப்படிப் பேசுகின்றார்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் பூங்கோதை, நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: அவர்கள் அவங்க அம்மாவைத் தவிர வேறு யாருக்கும் மரியாதை கொடுக்க மாட்டார்கள். இது ரொம்ப simple.

@ 309 முதல் 564 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் முறை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த என் தாயுமானவர், தந்தையுமானவர், தமிழ் இனத்தின் ஈடு இணையற்ற தலைவர், இன்றும் என் தந்தையின் பெயரை இம்மன்றத்தில் ஒலிப்பதற்குக் காரண கர்த்தா, உயிரினும் மேலான என் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் வணக்கத்தினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் தலைமகன் மட்டுமல்ல, தமிழகத்தின் தலைமகன் மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தின் தலைமகனாக நான் வணங்கும் அழுத்தமான, ஆழமான, ஆர்ப்பாட்டம் இல்லாத, களப் பணியில் களைப்படையாத, an astute Gentleman Politician என அனைவராலும் பாராட்டப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை மீட்டெடுக்கத் தயாரான நிலையில் உள்ள எங்கள் செயல் தலைவர், எங்கள் எதிர்க்கட்சித் தலைவர், பாசமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும் என் வணக்கத்தினையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

இலைகள் உட்பட உலக உயிர்கள் அனைத்திற்கும் உயிர் கொடுக்கும் சின்னமான உதயசூரியனுக்கு வாக்களித்து, என்னை வெற்றி பெறச் செய்த ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு இந்தத் தருணத்தில் என் நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என் உரையை தொடங்குகிறேன்.

ஒரு நாடு வளர்ச்சியானதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பது பகட்டான வாழ்க்கை முறையல்ல; அவர்கள் அணிகின்ற அணிகலன்கள் அல்ல. வளர்ந்த நாடா, இல்லையா என்று தீர்மானிக்கக்கூடிய குறியீடுகள், அந்த நாட்டு மக்களின் வாழ்நாள் விகிதம்; ஆண், பெண் விகிதாச்சாரம்; கர்ப்பிணிப் பெண்கள்; 1 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மரண விழுக்காடு; சுகாதாரமான கழிப்பறை வசதி; தங்குதடையின்றி கிடைக்கின்ற சுத்தமான குடிநீர்; மின்சாரச் சக்தி ஆகியவை ஆகும். அதனால்தான், உலக சுகாதார மையம் 1948–ல், உடல் ஆரோக்கியம் என்றால்

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

என்னவென்று மிகத் தெளிவாக எடுத்துரைத்தது. Health is a state of complete physical, mental and social wellbeing and not merely an absence of disease and infirmity. அதாவது, உடல்ரீதியாக, மனரீதியாக, சமுதாயரீதியாகப் பாதிப்பின்றி வாழ்வதே உண்மையான ஆரோக்கியம் ஆகும். இந்தியா, ஒரு வளர்ந்து வரும் நாடு. அதில் வளர்ச்சியடைந்த முதல் 5 மாநிலங்களில், தமிழகமும் ஒன்று. இன்று தமிழகம் The Health Capital of India என்று பெருமையாகக் கூறப்படுவதற்குக் காரணம் டாக்டர் கலைஞர் அவர்களே என்பதை இங்கு ஆதாரத்தோடு நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 30 ஆண்டுகளாக, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்தது தமிழ்நாடுதான். ஆனால், கடந்த 3, 4 வருடங்களாக மக்கள் நல்வாழ்வுத் துறையில், முக்கியமாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் தாமதம்; தாய்–சேய் நலத்தில் தேக்க நிலை; தமிழகத்தில் தொற்றா மற்றும் தொற்று நோய்கள் இரண்டும் அதிகரித்து, அதன்காரணமாக தமிழ்நாட்டில் பொருளாதாரரீதியாக பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதுதான் நிதர்சனமான உண்மை. நம் அனைவருக்கும் தெரியும், இதயம், நுரையீரல் பாதிப்பு, நீரிழிவு வியாதி, புற்றுநோய், மன நோய் போன்ற நோய்கள் அண்மையில் தொற்றா நோய் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. தொற்றா நோய், non communicable disease என்றால், city based people–க்குத்தான் வரும், ஏழையெளிய மக்களுக்கு வராது என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால், இன்றைய மாறிவரும் வாழ்க்கைச் சூழல், உணவு முறையினால் தொற்றா நோய்கள் எந்த அளவிற்கு நகர்ப்புறங்களில் உள்ளதோ, அதே அளவிற்கு கிராமப்புறங்களிலும் உள்ளது. எந்த அளவிற்கு வசதி படைத்தவர்களுக்கு உள்ளதோ, அதே அளவிற்கு வசதியில்லாத ஏழையெளிய மக்களுக்கும் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தற்போது தமிழகத்தில் உள்ள அவல நிலை என்னவென்றால், நம்மில் யாராவது ஒருவர் emergency ward–க்குப் போனால், emergency services–க்குப் போனால், 55, 60 வயதுடைய தந்தைமார்கள், பெற்றோர்கள் நின்று கொண்டிருப்பார்கள். என்ன விஷயம் என்று அவர்களிடம் கேட்டால், 'பையனுக்கு 19 வயதுதான், நேற்றைக்குக் குடித்துவிட்டு பைக்கில் போனதால் தலையில் அடிபட்டிருக்கிறது' என்பார்கள்; 'மற்றொருவருக்கு 35

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [2017 ஜூலை 4

வயதுதான், அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்பார்கள்; அதேபோன்று, அவருக்கு 40 வயதுதான், கேன்சர் வந்திருக்கிறது' என்று சொல்வார்கள். இதற்கு முக்கியமான காரணிகள் என்னவென்றால், மது, புகையிலை, சாலை விபத்து. இந்த மூன்று காரணங்களும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. These causes are inter–linked and inter–dependent. இன்று இந்தியாவில் மது அருந்துபவர்களின் எண்ணிக்கை 38.1 சதவிகிதம். தமிழ்நாட்டில் மட்டும் 51.4 சதவிகிதம். அதிலும், தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 7 கோடி மக்கள் தினந்தோறும் மதுக் கடையை நாடி, மிகப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருப்பதுதான் அழுத்தமான உண்மை. 1980–களில் ஒரு மனிதன் குடிக்க ஆரம்பிக்கும்போது, அப்பொழுது சராசரி வயது 27; இப்போது 2017–ல் சராசரி வயது எவ்வளவு என்றால், 15. இதுதான் இன்றைய தமிழ்நாட்டின் நிலை. மேற்கண்ட அனைத்துத் தொற்றா நோய்களுக்கும் மதுவும் ஒரு காரணம் என்பதை இங்கு நான் அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். சுமார் 60–க்கும் மேற்பட்ட நோய்கள், இதய நோயாக இருந்தாலும், புற்றுநோயாக இருந்தாலும், மன அழுத்தம், தற்கொலை போன்றவை எல்லாம் மதுவினால் ஏற்படுகின்றன.

பிற்பகல் 12–35

இன்று National Crime Records Bureau என்ன கூறுகிறது என்றால், இந்தியாவிலே சுமார் 1.5 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு alcohol related death ஏற்படுகிறது என்றும், அதிலே தமிழகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 69,059 நபர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலே, முக்கியமாக 35 வயது முதல் 40 வயது வரையுள்ளவர்கள் உள்ளனர். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள், 35 முதல் 40 வயது வரை என்பது ஒரு மனிதன் உச்சத்தை அடைய வேண்டிய வயது. ஓர் இளமையான குடும்பம் இருக்கும். அந்தச் சமயத்தில் அவன் மரணம் அடைந்தால் அவனது குடும்பம் என்ன நிலையில் இருக்கும்? இந்தியாவிலே 30 வயதுக்குட்பட்ட விதவைப் பெண்கள் இருக்கிறார்கள் என்றால், அதற்கு முக்கியமான காரணம் மதுவினால் ஏற்படும் சீர்கேடுகள்தான். அதனால்தான், WHO, மது அருந்துபவர்களை சமூக விரோதிகளாகக் கருதாமல், they are not a social evil, அவர்களை நோயாளிகள் என உணர்ந்து தகுந்த சிகிச்சை வழங்கிட வேண்டுமென்று சொல்கிறது. இதை நான் கூறவில்லை, உலக சுகாதார மையம் கூறுகிறது. Alcohol

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

consumption is a public health issue. 7 வருடங்களுக்கு முன்பு கர்நாடகத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற NIMHANS மனநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுவை அரசே விற்பதால் பொருளாதாரரீதியாக சுமையே தவிர, இலாபம் ஒன்றும் இல்லை என்று கூறுகிறது. அதாவது, அரசுக்கு 1 ரூபாய் இலாபம் கிடைத்தால், மதுவினால் ஏற்படும் தீமையினால் 2 ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்ற பொருளாதாரச் சுமைதான் அரசுக்கு ஏற்படுகிறது என்று கூறுகிறது. அதுமட்டுமல்ல, National Crime Records Bureau மீண்டும் என்ன கூறுகிறது என்று சொன்னால், 80 சதவிகிதப் பெண்கள் வன்கொடுமையால் பாதிக்கப்படுவதற்கு முக்கியமான காரணம் மற்றும் அவர்களுக்கு பல நோய்கள் ஏற்படுவது மற்றும் தற்கொலை போன்ற செயல்களில் பெண்கள் ஈடுபடுவதற்கான காரணம் மதுதான் என்று சொல்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த அரசு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உளவியல்ரீதியாக அறிவுரைகள், மதுவிலிருந்து வெளிவருவதற்கான மருத்துவ வசதிகள், மறுவாழ்வு மையங்களை ஏற்படுத்த வேண்டும். Every Primary Health Centre should have a counselling de–addiction and rehabilitation centre. ஆனால், இதில் ரொம்ப வியக்கத்தக்க விஷயம் என்னவென்று சொன்னால் இவ்வளவு பெரிய மானியக் கோரிக்கை புத்தகத்தைக் கொடுத்து இருக்கிறீர்கள். மது அருந்தக் கூடாது என்றுதான் சொல்வார்கள். மதுவைப் பற்றி புத்தகத்தில்கூடவா குறிப்பிடக் கூடாது? Alcohol related deaths எவ்வளவு இருக்கின்றன? மதுபானம் அருந்துவதால் ஏற்படும் நோய்கள் பற்றி ஏன் இதில் குறிப்பிடப்படவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சில கருத்துகளைத் தெரிவித்த பின்னர், அதற்குப்பிறகு பதில் தெரிவிக்கலாம் என்றுதான் இருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் தடம்மாறி மதுவிலக்கு உள்ளிட்ட பல்வேறு பொருள் குறித்துப் பேச ஆரம்பித்து விட்டார். இந்தியா ஒரு வளர்ந்துவரும் நாடு. வளர்ச்சி அடைந்த முதல் ஐந்து மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று நீங்கள் ரொம்ப அழகாகச் சொன்னீர்கள். பெரிய மாநிலங்கள் என்ற அடிப்படையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அதற்குக்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

காரணம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகள், ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரக் குறியீடுகள். உலகளவில் அந்த health indicators–ஐ வைத்துதான் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சியை ஒப்பிட முடியும். அந்த health indicators–ல், we are standing first. We are the well performing State. We are the number one State. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. நீங்கள் ஒன்றே ஒன்றை எனக்கு விளக்க வேண்டும். சுகாதாரத் துறை 30 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக இயங்கி வந்தது. கடந்த 3 மற்றும் 4 ஆண்டுகளாகச் சரியாக இயங்கவில்லை என்று தெரிவித்தீர்கள். 30 ஆண்டுகளாக சுகாதாரத் துறை சிறப்பாக இயங்குவதற்கு உங்கள் தலைவர்தான் காரணம் என்று சொன்னீர்கள். அப்படி 30 ஆண்டுகளாக சுகாதாரத் துறை சிறப்பாக இயங்குவதற்கு உங்கள் தலைவர் எந்தத் திட்டத்தை இந்தத் துறைக்குக் கொடுத்தார் என்பதை முதலில் நீங்கள் எனக்கு விளக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு, நீங்கள் NCD, தொற்றா நோய்கள் பற்றி குறிப்பிட்டீர்கள். ஒரே ஒரு கருத்தை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொற்றா நோய்கள் Non–communicable diseases–Diabetes Mellitus, Hypertension, C.A. Breast, C.A. Cervical இந்த நான்கு தொற்றா நோய்களையும் screen செய்து, கிட்டத்தட்ட, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் NCD Corner என்ற அமைப்பை ஏற்படுத்தி 2,320 செவிலியர்களை பிரத்யேகமாக நியமனம் செய்து, screen செய்து இன்றுவரை C.A. Breast, C.A. Cervical நோயாளிகளைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சையை முறையாக, முழுமையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிற ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலமும் கொடுக்கவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பிலுள்ள 490 பக்கங்களையும் நீங்கள் முழுமையாகப் படிக்க வேண்டும். அனைத்து அம்சங்களும், எந்த ஒரு sector–ம் விடுபடாத வகையில் மிகச் சிறப்பான அளவில் ஒருங்கே பொருந்தி மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதி விடப்பட்டிருக்கிறது, எந்த sector–ஐ அதில் cover செய்யவில்லை என்பதையும் நீங்கள் எனக்கு விளக்க வேண்டுமென்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். முதன்முதலில் தமிழ்நாட்டில் மதுவிலக்கினைக் கொண்டு வந்தது யார் என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்நாடு இந்த அளவிற்குப் போனதற்கு யார் காரணம் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள். . . (குறுக்கீடுகள்) பேசி முடித்த பிறகு, நீங்கள் சொல்லுங்கள். 1971 ஆம் ஆண்டு அவசரச் சட்டம் கொண்டு வந்து, மதுக் கடைகளைக் கொண்டு வந்தது நீங்கள் என்பது உங்களுக்கும் தெரியும். அதற்குப் பின்னர், மதுவினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.10 இலட்சத்தை 2005–2006 ஆம் ஆண்டு ஒதுக்கியிருந்தார்கள். அந்தத் தொகையைக்கூட நீங்கள் ஒதுக்கவில்லை. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர்தான் ரூ.1 கோடியாக அதனை உயர்த்திக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2015 ஆம் ஆண்டு மீண்டும் மதுவை மக்கள் வெறுக்கும் வகையில் அவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் தொகையை ரூ.3 கோடியாக ஒதுக்கீடு செய்தார்கள். இப்போது மக்கள், மதுவுக்கு அடிமையாகிவிட்டார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் நீங்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, பேசுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உரையை நீங்கள் complete ஆக திசை திருப்பப் பார்க்கிறீர்கள். அதாவது முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க விரும்புகிறீர்கள். இங்கு என்ன சொல்ல வந்தேன்? நான் மதுவிலக்கைப் பற்றி இங்கே பேச வரவில்லை. (குறுக்கீடு) நான் உரையை முடித்துவிடுகிறேன். நான் மதுவினால் ஏற்படும்

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [*2017 ஜூலை 4*

நோய்களைப் பற்றித்தான் பேசுகிறேன். பொருளாதாரரீதியாக, மனரீதியாக ஏற்படும் பிரச்சினைகளைத்தான் நான் பேசுகிறேன். இன்றைக்கு குட்கா, மது உட்பட எல்லாப் பொருட்களும் தடையின்றி அரசின் வாயிலாக, அரசின் உதவியோடு கிடைக்கிறது. இன்றைக்கு நீங்கள் டாஸ்மாக் கடைக்குச் சென்று பாருங்கள், 2, 3 போலீஸ்காரர்களைப் பாதுகாப்புக்காகப் போட்டு இருப்பீர்கள். ஆனால், ஆர்ப்பாட்டம் செய்பவர்களுக்கு பாதுகாப்பு போட்டிருக்க மாட்டீர்கள். இன்றைக்கு பாதுகாப்போடு யார் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்றால், அது மது அருந்துபவர்கள்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்த நோய்கள் வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், டாஸ்மாக் கடையில் காவல் துறையினரைப் பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டு வியாபாரம் நடத்துவதாகச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, உங்களுடைய ஆட்சியில் மதுவைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையைக்கூட நிறுத்திவிட்டீர்கள், நான் அதைக் குறையாகச் சொல்லவில்லை. ஆனால், இவ்வளவு நடந்தும் கிட்டத்தட்ட 3,321 கடைகளைக் குறைத்தும்கூட, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் பாதுகாக்கின்ற ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நிறுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது. ஆனால், உடனடியாக நிறுத்தினால் பக்கத்து மாநிலங்களிலிருந்து மது வந்துவிடும் என்பதற்காகவும், கள்ளச் சாராயம் வந்துவிடும் என்பதற்காகவும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு படிப்படியாக நாங்கள் குறைக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கின்ற ஆட்சி அம்மா அவர்களுடைய ஆட்சி. (குறுக்கீடு) இவ்வளவு கஷ்டத்திலும் பார்த்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடம். நான் சொல்கிறேன். 13 நிமிடங்கள் இந்த ஒரு subject–ஐ மட்டும்தான் பேசியிருக்கிறீர்கள், பார்த்துக்கொள்ளுங்கள்.

2017 ஜூலை 4] [பேரவைத் துணைத் தலைவர்]

நேரத்தைப் பயன்படுத்தி அடுத்த subject–க்கு move செய்யுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேசுங்கள். (குறுக்கீடு) வேகமாகப் பேசுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விட்டுவிடச் சொல்லிவிட்டார்கள். அதனால் விட்டுவிடுகிறேன். அப்புறம் தனியாகப் பார்த்துக்கொள்ளலாம்.

அடுத்து, Indian Council of Medical Research–ன்படி, 2011 ஆம் ஆண்டு தமிழகத்தில் மட்டும் 88,847 புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டனர். இந்தியாவில் உள்ள மொத்த புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையில் 8 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கடந்த காலங்களில் புற்றுநோய் என்றால் வாயில், நாக்கில், தொண்டைக் குழியில் வரும், பெண்கள் என்றால் கர்ப்பப்பைவாயில் வரும். ஆனால், இன்றைக்கு நம்முடைய சுற்றுசூழல் மாறுதலால், உணவுப் பழக்கவழக்கங்களால் இன்றைக்கு வளர்ந்த நாடுகளில் உள்ள புற்றுநோய், குடல் புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய், பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய், தைராய்டு சுரப்பி புற்றுநோய், சினைப்பை புற்றுநோய்கள் வருகின்றன. அதில் தமிழ்நாட்டில் மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பைவாய் புற்றுநோயைவிட 50 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதமாக வருடந்தோறும் அதிகரித்து வருகின்றது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொன்னார். (குறுக்கீடு) தயவுசெய்து கடைசியாகப் பதில் சொல்லுங்கள். ஏனென்றால், நான் 2 வரி சொன்னால் நீங்கள் 200 வரிகள் பேசுகிறீர்கள். இதனால், எனது நேரம் எல்லாம் போய்விடும்.

இங்கு மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்கு Digital Mammogram இருக்கின்றது, கர்ப்பப்பைவாய் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கு Pap Smear, Colposcopy இருக்கிறது. நாங்கள் 70 சி.டி. ஸ்கேன் வைத்திருக்கிறோம், 18 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வைத்திருக்கிறோம்; அனைத்து வசதிகளும் உள்ளன; உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை அளிக்கின்ற கதிர்வீச்சுக் கருவிகள், நவீன மருந்துகள், அறுவை சிகிச்சை போன்ற வசதிகள் எல்லாம் ஏற்படுத்தப்படவுள்ளன என்று நீங்கள் கூறலாம். அதை நான் தவறு என்று சொல்ல வரவில்லை. ஆனால், இன்றைக்கு என்ன பிரச்சினை என்றால், உதாரணத்திற்கு தமிழ்நாட்டில் cancer breast 100 பெண்களுக்கு வந்தது என்று சொன்னால், அதில் 30 பேர்தான் குறைந்தபட்சம் 5 வருடங்கள் வாழ்கிறார்கள்.

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [2017 ஜூலை 4

ஆனால், இதுவே நீங்கள் மேலைநாடுகளுக்குச் சென்றீர்கள் என்று சொன்னால், 100 பெண்களுக்கு கேன்சர் வரும்போது, அதில் 75 சதவிகித பெண்கள் 5 வருடங்களுக்குமேல் வாழ்வதோடு, 60 சதவிகிதப் பெண்கள் முழுமையாகக் குணமடைந்துவிடுவார்கள். ஆனால், இங்கு பிரச்சினைக்குக் காரணம், விழிப்புணர்வு இல்லாததுதான், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சரியான சிகிச்சை கொடுக்காததனால்தான். கடந்த அறிவிப்பில் கூறியவாறு, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் மண்டல புற்றுநோய் மையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து Prevention and early detection, அதுதான் நம்முடைய goal ஆக இருக்க வேண்டும். அதை மனதில்கொண்டு இதைத் துரிதப்படுத்த வேண்டும், விரைவில் நிறைவேற்றிட வேண்டும் என்று இவ்வரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–4.5

அடுத்து, தாய்–சேய் நலம். அதைப்பற்றித்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள், இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறோம் என்று. இன்று இந்தியாவிலேயே அதிக அளவு institutional deliveries, அதாவது மருத்துவமனையில் பெண்கள் பிரசவம் செய்துகொள்கிறார்கள் என்றால், அதற்கு அடிப்படை அடித்தளமிட்டது டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்; இது டாக்டர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை அழுத்தந்திருத்தமாக இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரத்தோடு பேசுகிறேன். உங்கள் ஆட்சியில் 2001 முதல் 2006 வரையில் institutional deliveries 85.6 சதவிகிதத்திலிருந்து 95.6 சதவிகிதமாக அதிகரித்தது. தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2011 வரையில் 95.6 சதவிகிதத்திலிருந்து 99.8 சதவிகிதமாக இருந்தது. கிட்டத்தட்ட 100 சதவிகிதத்தை 2011–ல் நாங்கள் உங்களுக்கு அழகாக ஒரு தளத்தை அமைத்துக் கொடுத்துவிட்டுச் சென்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் maximum benefit தாய்–சேய் நலத்திற்காக மருத்துவமனைக்கு வருகிறார்கள் என்றால் அதற்கும் அடித்தளமிட்டது டாக்டர் கலைஞர் ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆதாரத்தோடு பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு தாய்–சேய் நல சிகிச்சையில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுவிட்டது. இதை நான்

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

சொல்லவில்லை, Fourth National Family Health Survey சொல்கிறது. இன்றைக்கு நீங்கள் கொடுத்த புத்தகத்தில்தான் பார்த்தேன்; கர்ப்பிணிகள் மரண விழுக்காடு, ஒரு இலட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 62 ஆகக் குறைந்துள்ளது. குழந்தை இறப்பு விகிதம் 2015 மாதிரிப் பதிவு முறை புள்ளிவிவரப்படி 1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 19 ஆகக் குறைந்துள்ளது என்று சொல்கிறீர்கள். ஆனால், Fifth Five Year Plan–ன்படி, 2012 முதல் 2017 வரையில் அவர்களால் வரையறுக்கப்பட்ட இலக்கை நீங்கள் அடையவில்லை என்பதுதான் உண்மை. ஏன் என்றால் அதில், 44/10000. MMR இருத்தல் வேண்டும் என்றும், ஒரு வயதிற்கு உட்பட்ட மரண விழுக்காடு 13/1000 என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கேட்டதற்கு அமைச்சர் விளக்கம் தருகிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: ஒரே ஒரு கேள்விதான். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் உறுப்பினரிடம் ஒரு கேள்வி கேட்டேன். சுகாதாரத் துறைக்கு மிகச் சிறப்பாக அடித்தளமிட்டது உங்களுடைய தலைவர் என்று உறுப்பினர் கூறியபோது, அவை என்னென்ன திட்டங்கள் என்பதைச் சொல்லுங்கள் என்று கேட்டேன். அப்பொழுது உறுப்பினர் சொல்லவில்லை. இப்பொழுது தாய்–சேய் நலத்தில் ஒன்றே ஒன்று சொல்லியிருக்கிறீர்கள்; டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம். நான் உங்களிடம் கேட்கிறேன், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தில், institutional delivery–ல் இந்தியாவிலேயே 99 சதவிகிதமாக இருக்கக்கூடியது, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு வழிநடத்தக்கூடிய தமிழ்நாடு அரசில்தான். அதிலும் நான் குறிப்பாகச் சொல்கிறேன். உங்கள் ஆட்சியில் மேற்படி திட்டத்தின்கீழ் 6,000 ரூபாய் கொடுத்த காரணத்தினால்தான் institutional delivery, தாய்–சேய் நலம் increase ஆகியிருக்கிறது என்று உறுப்பினர் சொல்கிற வாதத்தின்படி வைத்துக்கொண்டால்கூட, 6,000 ரூபாயை 12,000 ரூபாயாக உயர்த்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் institutional delivery எந்த அளவுக்கு increase ஆகியிருக்கும்? (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

பதவியேற்றவுடன், கையெழுத்திட்ட முதல் ஐந்து கோப்புகளில் ஒன்றுதான், மேற்படி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த 12,000 ரூபாயை 18,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கும் கோப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி increase ஆகாமலிருக்கும்? 100 சதவிகிதம் தாய்–சேய் நலத்திலே மிகச் சிறப்பாக விளங்கி வருகிறது தமிழ்நாடு மாநிலம். இதை உலக சுகாதார நிறுவனம் பாராட்டியிருக்கிறது, மத்திய அரசும் பாராட்டியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தாய்–சேய் நலத்திற்காக நீங்கள் 6,000 ரூபாய் மட்டும்தான் கொடுத்தீர்கள். இன்றைக்கு delivery–ன்போது, birth companion, பிரசவத்தின்போது ஒரு பெண்ணுக்கு இன்னொருவர் உடனிருக்கலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தைக் கொடுத்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு Tier II Cities–ல் Centre of Excellence for Maternal Service என்பது உருவாக்கப்பட்டிருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில். இப்பொழுதுகூட மதுரையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 40 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட Centre of Excellence for Maternal Service–ஐ திறந்து வைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் உங்கள் ஆட்சியில், Infant Mortality Rate, Maternal Mortality Ratio–ஐ எடுத்து அதன் census–ஐ பாருங்கள். உங்கள் ஆட்சியில் எந்த அளவில் இருந்தது, இன்றைக்கு எந்த அளவிற்குக் குறைத்திருக்கிறோம் என்பதை நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான குறிப்புகளை நான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கர்ப்பிணிப் பெண்களின் மரண விழுக்காடு, 2006 முதல் 2011 வரை drop was by 16 points. 16 புள்ளிகள் மரண விழுக்காடு குறைந்தது.

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

ஆனால், உங்கள் ஆட்சிக் காலத்தில் 14. அதேபோல் Infant Mortality Rate, குழந்தைகள் மரணத்தை எடுத்துக்கொண்டால் எங்களுடைய ஆட்சியில் 37–லிருந்து 22–க்குக் குறைத்தோம்; 15 புள்ளிகள் குறைத்தோம். நீங்கள் 22–லிருந்து 16 எனக் குறைத்துள்ளீர்கள். 6 புள்ளிகள்தான் குறைத்துள்ளீர்கள். எல்லாவற்றிற்கும் அடித்தளமிட்டது டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் இங்கே மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரிடம் மீண்டும், மீண்டும் ஒரே ஒரு கேள்வி. எல்லாவற்றிற்கும் அடித்தளமிட்டார்கள் என்றால் எதற்கெல்லாம் அடித்தளமிட்டார்கள்? நீங்கள் திட்டங்களை விளக்க வேண்டும். நான் சொல்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். உட்கார்ந்துகொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைதியாக இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாய்–சேய் நலத்தை அரசு எப்படி பேணிக் காக்கின்றது? இன்றைக்கு ஒரு கிராமத்தில் கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஒரு பெண்ணிற்கு பிரசவ வலி என்று சொன்னால்கூட, உடனே 108 ஆம்புலன்ஸ்-ஐ அனுப்பி, அந்தப் பெண்ணை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். அழைத்து வருவது மட்டுமல்ல, உங்களுக்குத் தெரியும், EDD–Expected Delivery Date, என்றைக்கு அந்தப் பெண்ணிற்கு குழந்தை பிறக்கப்போகிறது என்று மருத்துவர்கள் தேதியை குறிப்பிட்டிருக்கிறார்களோ, 108 ஆம்புலன்ஸிலிருந்து அந்தப் பெண்ணிற்கு தொலைபேசிமூலம் call செய்து, அம்மா அடுத்த மாதம் 7 ஆம் தேதி வயிற்று வலி வரும், இடுப்பு வலி வரும்,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

அப்போது நீங்கள் உடனடியாக எங்கேயும் போக வேண்டாம், 108 ஆம்புலன்ஸ்–க்கு நீங்கள் call செய்யுங்கள் என்று remindசெய்கிறோம். அப்படி அவரிடம் remind செய்தவுடன், 108 ஆம்புலன்ஸ்மூலம் நாங்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு வந்து, சுகப்பிரசவம் செய்து, high risk pregnancy–ஐ monitor செய்து, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்மூலம், 12,000 ரூபாய் தொகையைக் கொடுத்து, Amma Baby Care Kit–ஐயும் கொடுத்து, after immunization ரூ.4,000/–ஐ கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் தாண்டி இப்பொழுது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தாயும்–சேயையும் வீட்டிலே கொண்டுபோய் விடக்கூடிய drop back facility–ஐயும் கொடுத்துள்ளோம். இவ்வளவு திட்டங்களையும் கொடுத்ததனால், இன்றைக்கு தாய்–சேய் நலம் இந்திய அளவில் தமிழ்நாட்டில் பிரதானமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள், எந்தத் திட்டத்தை நீங்கள் கொடுத்தீர்கள் என்பதை எனக்குச் சொல்லுங்கள். அவ்வளவுதானே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசியே முடிக்கவில்லை. திட்டத்தைச் சொல்லுங்கள், சொல்லுங்கள் என்றால் எப்படி? நான் பத்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) I have been allotted 40 minutes. ஆகவே, தயவுசெய்து, நான் பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள் என்றுதான் கூறுகிறேன். Please don't jump the gun.

Immunization Programme, தடுப்பு ஊசித் திட்டம். இதுவும் National Family Health Survey–ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வார், newspaper–ல் படிப்பதையெல்லாம் இங்கு வந்து பேசாதீர்கள் என்று. அதை நாங்கள் நம்ப மாட்டோம் என்று சொல்வதனால், எல்லாவற்றையும், சட்டப்பூர்வமாக, ஒழுங்காகப் பார்த்து, ஆய்வினைப் பார்த்து கொண்டு வந்திருக்கிறேன்.

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

கடந்த 2016 ஆம் ஆண்டில், immunization, தடுப்பு ஊசியைப் பெறுபவர்களின் எண்ணிக்கை பத்து சதவீதமாகக் குறைந்திருக்கிறது. நேரமில்லை என்ற காரணத்தினால், அதற்குள் நான் போக விரும்பவில்லை. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தினை நாங்கள்தான் தொடங்கினோம். எந்த ஒரு புதுத் திட்டமாக இருந்தாலும், ஒரு pilot test பண்ணி படிப்படியாகத் தான் அதனை நிறைவேற்றுவார்கள். யார் வந்தாலும், போனாலும், நிருவாகம் நடந்து கொண்டேதான் இருக்க வேண்டும். அதுதான் உலக நியதி. அதனை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தினை நாங்கள் கொண்டுவரும்போது, முதல் நான்கு வருடத்தில், நாங்கள் எங்கள் இலக்கை அடைந்து விட்டோம். கடைசி வருடம், அந்த election period–ல் மட்டும்தான் இரண்டு கோடி ரூபாய் deficit–ஆனது. அதனால், நாங்கள் இலக்கை அடையவில்லை. ஆனால், 2011–ல் 666 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 144 கோடி ரூபாயை நீங்கள் செலவு செய்யவில்லை. அதே நிலைதான் 2012–2014 வரைக்கும். இப்போது நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், 716 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை இப்போது 667 கோடி ரூபாயாக நீங்கள் குறைத்துள்ளீர்கள். அது ஏன் என்று கேட்கிறேன்? (குறுக்கீடு) குடும்பக் கட்டுப்பாடு சப்ஜெக்ட்டை மட்டும் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பெண்கள் நலத்தைப் பற்றி பேசும்போது, கொள்கை விளக்கக் குறிப்பில் மூன்று முக்கிய காரணங்களைச் சொல்லியுள்ளீர்கள். ஏன் பெண்கள் மரணம் அடைகிறார்கள் என்பதைப் பற்றி தெரிவித்துள்ளீர்கள். ஒன்று சுகாதாரமற்ற கருக் கலைப்பு–unsafe termination, இரத்தப் போக்கு மற்றும் இரத்த சோகை. இதில் குடும்பக் கட்டுப்பாடு கொள்கையைப் பார்த்தவுடன், மிக மிக அதிர்ச்சியாகவும், வேதனையாகவும், ஒரு பெண்ணாக அந்த உணர்வு எனக்குத் தோன்றியது. 2016 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட, approximately 2.72 இலட்சம் பெண்கள் இன்றைக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். கருத்தடை வளையம், கிட்டத்தட்ட 3.87 இலட்சம் பேர். வாய் வழி கருத்தடை மாத்திரை

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [2017 ஜூலை 4

57, மொத்தம் கிட்டத்தட்ட 7,17,550 பேர். ஆனால், ஆண்கள், ஒரு சதவீதம்தான். Condom பயன்படுத்துகிறவர்கள் 91,075; 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 வரைக்கும் மொத்தம் 4,800 ஆண்கள்தான் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையை செய்திருக்கிறார்கள். அதில் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதுபோல், ஆண்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அவர்களுக்குத் தருகின்ற பணம் 1,100 ரூபாய். பெண்களுக்கு, அவர்கள் எந்தச் சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்பதைப் பார்த்து ரூ.250/–லிருந்து ரூ.600/– வரைக்கும் கொடுக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம்? தயவுசெய்து, எந்த அளவுக்கு ஆண்களுக்குப் பணம் கொடுக்கிறீர்களோ, அதைப் பெண்களுக்கும் கொடுக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டு விதிகளை எந்த அளவுக்குப் பெண்கள் பயன்படுத்துகிறார்களோ, அதை ஆண்களும் பயன்படுத்த வேண்டும். அதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்திட வேண்டும். (குறுக்கீடு) அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். பரவாயில்லை 25,000 ரூபாய் கூட ஆண்களுக்குக் கொடுங்கள். (குறுக்கீடு) ஆகவே, தயவுசெய்து ஆண்களை அதைப் பயன்படுத்த சொல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் நல்ன கருதி நான் சுருக்கமாகவே பதில் சொல்கிறேன். இப்போது ஆண்களுக்கான கருத்தடை procedure என்பது one day procedure. கீழ்ப்பாக்கம் மெடிக்கல் காலேஜில் பார்த்தீர்கள் என்றால், bloodless procedure, one day procedure ஆக செய்து கொண்டிருக்கிறோம். இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், இது அவரவர்கள் விருப்பம். இருந்தாலும் அரசு ஆண், பெண் எல்லோருக்கும் option–ஐக் கொடுத்திருக்கிறது. Bloodless procedure–ஐ நாம் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றோம். அதையும் அரசு ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். அதையொட்டி தாய்–சேய்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நலத் திட்டத்தைப் பற்றியும் சொன்னீர்கள். அதில் தொகையைக் குறைத்துள்ளதாகச் சொன்னீர்கள். 2006–2011 வரைக்கும் ரூபாய் 6,000 கொடுத்தீர்கள். 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து நீங்கள் செலவிட்ட மொத்தத் தொகை 1,452 கோடி ரூபாய். இன்றைக்கு 12 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செலவிட்ட தொகை 3,696 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, பயனாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், 26 இலட்சத்து 81,000 பேருக்கு நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். நாங்கள் 39 இலட்சத்து 57,000 பேருக்கு வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நிதியும் அதிகரித்திருக்கிறது, பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது, பிரசவங்களும் அதிகரித்திருக்கின்றன. இப்போது 18,000 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம். அதனால் எந்தச் சூழ்நிலையிலும் தாய்–சேய் நலத்திலேயோ அல்லது நீங்கள் சொல்லக்கூடிய கேன்சர் நிகழ்விலோ, மற்ற எந்தவிதத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அத்தனை sector–லும் முழுக் கவனம் செலுத்தி, துறையை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** எங்கள் ஆட்சியிலும் உங்கள் ஆட்சியிலும் செலவு செய்ததற்கு வித்தியாசம் இருக்கிறது. ரூ.1,000/–, ரூ.3,000/– தான். அப்போது இருந்த வருமானம் என்ன? இப்போது உங்கள் ஆட்சியில் என்ன வருமானம்? (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நீங்கள் வாங்கியிருந்த கடன் எவ்வளவு? நாங்கள் எவ்வளவு கடன் வாங்கியிருந்தோம், நீங்கள் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், அதையும் சேர்த்து நீங்கள் சொன்னீர்களென்றால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, நீங்கள் பேச ஆரம்பித்து 31 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் வேறு subject–க்கு move பண்ண வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

[*2017 ஜூலை 4*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வாசகத்திற்கேற்ப, சாமானியனுக்கும் தரமான மருத்துவ வசதி வழங்கிட டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த முத்தான, சத்தான 3 திட்டங்கள் வருமுன் காப்போம், 108 அவசர சிகிச்சை ஊர்தி சேவை, கலைஞர் காப்பீட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) 108 அவசர சிகிச்சை ஊர்தி சேவை செப்டம்பர் 15, 2008–ல் தமிழகத்தில் தொடங்கியது. இன்றைக்கு 840 ஊர்திகள் இருக்கின்றன. சிறப்பாக குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் 65 ஊர்திகள் இருக்கின்றன. ஆனால், ஒருசில கருத்துகளை தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். எனக்கு ஏற்பட்டதுபோல் இனிமேல் யாருக்கும் ஏற்படக் கூடாது என்ற வகையில் ஒரு சிறிய விவரத்தை மட்டும் இங்கு சொல்ல நான் விரும்புகின்றேன். 6 மாதங்களுக்கு முன்பு எங்கள் வீட்டில் ஒரு விபத்து நடந்தபோது அங்கே ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. வந்தபிறகு பார்த்தால், ஆக்சிஜன் சிலிண்டர் காலியாக இருந்தது. அதற்குப்பிறகு அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போனால், 'அடி பலமாக பட்டிருக்கிறது, நீங்கள் தலைமை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போங்கள்' என்று சொன்னதால், அங்கிருந்து அழைத்துக் கொண்டு போவதற்குள் 2 மணி நேரம் ஆகி, வழியிலேயே அந்த நபர் இறந்துவிட்டார். நான் யாரையும் குறை சொல்லவில்லை. I am not trying to expect sympathy. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இந்த ஊர்தி சேவை மிகவும் முக்கியமான ஒரு சேவை. Equipments எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் நிறைய போட்டிருக்கிறீர்கள், இத்தனை இலட்சம் பேர் பயன்பெற்றார்கள் என்ற விவரம் எல்லாம் இருக்கிறது, ஆனால், ஒரு audit வையுங்கள். இந்த ஆம்புலன்சில் போகும்போது மரணமடைகிறார்கள் அல்லவா, அவர்கள் எத்தனை பேர், ஏன் மரணமடைந்தார்கள் என்ற விவரத்தை நீங்கள் தெளிவாக எதிர்காலத்தில் விளக்க வேண்டும்.

அடுத்து, 108 ஆம்புலன்சில் இன்னொரு பிரச்சினைக்குரிய விஷயம் என்னவென்றால், கலைஞர் ஆட்சியில் யார் போன் பண்ணினாலும், எதற்கு போன் பண்ணினாலும், எங்கிருந்து போன் பண்ணினாலும், உடனே மனிதநேயமுள்ள தலைவர் எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் அந்த ஆம்புலன்ஸ்

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

போகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவருக்கு அவசரமாக உடல்நிலை நன்றாக இல்லாமல் போனால், பக்கத்தில் ஒரு தனியார் மருத்துவமனைக்குப் போகிறார்கள். அங்கு ஓர் அடிப்படை சிகிச்சை செய்தவுடனே, ஏழை எளியவராக இருந்தால் நீங்கள் தலைமை மருத்துவமனைக்குப் போங்கள், இது இதயப் பிரச்சினை என்று சொன்னார்கள் என்றால், 108–க்கு போன் பண்ணினால், இல்லை, எங்களுக்கு ஒரு order கொடுத்திருக்கிறார்கள், தனியார் மருத்துவமனையில், empanel செய்யாத மருத்துவமனைகளுக்கு நாங்கள் வந்து அழைத்துச் செல்ல முடியாது என்று சொல்வதால் அது பெரிய பிரச்சினையாகி, சில சமயம் நோயாளிகளை வெளியில் கூட்டிக் கொண்டு வந்து நிற்க வைத்துவிடுகிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு இதிலே rules and regulations பார்க்க வேண்டியதில்லை; இது ஒரு மனிதநேயமிக்க விஷயம். இதையெல்லாம் நீங்கள் தயவுசெய்து களைந்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

2009–ல் தமிழகத்தில் மருத்துவச் சேவையை உலகத் தரத்திற்கு எடுத்துச் சென்றிட கொண்டுவரப்பட்ட டாக்டர் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் இன்று நிறுத்தப்படாமல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாக மாறி இருக்கிறது. ஆனால், இன்றைக்கு 8 high end procedures போட்டிருக்கிறீர்கள். அதில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, kidney, liver, bone marrow transplantation போட்டிருக்கிறீர்கள். பிறகு உட்காது கருவி அமைப்பதற்குப் போட்டிருக்கிறீர்கள். தமிழகத்தில் மூளைச் சாவு அடைந்தவர்கள், இறந்தவர்கள் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் என்பது டாக்டர் கலைஞர் அவர்களால் 16–9–2008 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வருடாவருடம் நீங்கள் டெல்லிக்குப் போய் cup வாங்கிக் கொண்டு வருகிறீர்களே, அது டாக்டர் கலைஞர் அவர்களால் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னோடு விவாதம் செய்வதற்குத் தயாராக இருந்தால் எல்லாவற்றிற்கும்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

நான் விளக்கமளிக்கிறேன். 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை இந்தியாவிலேயே தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) சத்தம் போடக் கூடாது. விவாதம் செய்ய வேண்டும். என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. நீங்கள் சத்தம் போடுவதால் பிரயோஜனம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் நீங்கள் வருமுன் காப்போம் திட்டத்தைப் பற்றிச் சொன்னீர்கள். வருமுன் காப்போம் என்ற திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள்; அந்தப் பயனாளிகளுடைய எண்ணிக்கை குறித்த விவரம் தற்போது என்னிடத்தில் இருக்கிறது. அது medical camp நடத்தி, எத்தனை beneficiaries என்று பார்ப்பதாகும். அதாவது நீங்கள் ஆரம்ப சுகாதார நிலையம் கேட்கிறீர்கள். ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமல்ல, 416 Hospital on Wheels எனச் சொல்லப்படும் நடமாடும் மருத்துவக் குழு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஒன்றியத்திற்கு ஒரு Hospital on Wheels இருக்கிறது. கடந்த ஆண்டு மட்டும் 1 கோடியே 63 இலட்சம் பேர் இதில் பயனடைந்திருக்கிறார்கள். நீங்கள் புள்ளிவிவரம் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறீர்கள்.

108 ஆம்புலன்ஸ் பற்றி நீங்கள் சொன்னீர்கள். 108 ஆம்புலன்ஸ்–ஐப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், neo–natal ambulance–ஐ increase செய்திருக்கிறோம். அதைத் தவிர, நீங்கள் கூறிய சில சேவைகள், குறிப்பாக private hospitals–ல், we have inter facility transfer. அதாவது, ஓர் அரசு மருத்துவமனையிலிருந்து மற்றொரு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு விபத்து நடந்தவுடன், ஒரு patient–ஐ pickup செய்து, ஏன் தனியார் மருத்துவமனைக்குச் செல்வதில்லை என்று சொன்னால், இதில் தவறு நடப்பதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றன. இன்றைக்கு இந்திய அளவில், national average 17 minutes. இன்றைக்கு நாம் rural–ல் 15 minutes maintain செய்கிறோம், Metro–வில் 11 minutes maintain செய்கிறோம். இன்னும்கூட ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

கூறியது போன்று, time saving. ஒரு விபத்து. . . (குறுக்கீடு) ஒரு நிமிடம் நான் பேசி முடித்தவுடன் பேசுங்கள். முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் விளக்கம் கேட்டால், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த 108–க்கு நாம் phone பண்ணியவுடன், இனிமேல் நான் எந்த இடத்திலிருந்து பேசுகிறேன், எப்படி விபத்து நடந்தது, எந்த தாலுகா, எந்த மாவட்டம் என்றெல்லாம் சொல்ல வேண்டிய நிலை இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாக ஒரு app–ஐ develop செய்திருக்கிறோம். எல்லா 108 ஆம்புலன்ஸ்களிலும் G.P.S. போட்டிருக்கிறோம், இனிமேல், விபத்து நடந்தவுடன், ஒருவர் android phone–லிருந்து உடனே 108 centre–க்கு call செய்தால், உடனே, அவருடைய பெயர், இருக்கக்கூடிய location அனைத்தும் system–ல் வந்துவிடும். இன்னும் சொல்லப்போனால், என்ன விபத்து, எத்தனை பேர் அடிபட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை மட்டும் சொன்னால் போதும். அந்த அளவிற்கு இன்றைக்கு இந்தச் சேவையை மிகச் சிறப்பாக செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தவிர G.P.S. கருவி இருக்கின்ற காரணத்தால், நம்முடைய driver–ம் அந்த இடத்திற்குப் போய்விடலாம். தற்போது, உங்களிடம் ஒரேயொரு விஷயத்தை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில் நான் கடந்த முறையும் குறிப்பிட்டேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2002 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, அப்போது நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போது பரீட்சார்த்த முறையில் தேனி மாவட்டத்திற்கு 2 ambulance கொடுத்தார்கள், மீண்டும் தேனி மாவட்டத்திற்கு 3 ambulance கொடுத்தார்கள். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலமாக 15 மாவட்டங்களுக்கு 187 ambulance–ஐ வாங்கி 29–8–2005 அன்று (மேசையைத் தட்டும் ஒலி) 14 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, 1½ ஆண்டு காலம் N.G.O. மூலமாக இந்த ambulance திட்டம் நடத்தப்பட்டது. என்னிடம் G.O. number இருக்கிறது, copy இருக்கிறது. முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பிறகு பேசட்டும். திரும்பவும் 2006–ல், ஆட்சி முடிவதற்கு முன்பாக, திரும்பவும் 29 மாவட்டங்களில் 24x7 centres அமைத்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. நாங்கள் அப்போது 1056 என்ற நம்பரைக் கொடுத்து, ambulance–ஐக் கொடுத்து, 29 மாவட்டங்களில் இந்த ambulance சேவை நடத்தப்பட்டது. நீங்கள் வந்ததற்குப் பிறகு, ஆட்சி

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்தீர்களென்றால், All India level–ல், ஒரே நம்பராக இருக்க வேண்டுமென்பதற்காக 4 digit number–ல் ஒன்றைக் குறைத்து 3 digit number–ஆக மாற்றி, 108 என்று பெயரை மாற்றி, பெயர் சூட்டிக்கொண்ட வேலையை மட்டும்தான் நீங்கள் பார்த்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. G.O. number இருக்கிறது, நிதி ஒதுக்கப்பட்டதற்கான ஆதாரம் இருக்கிறது. எல்லோருக்கும் நான் ஒரு copy தருகிறேன். இதுகுறித்து எங்கு வேண்டுமானாலும் நான் விவாதம் நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றேன். Ambulance சேவையை இந்தியாவிலேயே தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 4 number–ஐ 3 number ஆக மாற்றியது மட்டும்தான் நீங்கள். விவாதம் செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Ambulance ஒரு equipment தான். அந்த எண்ணத்தை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா விஷயத்திலும், matching grant என்ற ஒன்று இருக்கிறது. நிறைய திட்டங்கள், முக்கியமாக சமூக நலத் துறையாகட்டும், மக்கள் நல்வாழ்வுத் துறையாகட்டும் matching grant இருக்கிறது. நாம் 60 ரூபாய் கொடுத்தால், அவர்கள் 40 ரூபாய் கொடுப்பார்கள். அப்படித்தான் நாம் வாங்குவோம். அது உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். இத்துடன் இதனை விட்டுவிட்டு, நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இத்தோடு நீங்கள் விட்டாலும் நான் விடுவதாக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ambulance திட்டத்தைப் பொறுத்தவரையில், எண்ணம், ஆக்கம், சிந்தனை, செயல், உருவாக்கம், நிதி ஒதுக்கீடு என அத்தனையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அவர்களுடைய ஆட்சியில்தான் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதில் உரிமை கொண்டாடுவதற்கு வழிவகை இல்லை. அதேபோன்று, வெளியிலேயிருந்து ஒருவர் அறிக்கை கொடுப்பார். இதிலே உரிமை கொண்டாடுவதற்கு, அந்த முன்னாள் மத்திய அமைச்சருக்கும் எந்தவிதமான வழிவகையும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: திரும்பத் திரும்ப உண்மைக்கு மாறாகப் பேசினால், அது உண்மையாகிவிடாது.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பூங்கோதை, உங்கள் நேரம்தான் வீணாகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், என்னவென்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்ப திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடாது. நான்தான் ஐதராபாத் சத்யம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தில் போய்ப் பார்த்து வாங்கி அவற்றையெல்லாம் தயார் செய்தேன். அப்போது திரு. சுப்புராஜ் அவர்கள் அரசுச் செயலாளராக இருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் உத்தரவின் பேரிலே, நாங்கள் இரண்டுபேரும் போய்தான் இத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டோம். எங்களுடைய அரசாங்கம் வந்த பிறகுதான் ஆரம்பித்திருக்கிறோமேயொழிய அதற்கு முன்பு நீங்கள் ஒன்றும் செய்யவேயில்லை. நாங்கள் தெரிந்துகொண்டு, தலைவரிடம் சொல்லும்போது, தலைவர் அவர்கள் பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொல்லி, நாங்கள் ஐதராபாத் போய்ப் பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகுதான் நடைமுறைக்கு வந்ததேயொழிய உங்கள் காலத்திலே வரவில்லை. அதற்கு வேண்டிய அடிப்படை வேலை எதையும் நீங்கள் பார்க்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூலை 4

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பதிய வைக்கின்ற அத்தனை கருத்துகளுக்கும் 100 சதவீதம் நான் முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் ஐதராபாத் சென்று, சத்யம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு எந்தத் தேதியிலே போனீர்கள் என்பது உள்ளிட்ட அத்தனை விவரங்களும் என்னிடத்திலே இருக்கின்றன. நீங்கள் ஐதராபாத்திற்குப் போனது 2006–க்குப் பிறகு; நீங்கள் போன தேதி வரை நான் வைத்திருக்கிறேன். ஆனால், நான் சொல்வது 2005 ஆம் ஆண்டிலே, 29–8–2005 அன்று எங்கள் ஆட்சியில், ஒரு வட்டாரத்திற்கு ஓர் ஆம்புலன்ஸ் வீதம் 187 வட்டாரங்களுக்கு வாகனத்தை வாங்கிக் கொடுத்து, 17 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிலே தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேஷன் சார்பிலே என்.ஜி.ஓ.–க்கு 187 ஆம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு என்.ஜி.ஓ.–க்கு வழங்கப்பட்டு, திட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது மாவட்ட அளவிலே ஒரு சென்டர் இருந்தது. அதற்குப் பின்னாலே நீங்கள் மாநில அளவிலே ஒரேயொரு சென்டர் கொண்டு வருவதற்காக ஐதராபாத் போய் GVK EMRI–யிடம் வாங்கப்பட்டு, இப்போது 108–ஆக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆக திட்டத்தினுடைய எண்ணம், செயல், சிந்தனை, உருவாக்கம் அத்தனையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடையது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அரசாணை நகலைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பூங்கோதை, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகின்றார். நீங்கள் என்ன பரிந்துரை செய்கின்றீர்கள்? மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்கின்றார். (குறுக்கீடு) உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைப்பதால் நான் அதற்குள் போகவில்லை. ஆனால், நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

அதேபோல், உட்காதில் காது கேட்கும் கருவியைப் பொருத்துகின்ற cochlear implantation திட்டத்தைக் கொண்டு வந்தது டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பூங்கோதை, நீங்கள் நல்லபடியாக யோசனை சொல்லி பேச்சை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) Comparative statement சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எப்படி வாதம் இல்லாமல் முடியும்?

டாக்டர் (திருமதி) பூங்கோதை: இரண்டே இரண்டு பாயின்ட்தான். High–end procedures கொண்டு வந்திருக்கிறீர்கள். உயர்தர சிகிச்சை, அதிலே stem cell therapy என்று வைத்திருக்கிறீர்கள். Stem cell therapy என்பது இன்று உலக அளவில் அங்கீகரிக்கப்படாத ஆராய்ச்சி நிலையில் உள்ள ஒரு திட்டம். அந்தத் திட்டத்தில் 11 பயனாளிகள். அதை எதற்காகப் பயன்படுத்தினீர்கள், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தீர்கள்? It is against medical ethics.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் விளக்கம் சொல்ல வேண்டுமல்லவா?

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். ஒரு மருத்துவ சிகிச்சைக்கு வேண்டிய முக்கியமான இரண்டு கொள்கைகள், medical ethics, evidence based medicine. அதாவது, நெறி தவறாமல் சிகிச்சை பெற வேண்டும், ஆதாரம் இல்லாமல் மருத்துவர்கள் எந்த சிகிச்சையையும் அளிக்கக்கூடாது. உலகம் முழுவதும் எங்குமே stem cell therapy முழுமையாக அங்கீகரிக்கப்படாதபொழுது அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்கான உள் காரணம் என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது தேவையற்றது. அந்தப் பணத்தை மருத்துவக் கல்விக்கு செலவு செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஒரேயொரு கருத்தைச் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். மொத்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஒரு கருத்துடன் உரையை முடித்துவிடுகிறீர்களா?

டாக்டர் (திருமதி) பூங்கோதை: ஒரு நாட்டிற்கு அத்தியாவசியமானது 3 வளங்கள். இயற்கை வளம், மக்கள் வளம், அறிவு வளம். தமிழகத்தில் தாமிரபரணி ஆறு ஒன்றுதான் தமிழ்நாட்டிலேயே தொடங்கி தமிழ்நாட்டிலேயே முடிகின்றது. கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களைப் பாசன

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [*2017 ஜூலை 4*

நீருக்காகவும், குடிநீருக்காகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, தொலைநோக்கு சிந்தனையாளர், தீர்க்கதரிசி, இயற்கையை வெல்ல, மக்கள் வளம் வாயிலாக அறிவு வளத்தைப் பெருக்க, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைத்திட வேண்டுமென்ற அரசாணையைப் பிறப்பித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது தமிழ்நாட்டிலே 22 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அதில் 2 ஆங்கிலேயர் ஆட்சியிலும், 6 காங்கிரஸ் ஆட்சியிலும், 5 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், 12 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் தொடங்கப்பட்டு, அதில் 9 கல்லூரிகள் அரசாணை பெற்று முழுமையாக நிறைவேற்றப்பட்டன. 3 கல்லூரிகளுக்கு அரசாணை வெளியிட்ட நிலையில் ஆட்சி மாற்றத்தினால் அடுத்த கட்டத்திற்கு நாங்கள் எடுத்துச் செல்ல இயலவில்லை.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் தமிழக மக்களின் வியர்வையில், உழைப்பில், வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட நம் மாநிலத்து மருத்துவ அறிவுக் களஞ்சியங்கள், இங்கு யார் படிக்க வேண்டுமென்ற உரிமையை NEET தேர்வு வாயிலாக மத்திய அரசு தட்டிப் பறித்துவிட்டது என்பதுதான் நிதர்சனமான உண்மை. NEET தேர்வைப் பற்றி எங்கள் கழகச் செயல் தலைவர் மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில உரிமை எவ்வாறு பாதிக்கப்படுகிறது; எவ்வாறு சமூக நீதி பாதிக்கப்படுகிறது என்றெல்லாம் கூறினார்கள்.

ஒரு நோயாளிக்கு ஒரு மருத்துவர்மீது நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்றால், அதற்கு அடிப்படைத் தேவை சிறப்பான தகவல் பரிமாற்றம்; மனிதநேயமிக்க ஒரு தகவல் பரிமாற்றம்; effective communication. அதற்கு அடிப்படைத் தேவை மொழி. அதனால்தான், இன்றைக்கு நீங்கள் ரஷ்யாவிற்குச் சென்று M.B.B.S. படித்தீர்களென்றால், முதல் ஒரு வருடம், நீங்கள் கண்டிப்பாக ரஷ்ய மொழியைப் படித்தே ஆக வேண்டும். அதேபோன்று, நீங்கள் அமெரிக்காவுக்குச் சென்றீர்களென்றால், இங்கிலாந்துக்குச் சென்றீர்களென்றால், எந்த நாட்டிற்குச் சென்றீர்களென்றாலும், அந்த நாட்டின் மொழித் தேர்வை எழுதி, அதில் தேர்ச்சி பெற்ற பிறகுதான், அந்தப் பயிற்சி நிலையத்திற்குள்ளேயே நீங்கள் செல்ல

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

முடியும். அந்த மருத்துவமனைக்குள்ளேயே நீங்கள் காலை வைக்க முடியும். இன்றைக்கு இந்தியாவினுடைய அழகே பல மொழிகள், பல மாநிலங்கள் என்பதுதான். அதனால்தான், நமது முன்னோர்கள், நம்முடைய முந்தைய தலைவர்கள் இதையெல்லாம் State Subject–ல் வைத்திருந்தார்கள். ஆனால், இன்றைய மத்திய அரசு ஓர் ஒற்றைக் கலாச்சாரத்தை நுழைக்க முயல்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் பார்த்தீர்களென்றால், நமக்கு தமிழும், ஆங்கிலமும் தவிர வேறு எதுவும் தெரியாது. அதுகூட நகர்ப்புறங்களில்தான். நீங்கள் கர்நாடகா போகலாம், மகாராஷ்டிரா போகலாம். அவர்களுடைய பிராந்திய மொழியோடு, கொஞ்சம் ஹிந்தி தெரியும். அதைவிட்டு, கொஞ்சம் வெளியே கிராமப்புறத்திற்குச் செல்லுங்கள். அவர்களின் பிராந்திய மொழியைத் தவிர வேறு எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ஒடிசாவிலிருந்து வந்த ஒரு பையன், திருநெல்வேலி மாவட்டத்தில் 'இன்றைக்கு காலையில், நீ என்னப்பா சாப்பிட்டாய்; உனக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்துள்ளன' என்று எப்படிச் சொல்லுவான்? நிஜமாக யோசித்துப் பாருங்கள். இது சிந்திக்கக்கூடிய ஒரு விஷயமாகும். இதைப்பற்றியெல்லாம் மத்திய அரசிடம் நீங்கள் அழுத்தத்தைத் தர வேண்டும். இன்னொரு விஷயம் NEET மதிப்பெண்கள். எவ்வாறு ஒரு மருத்துவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், we had a transparent system. நாம் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்ந்தெடுத்தோம். ஆனால், இன்றைக்கு மத்திய அரசு NEET மதிப்பெண்களை மட்டுமே எடுத்துக்கொள்கிறது. NEET marks–ன் அடிப்படையில் மட்டுமே தேர்ந்தெடுப்பதை உலகளவில் எந்த இடத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் ஒரு பையன் இருநூறுக்கு இருநூறு மதிப்பெண்கள் வாங்குகிறான் என்றால் அவன் 6 ஆம் வகுப்பிலிருந்தே நன்றாகப் படித்திருப்பான். நீங்கள் U.K., அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சென்றீர்களென்றால், 9–வது வகுப்பிலிருந்து 12–வது வகுப்புவரை, அதாவது, High School marks வரைக்கும் பார்த்துவிட்டு, ஒரு interview நடத்தி, பல்வேறு நிலைகளைப் பார்த்துவிட்டுத்தான் அனுமதி வழங்குவார்கள். ஆனால், ஓரேயொரு தேர்வை வைத்துக்கொண்டு, வேண்டுமென்றே, நம்முடைய மாநிலத்திலுள்ள மாணவர்களுக்கு இன்று அந்த நிலை மறுதலிக்கப்படுகிறது என்பதை மிகுந்த கவலையோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் என்னை ஒரு மருத்துவராக, ஓர் அரசியல்வாதியாக, சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற அடையாளங்களைவிட, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், நான்காம்

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [*2017 ஜூலை 4*

அத்தியாயமான தளபதி அவர்களுடைய வழியில், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் உயிர்மூச்சுக் கொள்கையான, சமூக நீதியின் அடையாளமாகத்தான் பார்க்கிறேன். இங்குள்ள நாம் அனைவரும், we are all products of the social justice; நாம் எல்லோரும் சமூக நீதியின் வெற்றியின் சின்னங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அது நமக்கு மறுதலிக்கப்படுகிறது. அதுதான் உண்மை. I take great pride in stating that I am a Member of the D.M.K. Party, a product of the Social Justice movement. இந்த உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும், இங்குள்ள ஒவ்வொரு மாமன்ற உறுப்பினர்களுக்கும் இருந்திட வேண்டுமென நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: இரண்டு, மூன்று கோரிக்கைகள்தான். செவிலியர்கள் மற்றும் Physiotherapists சங்கங்கள் சார்பாக இரண்டு, மூன்று கோரிக்கைகளை வைக்கச் சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகளை வைத்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: உங்கள் எல்லோருக்கும் தெரியும், இன்றைக்கு மாறிவரும் நோய் பரிமாணத்தினால் இன்றைக்கு செவிலியர்கள், Physiotherapists போன்றவர்கள் அதிகளவில் தேவைப்படுகின்றனர். இன்றைக்கு செவிலியர்கள் Diplomo–விலிருந்து Ph.D. வரைக்கும் படிக்கின்றனர். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், Medical Services Recruitment Board–M.R.B. போன்று Nursing Recruitment Board ஒன்றை அமைக்க வேண்டுமென்று சொல்கின்றனர். அதேபோன்று Paramedical services–ல் உள்ளவர்கள் எங்களுக்குத் தனியாக ஒரு Directorate அமைக்க வேண்டுமென்று கூறுகின்றனர். அதேபோன்று, Physiotherapists எல்லோரும் அவர்களுக்கு ஒரு Council வேண்டுமென்று சொல்கின்றனர். அதையும் நீங்கள் செய்து தரவேண்டும். VHN nurses–க்கு ஐந்து முறை பிரசவம் பார்த்துவிட்டு, ஒரு சுகப் பிரசவத்தைப் பார்த்தால், அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கிறீர்கள். தயவுசெய்து அதை 500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

இறுதியாக ஒரேயொரு கருத்தோடு என் உரையை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன். டாக்டர் கலைஞர் அவர்கள் கருவிலிருந்து கல்லறை வரை தமிழினத்தை உயர்த்திட, தழைத்திட, பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால், ** என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு இவ்வளவு நேரம் கொடுத்தும், நீங்கள் சரியாகப் பேசி முடிக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: எனது உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லையில்லை, வேண்டாம். நீங்கள் நன்றி சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) அவர்களை இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதித்தும் சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) திரு. பரமசிவம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டாம். அவர்கள் உரையினிடையே நன்றி சொல்லிவிட்டார்கள். நீங்கள் என்ன சொல்லி முடித்தீர்கள்? அப்படிச் சொல்லலாமா? நீங்கள் பேசி முடித்த முறை சரியில்லை. திரு. பரமசிவம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். நீங்கள் பேசுங்கள். அவர்களை சௌகர்யமாகப் பேசவிட்டேன். அவர்கள் எந்தமாதிரி நடந்துகொண்டார்கள் என்பதை நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தொகுதிப் பிரச்சினைகளையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளலாம். 44 நிமிடங்கள் ஆகிவிட்டன.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [*2017 ஜூலை 4*

(குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம்தான். முக்கியக் கோரிக்கைகள் தவிர வேறு எதுவும் பேச வேண்டாம்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. கூட்டுக் குடிநீர்த் திட்டம். பாப்பாக்குடி, கடையம், கீழப்பாவூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எங்கள் அன்பு அண்ணன் செயல் தலைவர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டு அந்தத் திட்டம் இன்னும் நிறைவடையாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கோரிக்கை வைக்கிறீர்களா அல்லது குற்றச்சாட்டு வைக்கப் போகிறீர்களா? நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்?

டாக்டர் (திருமதி) பூங்கோதை: 4 வருடங்களாகிவிட்டன. அதை விரைந்து முடிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: அதேபோல, முக்கூடலில் ஒரு பீடித் தொழிற்சாலை இருக்கிறது, அங்குள்ள ESI hospital தகுந்த பராமரிப்பின்றி இருக்கிறது. அதைத் தமிழக அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்துரு ஏற்கெனவே இருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்திட வேண்டுமென நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெயரளவில் உள்ள ஆலங்குளம் தாலுகா மருத்துவமனையை, உண்மையிலேயே தாலுகா மருத்துவமனையாக மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும். மாராந்தைக்கும் ஓடைமறிச்சானுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தந்திட வேண்டுமென கேட்டு, இம்மாமன்றத்தில் எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைச் சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பற்றி கேட்டார்கள். அதைப்பற்றி எனது பதிலுரையில் விரிவாகச் சொல்கிறேன். High end surgeries பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் எனது பதிலுரையில் விரிவாகப் பதில் சொல்கிறேன். இப்பொழுது நீங்கள் கூறிய ஆலங்குளம் மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 16 posts கொடுத்து, 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் ஒரு கருத்தை மிக அழகாகச் சொன்னீர்கள். இன்றைக்கு NEET–ஐப் பொறுத்தவரையில், திராவிட இயக்கத்தின் வரலாற்றைச் சொல்லி, அந்தப் பாரம்பரியத்தில் வந்திருக்கிறோம், திராவிடக் கட்சிகள்தான் தமிழினத்தின் உணர்வுகளையெல்லாம் புரிந்து கொண்டிருக்கிறது, நமது தமிழ் மாநிலத்தின் உரிமைகளையெல்லாம் நிலைநாட்டுகிறது என்பதுபோல் எங்கேயோ ஆரம்பித்து, எங்கேயோ சென்று முடித்தீர்கள். நீங்கள் பேசும்போது, உலகளவில் இன்றைக்கு யாருமே NEET தேர்வினை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னீர்கள். உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இந்திய அளவில் எல்லா மாநிலங்களும் இந்த NEET தேர்வினை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதற்கு விலக்களிக்க வேண்டுமென்று இந்த நிமிடம்வரை போராடிக் கொண்டிருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நான் விவாதத்திற்காக இதைச் சொல்லவில்லை. இது State Subject, தமிழகத்தினுடைய உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் சொன்ன திராவிட இயக்கத்தின் பாரம்பரியத்தில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா என்று அவர்கள் வழியில் வந்த அம்மாவினுடைய அரசுதான், அந்த உணர்வைப் புரிந்து கொண்டுள்ளது. பெற்றோருடைய உணர்வுகள், மாணவர்களுடைய உணர்வுகள் இவற்றையெல்லாம் புரிந்துகொண்ட காரணத்தினால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு இருக்கின்ற மருத்துவப் படிப்பிற்கான இடங்களில் 85 சதவிகிதத்தை, நமது State Board–ல் Biology படித்த மாணாக்கர்களுக்காக உள் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டு, இதை நீங்கள் உட்பட எல்லோரும்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குன்றனைய புகழ்கொண்ட குணக்குன்றே, முடியரசர்க்கில்லாத செல்வாக்கு எல்லாம் முழுமையுடன் பெற்று விளங்கும் முழு மதியே, கொன்றாலும் நிலைத்திருக்கும் தருமம் என்று குருடர்களுக்கும் எடுத்துரைத்த மறுபிறப்பே, வென்றோரும், வெல்வோரும் இல்லாவகையில், எந்நாளும் ஒளிவீசும் தன்மதியே, (மேசையைத் தட்டும் ஒலி) தென்னாடும் தென்னவரும் உள்ளவரை, மன்னா, உன் திருநாமம் துலங்க வேண்டும்; உன்னாலே உயர்வடைந்த என் போன்றோர் உள்ளங்கள் அதைக் கண்டு மகிழ வேண்டும் என்று போற்றிய மூத்த அரசியல் தலைவரின் பாராட்டு வரிகளுக்கிணங்க வாழ்ந்து, மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த எங்கள் மக்கள் திலகத்திற்கு என் முதல் வணக்கத்தினை சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மூத்த அரசியல் தலைவர், பாராட்டியவர் யார் என்று எதிர் வரிசைக்குத் தெரியும், பாராட்டப்பட்டவர் புகழ் ஊர் உலகம் அறியும்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

அழுகின்ற குழந்தையும் வாய் சிரிக்கும் எங்கள் அம்மா அவர்களின் உரை கேட்டால். எழில் மலர் தனது முகம் விரிக்கும் எம் அம்மா முகம்தனை கண்டுவிட்டால். நாணலைப் போலே வளைந்திருந்தார், தமிழ்நாட்டினைக் காக்கவே நிமிர்ந்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மானம் பெரிதென வாழ்ந்து வந்தார், அம்மா மாந்தமிழ் மரபினைக் காத்து வந்தார். வங்கக் கடலின் ஓரத்திலே அம்மா தென்றலை நுகர்ந்தே உறங்குகின்றார்.

பிற்பகல் 1–20

சிங்கத் தமிழரின் மனங்களிலே எங்கள் செந்தமிழ்ச் செல்வி வாழ்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட இந்தப் பிள்ளைகளின் நல்லாட்சியைக் கண்டிட அவர் மீண்டும் வருவாரோ, மண்ணகமே போற்றும் தம் பிள்ளைகளை வாழ்த்திட

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

அம்மா ஒரு நாள் வருவாரோ (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஏக்கத்தோடு என் தாய் இருக்கும் திசை நோக்கி என் வணக்கத்தினை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே அரசாட்சி செலுத்தி, கண்ணாக நான்காண்டுகளில் கடமையெல்லாம் நிறைவேற்றி, அம்மா எண்ணியதையெல்லாம் முடிக்கவிருக்கும் எளிமையின் பிறப்பிடம், எதார்த்தத்தின் இருப்பிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்திலே மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

உரையின் துவக்கத்திலேயே மக்கள் நல்வாழ்வுத் துறையை தமிழகத்திலேயே முதன்மைத் துறையாக மாற்றி இந்தியாவிலேயே எப்பொழுதுமே முதல் மூன்று இடங்களுக்குள்ளாகவே இருக்கின்ற வகையிலே செய்த, அரும்பாடுபட்டு தன்னலமில்லாமல் உழைக்கின்ற இந்தத் துறையினுடைய அதிகாரி பெருமக்கள், அதாவது starting from the Secretary to sanitary workers அர்ப்பணிப்பு உணர்வோடு உழைத்த அத்துணை பேருக்கும், குறிப்பாக வர்தா புயல், சென்னை பெருவெள்ளம் நேரத்திலே அந்தத் துறையினுடைய அதிகாரிகளும், அந்தத் துறையில் இருக்கின்ற ஊழியர்களும், அவர்கள் கொடுத்த அந்த அர்ப்பணிப்புடன்கூடிய கடமையுணர்வு நிச்சயமாக இந்தத் தமிழகம் இருக்கும் வரை நினைவில் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல அவ்வளவு பெரிய disaster–ல் ஒரு communicable event அதாவது காலரா, டயரியா, காய்ச்சல் போன்ற எந்தவொரு event–ம் இல்லை. There were no out breaks. So, hats off to the entire departmental staff. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாட்டினுடைய சுகாதாரம் எப்படி இருக்கிறது என்பதை சில indicators-ஐ வைத்துதான் usual ஆகவே நாம் கண்டுபிடிப்போம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய indicators–ஐ காண்பித்தார்கள். I

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

have a list of indicators. Health Indicators for 2015. இந்த விவரங்களை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். Except, death rate; அவர்கள் சொன்னதுமாதிரி death rate–ல் 0.2. Apart from that இங்கு இருக்கின்ற 23 indicators–ல் இந்தியாவில் எந்த indicators இருக்கிறதோ அதைவிட மிக மிகக் குறைவாகத்தான் தமிழ்நாட்டிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் maternal mortality rate அதாவது ஒரு இலட்சம் குழந்தைகளுக்கு எத்தனை தாய்மார்கள் இறக்கிறார்கள் என்று சொன்னால், இந்திய அளவிலே 167 தாய்மார்கள் இறக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் வெறும் 62. Infant Mortality Rate ஆயிரம் உயிருள்ள குழந்தைகளுக்கு எத்தனை குழந்தைகள் இறக்கிறது என்று கேட்டால் இந்தியாவிலே 37, ஆனால் தமிழ்நாட்டிலே 19. (மேசையைத் தட்டும் ஒலி) Neonatal mortality rate இந்தியாவிலே 25, தமிழ்நாட்டிலே 14 என்று இந்த indicators–ஐப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், அதனால்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியிலே நடக்கின்ற இந்தத் துறை தன்னுடைய முழுமையான உழைப்பைக் கொடுத்ததன் காரணமாகத்தான் இந்த நிலையை எட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாமே comprehensive infrastructure development, எந்தவொரு திட்டத்தையுமே ஏதோவொரு அரசியல் நோக்கத்திற்காகவோ அல்லது தேர்தலிலே வாக்குகளைப் பெறுவதற்காகவோ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தையும் அறிவிப்பதில்லை என்பதை இந்த நேரத்திலே இந்த மன்றம் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் நான் சொன்னதுமாதிரிதான்; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Oncology என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி Oncology cancer இருக்கிறது, அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தில் the top most treatment இருக்கும். Curative–ஆன treatment–ஐ பார்த்தீர்களென்றால் இன்றைக்கு ஓமந்தூரார் மருத்துவமனையில் cancer–க்கான உலகத் தரம் வாய்ந்த treatment இருக்கிறது. அதேநேரத்திலே கடைக்கோடி கிராமத்திலே ஒரு PHC–ல் பார்த்தீர்களென்றால் ஒரு கண்ணாடி முன்னால் நின்று ஒரு பெண்மணி தன்னுடைய மார்பகத்தில் இருக்கின்ற கட்டியை சுயமாகப் பரிசோதனை செய்வது எப்படி என்பதையும் இந்த அரசு நிச்சயமாக அவர்களுக்குச்

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

சொல்லிக் கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) That is Comprehensive. ஏனென்றால் self examination in front of the mirror அதுவும் அதிலே வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். C.A. cervix என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால், இன்றைக்கு laser treatment இருக்கிறது, Robotic Machines இருக்கிறது, ஓமந்தூரார் மருத்துவமனையில். இருந்தாலும் C.A. cervix–க்காக, PHC level–ல் அதற்கென்று ஒரு NCD Staff போட்டு, அதை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பதற்கான ஒரு சூழ்நிலையையும் இந்த அரசு அமைத்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாகக் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தார். ஏதாவது ஒரு திட்டத்தை விளக்குங்கள், விளக்குங்கள் என்று. அவர்கள் விளக்காவிட்டால் பரவாயில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறைக்காகக் கொடுத்த திட்டங்களை விளக்குகின்ற பாக்கியவானாக இங்கே நான் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து, ஆறு திட்டங்களை இங்கே விளக்க வேண்டும். ஏனென்றால், இந்தத் துறை இன்றைக்கு இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்ததற்கு முதற்காரணம் TNMSC–Tamil Nadu Medical Services Corporation. அதற்கு அடுத்தபடியாக TANSACS என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஒரு கிளைச் செயலாளர் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவருக்கு எய்ட்ஸ் என்று கண்டுபிடிக்கப்பட்டவுடன் மிகவும் பதற்றமாகிவிட்டார். அதற்குப் பின் நான்தான் அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவரும் treatment–ஐ follow செய்து, இன்றைக்கு அவர் Secretary ஆக ஒரு society–ல் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு HIV கிருமி தொற்றுநோய் இருந்ததற்கான எந்தவொரு அடையாளமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இந்த TANSACS–னுடைய success. I swear. HIV is no more a life threatening disease in Tamil Nadu. I don't know about India. In Tamil Nadu, it is not at all a life threatening disease because your lifestyle goes on in the same way.

பிற்பகல் 1–25

இரண்டாவது Hospital on Wheels. இன்றைக்கு நம்முடைய சுகாதாரத் துறையினுடைய அனைத்துத் திட்டங்களும் மிக

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

எளிமையாக, குக்கிராமங்கள், சின்னசின்ன இடங்களுக்குக்கூட சென்று அடைகின்றன என்றால் Hospital on Wheels–ஐ மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கியதுதான் காரணம். அண்ணன் அவர்கள் சொன்னதுபோல, birth companion. ஏனென்றால் அம்மா அவர்கள் ஒரு பெண் தனியாக ஓர் அறைக்குள்ளே நர்சை நம்பி தன்னுடைய பிரசவத்தைப் பார்த்துக்கொள்ளக் கூடாது, நம்முடைய சொந்தம் ஒருவர் கூட இருந்தால் அந்தத் தைரியத்தின் அளவே வேறு என்பதற்காக birth companion என்பதை இந்தியாவிலேயே முதன்முறையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே கொண்டு வந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாய்–சேய் நலத்தில் மிக, மிக மோசமான நிலையில் இருக்கிறது என்று அவர்கள் பெரிய ஒரு * உண்மைக்கு மாறாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): ** *என்ற வார்த்தையைத் தவிர்க்கவும். அதற்குப் பதிலாக உண்மைக்கு மாறாக என மாற்றிக் கொள்ளவும்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *உண்மைக்கு மாறான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இன்றைக்கு நம் அம்மாவினுடைய தாய்-சேய் நலத் திட்டத்தில்* Institutional deliveries *அதிகமாக இருக்கின்றன.* Institutional deliveries *அவர்களுடைய ஆட்சியில்தான் அதிகமாக இருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள்.* Untrained *தாய் என்று சொல்வார்கள். கிராமத்தில் பார்த்தீர்களென்றால், கிராமத்தில் இருக்கும் ஒரு பெரிய மனுஷி* delivery *பார்ப்பார்கள். அதனுடைய சதவிகிதம் இன்றைக்கு இந்திய அளவில் 9.8% ஆக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் 0.3%தான் இருக்கிறது. இன்றைக்கு* untrained *தாய் பிரசவம் பார்ப்பதை நாம் முழுவதுமாக* zero *ஆக்கியிருக்கிறோம்.* Everybody in the State, *எல்லோரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது* CEmONC Centre–*க்கோ சென்று பிரசவத்தைப் பார்க்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 6,000 ரூபாய் கொடுத்ததால்தான்* delivery increase *ஆகிறது என்று சொல்கிறார்கள். அண்ணன் அவர்கள் கேட்டார்கள். 6,000*

* *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

** *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

ரூபாய் பணத்திற்காக வந்தார்கள் என்று சொன்னீர்கள் என்றால், நாங்கள் 12,000 ரூபாயிலிருந்து இன்றைக்கு 18,000 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம்; ஆனால், அதுவல்ல காரணம்.

ஒரு மலைப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், இன்றைக்கு 108–ல் four wheel drive கொடுத்திருக்கிறோம்; அந்த மலைப் பகுதியிலிருந்து சீக்கிரமாக வர வேண்டும் என்பதற்காக. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே AYUSH staff–ஐ நியமித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் சொல்லப்போனால், anaemia. அதாவது இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது இரத்தச் சோகை. வருங்கால தமிழகம் வலிமையான தமிழகமாக இருக்க வேண்டுமென்பதற்காக முதல் 3 மாதத்திற்குள் எல்லா கர்ப்பிணித் தாய்மார்களையும் PHC–க்கு வரவழைத்து iron sucrose என்கிற அந்த மருந்தை அளித்து immediate–ஆக அவர்களுடைய இரத்தச் சோகையை நிவர்த்தி செய்யக்கூடிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

வரிசையாக சொல்லிக்கொண்டே போகலாம். குழந்தை கருவுறுவதிலிருந்தே நாங்கள் அவர்களுடன் பயணிக்கிறோம். இந்த அரசு ஒரு பெண் கருவுற்றதிலிருந்து அவர்களுடனேயே பயணிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வளைகாப்பு நிகழ்ச்சி நடத்துகிறோம். அந்தக் குழந்தையை அழைத்து வருவதற்கு vehicles கொடுத்திருக்கிறோம். 'Amma Kit' வழங்குவதைப் பொறுத்தவரையில், சாதாரணமாக ஒரு பொருளைக் கொடுத்ததாக நாங்கள் நினைக்கவில்லை. ஏழைக்கும் பணக்காரனுக்கும் இருக்கின்ற வித்தியாசம்; (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பணக்கார வீட்டுப்பிள்ளை எப்படி ஒரு பஞ்சு மெத்தையிலே தவழ்கிறதோ அதைப்போல ஓர் எளியவனுடைய பிள்ளையும் பஞ்சு மெத்தையிலே தவழ வேண்டும்; அவன் குளிப்பதற்கு சந்தன சோப்பு வேண்டும்; அந்தப் பிஞ்சு உடலை நஞ்சுக் கொசுக்கள் தீண்டிவிடக் கூடாது என்பதற்காக கொசு வலையையும் சேர்த்து 'Amma Kit' என்ற ஒன்றைக் கொடுத்தார்கள். இந்த நிலையில்தான் தாய்–சேய் நலம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்காக full credit will go to the TNHSP, 2005–ல் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

நான் அரசு மருத்துவராகப் பணியாற்றி இருக்கிறேன். பலமுறை நடுராத்திரி ஒரு மணிக்கு CEmONC centre நம்பருக்கு யார் போன் செய்தாலும், அந்தப் பெண் என்ன பிரச்சினையில் இருக்கிறார், அவர்களுக்கு bleeding ஆகின்றதா அல்லது அந்தக் குழந்தைக்கு தலை வெளியில் வந்துவிட்டதா என்று கேட்டு, என்ன பிரச்சினை என்றாலும் இங்கிருந்து ambulance, CEmONC centre–க்கு போவதற்குள்ளாக உடனடியாக அங்கே மருத்துவர்களும், செவிலியர்களும் தயார் நிலையில் இருக்கின்ற ஒரு சூழலை இந்த CEmONC centre ஏற்படுத்தியிருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) 24 மணி நேரமும். இங்கு சவால் விட்டுச் சொல்ல முடியும். ஏதாவது ஒரு CEmONC centre–ல் நாங்கள் போகும் நேரத்தில் டாக்டர் இல்லை என்று ஏதேனும் ஓர் உறுப்பினர் இங்கு நிரூபித்துவிட்டால், நிச்சயமாக அவர் சொல்வதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். அந்தச் சூழ்நிலை அங்கே இல்லை.

பிற்பகல் 1–30

அடுத்தபடியாக, NICU. நான் ஒரு M.B.B.S. டாக்டர். தனியார் மருத்துவமனையிலும் பணிபுரிந்து இருக்கிறேன். அரசு மருத்துவமனையிலும் பணிபுரிந்து இருக்கிறேன். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில்தான் குழந்தைகளுக்கான அவசர சிகிச்சை, அதாவது NICU என்று சொல்லக்கூடிய ICU அரசு மருத்துவமனையில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்ப காலத்தில் 20 வருடங்களுக்கு முன்பு பிறந்த குழந்தைக்கு ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், அந்தக் குழந்தை இறந்துவிட வேண்டியதுதான், எந்த ஒரு வசதியும் இருக்காது. ஆனால், இன்றைக்கு Paediatric ventilators, Incubators உள்ளிட்ட எல்லா வசதிகளையும் செய்து, NICU என்ற ஓர் அற்புதமான தனிப் பிரிவு இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆறு மாதங்களுக்கு முன்பாக PREM என்று சொல்லக்கூடிய Paediatric Resuscitation and Emergency Medicine தொடங்கப்பட்டதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்கு ICU இருப்பதே பெரிய அதிசயமாக இருந்த காலம் மாறி இன்றைக்கு Neonatal ICU என்று தனியாகக் கொடுத்துவிட்டு, ஏதேனும் ஓர் அவசரப் பிரச்சினைக்காக வருகின்ற குழந்தைகளுக்கு Paediatric Resuscitation and Emergency Medicine என்று சொல்லக்கூடிய ஓர் அற்புதமான பிரிவையும் இங்கே நம்முடைய மாண்புமிகு புரட்சித்

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

தலைவி அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கியிருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2, 3 issues பற்றிச் சொன்னார்கள்; குறிப்பாக alcohol குறித்துச் சொன்னார்கள். இரண்டாவதாக, Cardiac arrest, heart attack மிகவும் பிரச்சினைக்குரிய விஷயங்களாக இருக்கின்றன என்று சொன்னார்கள். Alcohol என்பது social impact, social economic burden என்றார்கள். Bangalore Study, 2006 WHO Manual–ல் உள்ளதைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்வது என்னவென்றால், அந்த WHO recommendation–ஐ வைத்துதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மதுவிலக்கை படிப்படியாகத் தமிழ்நாட்டிலே கொண்டு வர வேண்டும் என்று முடிவெடுத்தது என்பதை நான் இங்கே ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எந்தவொரு திட்டத்தையும் உடனடியாக நீங்கள் நிறுத்திவிட்டால், அதனால் வருகின்ற பின் விளைவுகள் அதிகமாக இருக்கும். அதனால், Bangalore Study, 2006 WHO Manual–ன் recommendation–படிதான் தமிழ்நாட்டில் அத்தனை இடங்களிலும் மறுவாழ்வு மையங்கள், De–addiction Centres–ஐ எல்லாம் ஏற்பாடு செய்து, அவர்களை அந்தப் பழக்கத்திலிருந்து நல்லபடியாக விடுவிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பை சரியாகப் படிக்கவில்லை. நிலையான வளர்ச்சிக் குறிக்கோள் என்பதன்கீழ் Central Government என்னென்ன schemes-ஐ செயல்படுத்துகிறார்கள், அதற்கு தமிழ்நாடு அரசினுடைய பங்களிப்பு என்ன என்பது குறித்து பக்கம் 205–ல் கொடுக்கப்பட்டிருக்கின்றது. போதை, மதுவிற்கு அடிமையானவர்களுக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்று National level–ல் சொல்லும்போது, தமிழ்நாடு அரசு தன்னுடைய பங்காக Regional Centres for De–addiction and Counselling Centres–ஐ நாங்கள் அமைப்போம் என்று பக்கம் 205–ல் சொல்லியிருக்கிறார்கள் என்ற தகவலை இந்த நேரத்திலே உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [2017 ஜூலை 4

இரண்டாவது cardiac problem. Cardiac problem–த்திற்கு கட்சிப் பாகுபாடில்லாமல் அனைவரும் alert ஆக வேண்டிய ஒரு தருணம் இது என்று நான் எண்ணுகிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு 17.3 million deaths are due to Cardiovascular disease. 17.3 மில்லியன் இறப்பு இந்த heart attack–ஆல் வருகிறது. 2023 ஆம் ஆண்டிலே இது 20 மில்லியனாக மாறுவதற்கான அத்தனை சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக heart attack இப்போது 40 வயதிற்குள்ளாக இருப்பவர்களுக்குக்கூட வருகிறது என்ற ஒரு தகவலும் இருக்கிறது. அதற்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுதான் NCD. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலே Angiogram, Angioplasty, Stent, Valve replacement அனைத்தையும் include செய்திருக்கிறோம். அதேநேரத்திலே, கடைக்கோடி கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்திலே NCD மூலமாக ஆரம்ப நிலையிலேயே இரத்தக் கொதிப்பு, Sugar–ஐப் பார்த்து விடுகிறோம். அவர்களுடைய Cholesterol–ஐப் பார்த்து விடுகிறோம். அம்மா ஆரோக்கியத் திட்டத்தின்மூலம் அவருடைய Cholesterol–ஐ பார்த்து விடுகிறோம். Weight அதிகமாக இருந்தால் Obesity–ஐ அங்கேயே பார்த்து விடுகிறோம். என்னென்ன symptoms–ஆல் heart attack வருகிறதோ, அந்த symptoms–ஐ ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தயாராக இருக்கின்றன. முற்றிய நிலையிலே வந்தால் நம்முடைய ஓமந்தூரார் மருத்துவமனையைப் போன்று பல்வேறு அரசு மருத்துவமனைகள் இங்கே முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான ஒரு சிகிச்சையை அளிப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மிக முக்கியமான விஷயம், Napkin. அதுதான் தாய் என்று சொல்வது. அம்மா என்று நாங்கள் சொல்கிறோம் அல்லவா, அதுதான் இது. ஒரு பெண்ணினுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தி, இந்த உலகத்தில் பிறந்த அத்தனை பேரையும் தன்னுடைய பிள்ளைகளாக நினைக்கின்றவள்; கரு கொண்ட தாய்மார்கள் ஒரு குழந்தைக்கு தாய் ஆவார்கள், ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுள்ளம்

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

கொண்டதனால் 7½ கோடி தமிழ் மக்களுக்கும் தாயாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) Napkin not only for school girls, எல்லோருக்கும் கொடுக்கிறார்கள். அதிகமான சிறைக் கைதிகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட Napkin சென்று சேர வேண்டும் என்ற நல்ல முயற்சியினை இந்த அரசு எடுத்திருக்கிறது. இன்னும் ஒரு படி மேலே என்னுடைய request ஆக இதை urban areas–ல் வழங்குவதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டும். இன்னும் நமது சென்னையைப்போல corporate area–ல் இருப்பவர்களுக்கு, இந்த ** இருப்பவர்களுக்கு, கொஞ்சம் outskirts–ல் இருப்பவர்களுக்கு அது வழங்கப்படவில்லை. இன்னும் urban areas–ல் அது வரவில்லை. விரைவில், Napkin for urban girls should also be considered என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–3.5

TRANSTAN—அம்மா அவர்களுடைய முழு முயற்சியிலே வந்ததுதான் TRANSTAN. அதாவது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை அரசாங்கமே எடுத்துச் செய்யுமா என்ற அந்த கேள்விக்குறியை ஆச்சரியக்குறியாக மாற்றியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அம்மா அவர்கள் இந்த TRANSTAN மூலமாக. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): இல்லை, இல்லை. அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், ** என்ற வார்த்தையைத் தவிர்க்கவும். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் V.P.B. பரமசிவம்: அந்த வார்த்தையை மாற்றலாம். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம். Sorry. ஆக, அந்த TRANSTAN என்ற அமைப்பு இன்றைக்கு corpus fund மூலமாக liver transplant, kidney transplant மற்றும் அனைத்து உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை செய்திருக்கிறது.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

MRB மூலமாக பல பேருக்கு நாம் வேலைவாய்ப்பைக் கொடுக்கிறோம். இன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அவர் வழியிலே நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தப் பணியாக இருந்தாலும் transparent ஆக, எந்த ஒளிவுமறைவும் இல்லாமல், நடக்க வேண்டுமென்று, இன்றைக்கு MRB மூலமாக பல்லாயிரக்கணக்கான Staff Nurses, M.B.B.S. டாக்டர்களை இன்றைக்கு appoint செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட *20,852* posts, MRB மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர்கள் இல்லையென்ற குறை இருக்கக்கூடாது என்பதற்காக, Specialist Doctors இல்லை என்ற குறை இருக்கக்கூடாது என்பதற்காக O.G., Paediatrics, Ortho படித்த specialists நேரடியாக walk–in–interview மூலமாக அரசுப் பணிகளுக்கு அவர்கள் வரலாம் என்று அவர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து இந்த அரசாங்கம் வரவேற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாட்டைக் களைவதிலே இந்த அரசு முனைப்போடு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

DME பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், AIIMS Medical College. உண்மையிலேயே எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆரம்பிக்கும்போது சொன்னார்கள், நாங்கள் 'எதிரிக் கட்சி அல்ல, எதிர்க் கட்சி' என்று. அதை ஒரு issue ஆக, எந்த ஊரிலே அது வரவேண்டுமென்பதை ஒரு பொருளாக எடுத்து இங்கே விவாதிக்கத் துணியும்பொழுது, உள்ளபடியே எனக்கு வருத்தமாக இருந்தது. AIIMS என்பது மதுரைக்கும், தஞ்சாவூருக்கும் அல்ல. இது தமிழ்நாட்டிற்குப் பெருமை. அது எங்களுக்கும் பெருமை, உங்களுக்கும் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசாங்கம், AIIMS மருத்துவமனையினுடைய கிளையை தமிழ்நாட்டிலே உருவாக்குகிறதென்று சொன்னால், இங்கே மருத்துவத் துறை எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால்தான் அந்த நிறுவனம் இங்கே வருவதற்குத் தயாராக இருக்கிறது. இன்னும் ஒரு படி மேலே UG & PG seats–ஐப் பொறுத்தவரையில், 1,000 UG seats, 320 PG seats–ஐ increase செய்திருக்கிறார்கள். ஒரு வருட course என்று சொல்வார்கள். வேலைவாய்ப்பைப் பற்றி நாம் நிறைய பேசுகிறோம்.

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

வேலைவாய்ப்புகள் இல்லாமல் இளைஞர்கள் இருக்கிறார்கள் என்கிறோம். 12–வது படித்தவர்கள் சேர ஒரு வருட course என்று பல courses medical field–ல் உள்ளது. அனைத்தையும் நம்முடைய Government–ல் கொடுக்கிறோம் என்கிற தகவலை அருள்கூர்ந்து இங்கு இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் தெரிந்துகொண்டு உங்களுடைய பகுதியிலே நீங்கள் இதனைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், ஒரு Echo technician என்பது ஒரு வருட course. அதற்கு அதிகமான fees –ம் கிடையாது; Admission Free ஆக இருக்கிறது. Lab technician, Echo Technician, ECG Technician. நான் ஒரு Ortho என்றால் எனக்கு ஒரு Assistant Orthopaedic Technician, Anaesthetic Technician என்று அத்தனை. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): உறுப்பினர், சிறப்பாகப் பேசுகிறீர்கள். Conclude செய்யுங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: இன்னும் 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): உறுப்பினர், சிறப்பாகப் பேசுகிறீர்கள், மகிழ்ச்சி.

டாக்டர் V.P.B. பரமசிவம்: நன்றி. One year certificate course–ல் நிறைய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலை உண்மையிலேயே இருக்கிறது. ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் நம்முடைய Selection Committee Website–ல் போய் இதையெல்லாம் download செய்து, நிறையபேரை சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகிறேன்.

அதேபோல், இந்த 108, 104 மாதிரி, அமரர் ஊர்திக்கும் ஒரு history இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் முதன்முதலில் இந்த அமரர் ஊர்தியைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தந்தையார் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுது அவருடைய அப்பா, அதாவது என்னுடைய தாத்தா இறந்துவிடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போது, G.H.–ல் இறந்த அந்த body–ஐ கொண்டு வந்து வெள்ளம்பட்டி என்ற ஊர் 40 கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது. அங்கே வரவேண்டுமென்று சொன்னால் 3,200 ரூபாய் செலவாகும். அப்போது 1982–ல் 3,200 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அந்தச் சடங்கை முடித்தவுடன் என்னுடைய தந்தையார் அவர்கள் வந்து

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் 3,200 ரூபாயை எம்.எல்.ஏ.–வாக உள்ளதால் கொடுத்துவிட்டேன். என்னைப்போல் வசதியில்லாதவர்கள் உடலை எடுத்துச் செல்வதற்கு சிரமப்படுவார்கள் என்று சொன்னபோதுதான் பொன்மனச்செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் Mortuary Van–ஐக் கொண்டு வந்தார். அதுதான் இந்த அமரர் ஊர்திக்கான வித்து. 104 எண்ணிற்கு நீங்கள் phone செய்து அந்த அமரர் ஊர்தி எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் பிற மாநிலங்களில் நீங்கள் வேண்டுமென்று சொன்னாலுங்கூட, அங்கு co–ordinate செய்து அந்த அமரர் ஊர்தியை அங்கே கொண்டு வருகிற ஒரு சூழ்நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் நம்முடைய ஆயுர்வேத மருத்துவத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. Naturopathy, Ayurvedic, Homeopathy, Unani, Indian Medicine என்று அத்தனைக்கும் சேர்த்து ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறதென்று சொன்னால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் நாம் இன்றைக்கு நினைக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): இல்லை, அவர் முடிக்கட்டும்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: Ayurvedic massage என்றால் நமக்கு கேரளா ஞாபகம்தான் வருகிறது. We are the origin. ஆயுர்வேதத்திற்கும், யோகாவிற்கும் உரிமை கொண்டாடத் தகுதியுடையவர்கள் தமிழர்கள் என்பதை அருள்கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) வர இருக்கின்ற காலங்களிலே Centres for Yoga அனைத்து மாவட்டங்களிலும் இருக்க வேண்டும். அங்கே, we can also invite the Tourists. இன்றைக்கு எப்படி ஆயுர்வேதம் என்றால் அங்கே போகிறார்களோ, அதேமாதிரி tourists யோகாவிற்கு நம்முடைய மாநிலத்தைத் தேடி, மாவட்ட தலைநகரங்களுக்கு வருகின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று தாழ்மையோடு உங்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–40

இன்னொரு முக்கியமான scheme குறித்து கூற விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய செயல்பாடு என்னவென்றால், நாங்களெல்லாம் மேடைகளில் பேசுகின்ற சூழ்நிலை வரும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருப்பார்கள். நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்களைப் பற்றி ஒரு மேடையில் ஒரு மாதம் சொல்வோம். சென்ற மாதம் ஒரு கூட்டம் போட்டு, அந்த மேடையில் 4 திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருப்போம். அடுத்த மாதம் நடக்கும் கூட்டத்தில் அல்லது இரண்டு மாதங்கள் கழித்து நடத்தப்படும் கூட்டத்தில் அந்தத் திட்டங்களைப் பற்றிச் சொல்ல முடியாது. ஏனென்றால், அதற்குள் 4, 5 திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து விடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருடத்திற்கு ஒரு திட்டம், அது சுகாதாரத் துறையில் நிச்சயம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து வரவிருக்கின்ற ஓர் அற்புதமான திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார நலத் திட்டம் ஆகும். இது TNUHP என்று அழைக்கப்படுகிறது. JICA என்னும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல, ரூ.1,634 கோடி (மேசையைத் தட்டும் ஒலி) அளவிலான நிதியில் தமிழக மக்களுடைய நல்வாழ்விற்காக, தமிழக அரசினுடைய முயற்சியினாலே தற்போது JICA முதலீட்டு நிறுவனம் தமிழ்நாட்டிலே தன்னுடைய முதலீட்டைச் செய்யவிருக்கிறது. நேரத்தின் அருமை கருதி, அதுகுறித்து சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். அதி நவீன கட்டடங்களுக்கு மட்டும் ரூ.436 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.436 கோடி அளவிலான நிதி அரசு மருத்துவமனைக் கட்டடங்களுக்கு என்று சொன்னால், நம்முடைய அரசு பொது மருத்துவமனைகள் எவ்வாறு இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட private hospitals–க்கு equal–ஆக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பொருட்களுக்கு ரூ.705 கோடி அளவிற்கு நிதியைக் கொடுக்கவிருக்கிறார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய சார்பாகவும், எங்களுடைய சார்பாகவும், சுகாதாரத் துறைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், திண்டுக்கல்

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [2017 ஜூலை 4

மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்திலிருந்து ரூ.11 கோடி அளவிலான நிதியை ஒதுக்கியதற்காகவும், வரவிருக்கின்ற காலங்களிலே திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்து கொடுப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களுக்கும் எங்களுடைய மாவட்டத்தின் சார்பாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுருக்கமாகப் பேசி உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் service பற்றிச் சொன்னார்கள். எவ்வளவுதான் நல்ல திட்டங்கள் நம்முடைய மருத்துவத் துறையில் இருந்தாலும்கூட, மிகவும் முக்கியமான ஒன்று என்னவென்றால், பொதுமக்கள் மருத்துவமனைக்கு சென்றடைகின்ற கால நேரம். தற்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய 108 ஆம்புலன்ஸ் திட்டத்தைப் பற்றிச் சொன்னேன். அடுத்ததாக, two wheeler ambulance. அதுவெல்லாம் ஒரு innovative–ஆன திட்டம். சென்னையில் இருக்கின்ற நிறைய இடங்களுக்குப் போக வேண்டுமென்றால், நடந்தே போக முடியாது. அவ்வளவு குறுகலான பாதைகளாக இருக்கின்றன. அதுபோன்ற இடங்களிலும்கூட, இந்த two wheeler ambulance மூலமாகச் சென்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுகுறித்து ஒரு சிறிய data–வை பேரவையின்முன் எடுத்து வைக்க விரும்புகிறேன். மருத்துவமனைக்குச் செல்வதில் காலதாமதம் ஏற்படுகிறது, காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இருக்கின்ற data அதற்கு நேர்மாறாக இருக்கிறது. Pick–up time என்று சொல்வார்கள். உலகத்தில் ஒரு ambulance ஓரிடத்திலிருந்து hospital–க்கு ஒருவரை அழைத்துச் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகிறது என்றால், 10 நிமிடங்கள். இந்தியாவில் ஒரு ambulance ஓர் அடிபட்ட நபரை hospital–க்குக் கூட்டிக்கொண்டுச் செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகிறதென்றால், 17 நிமிடங்கள். ஆனால், தமிழ்நாட்டில் ஓர் அடிபட்ட நபரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு வெறும் 14.5 நிமிடங்கள்தான் ஆகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் சென்னை, மதுரை போன்ற பெருநகரங்களில் வெறும் 11.3 நிமிடங்களில் ambulance–ஆனது அருகிலிருக்கின்ற மருத்துவமனையைச் சென்றடைகிறது என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். Pilot Android App என்ற ஒரு திட்டத்தை இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஏனென்றால், அதுபோன்ற

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

பதட்டமான சூழ்நிலைகளில் தொலைபேசியில் பேசமுடியாத நிலைமை இருக்கும். அருகிலிருக்கின்ற இளைஞர்களிடத்தில் இந்த details–ஐப் போடச் சொன்னால், அவர்கள் திறமையாக smart phone–ல் போட்டுவிடுவார்கள். அந்த வாகனம் GPS கருவியுடன் இருக்கிறது. Geographical details அதில் இருக்கிறது. அது பள்ளத்தில் இருக்கிறதா, மேடான பகுதியில் இருக்கிறதா, மலையிலிருந்து இறங்கி வருகிறதா, எவ்வளவு நேரத்தில், எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் மருத்துவமனையை அந்த அடிபட்ட இளைஞன் வந்தடைவான் என்பதைத் துல்லியமாகச் சொல்லக்கூடிய அந்த Pilot Android App with GPS அற்புதமான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எங்களுடைய பணிவான நன்றியினைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக ஒரேயொரு பொருளைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். Chief Minister's Comprehensive Health Insurance Scheme பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். நம்முடைய Chief Minister's Comprehensive Health Insurance Scheme–ஐப் பொறுத்தவரையில், நிறைய விவாதங்கள் நடந்துவிட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றி நிறைய சொல்லிவிட்டார்கள். Starting நன்றாக இருக்கிறது, but finising சரியாக இல்லை என்றிருக்கிறது. அதுதான் technical–ஆகப் பிரச்சினை. என்னவென்றால், அத்திட்டத்தை அவர்கள் இரண்டு ஆண்டுகள் continue செய்தார்கள். Private Insurance ரூ.1 இலட்சம் கொடுத்தார்கள். அந்த விஷயத்திற்குள் நாம் போக வேண்டாம், விவாதம் அதிகமாகிவிடும். மாண்புமிகு அம்மா அவர்களால் 11–1–2012 அன்று இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 10–1–2017 அன்று வரை ரூ.3,398 கோடி அளவில் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கி, 19.84 patients–ஐ cure செய்திருக்கிறார்கள். இதில் highlight செய்யப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த insurance scheme மூலமாக அரசாங்க மருத்துவமனைகள் மட்டும் ஈட்டிய தொகை ரூ.1,440 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) 6.93 இலட்சம் patients வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் private hospital–ல் இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய மனது எங்கே போகும்? அப்பல்லோ மருத்துவமனைக்குப் போகலாம் அல்லது இங்கேயிருக்கிற Billroth மருத்துவமனைக்குப் போகலாம்

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [2017 ஜூலை 4

என்றுதான் தோன்றும். ஆனால் 6.93 இலட்சம் பேரை இன்று அரசு மருத்துவமனைகள் ஈர்த்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.1,440 கோடி நிதியும் அந்த மருத்துவமனையினுடைய தரத்தை மேம்படுத்துவதற்காக அங்கேயே செலவிடப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியமான விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து, இரண்டேயிரண்டு உதாரணங்களை நான் சொல்ல வேண்டும். ஒன்று இராயப்பேட்டை மருத்துவமனை, மற்றொன்று நம்முடைய ஓமந்தூரார் மருத்துவமனை ஆகும். மாண்புமிகு உறுப்பினர் யார் வேண்டுமானாலும், இன்று மாலையில் இராயப்பேட்டை மருத்துவமனைக்குப் போகலாம். அங்கு உள்ளே நுழைந்தவுடன் cleanliness–ஐப் பார்க்கலாம். ஓர் இடத்தில்கூட எச்சில் உமிழ்ந்திருப்பதையோ அல்லது சுவர்களில் ஓரிடத்தில்கூட கரையையோ மாண்புமிகு உறுப்பினர்கள் பார்க்க முடியாது.

பிற்பகல் 1–45

முழுமையாக, ஒவ்வொரு floor–க்கும் ஒரு தனியார் நிறுவனத்தை நியமித்து மருத்துவமனையை சுத்தமாக வைத்திருக்கிறார்கள். நாங்கள் உள்ளே சென்று ICU–வைப் பார்த்தோம். முழுவதும் grills போட்டு, ஒவ்வொரு bed–க்கும் ஒரு curtain போடப்பட்டிருக்கிறது. முழுவதும் granite. நான்கில் மூன்று பங்கு granite flooring and granite tiles போட்டிருக்கின்றார்கள். என்ன இப்படிச் செய்திருக்கிறீர்களே, இது எப்படிச் சாத்தியம் என்று கேட்டேன். இந்தத் துறை, Oncology என்று சொன்னார்கள். Oncology–க்குத் தேவையான அத்தனை instruments–ஐயும், CM Health Insurance Scheme–யினுடைய பணத்திலே நாங்கள் வாங்கிவிட்டோம் என்று அங்கு இருக்கின்ற மருத்துவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக P.G. course–ஐ எல்லாம் Government College–ல் படித்தால் நல்ல பொருள் கிடைக்கவில்லையே, private–ல் நிறைய புதிய instruments வைத்திருப்பார்கள் என்று கொஞ்சம் சிந்திப்பார்கள். ஆனால், இன்றைக்கு MCH, PG படிக்கின்ற மாணவருடைய முகத்தில் இருந்த சந்தோஷத்தை நான் நேரிலே பார்த்தேன். You name the instrument you get it from CM Health Insurance scheme என்று, அவ்வளவு சிறப்பாக அந்த மருத்துவர்கள் அங்கே பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரேயொரு request. Oncology என்று சொல்லும்போதே, Palliative care என்று சொல்வார்கள். ஒருசில வியாதியை நாம் குணப்படுத்த முடியாது. நம்முடைய கண் முன்பாகவே அவர்களுடைய

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

மரணம் தருவிக்கும். இரண்டு அல்லது ஐந்து வருடங்களில் இறந்துவிடுவார்கள் என்று சொல்வார்கள். அந்த இரண்டு வருடங்களில், ஐந்து வருடங்களில் இறக்கப் போகின்றவர்களுக்கு என்று ஓர் இடம், கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு Palliative centre, அதாவது, அங்கு ஒரு Physiotherapist, ஒரு Staff nurse, இறக்கப் போகின்ற நோயாளிக்கு ஒரு வலி ஊசி, drip போட்டு ஒரு சாப்பாடு கொடுக்கின்ற மாதிரி, ஒரு simple–ஆன Palliative care centre–ஐ அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இராயப்பேட்டை போன்ற மருத்துவமனைகளில் treatment எடுத்துவிட்டு, அதை follow–up செய்வதற்கு, அவர்களுடைய கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு வேண்டுகோளை வைக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய புகழிலே மீண்டும் ஒரு மகுடமாக இப்போது robotic machine வந்துவிட்டது. Oncology–ஐ பொறுத்தவரை, அங்கு இருக்கின்ற Radio therapy machine நன்றாக இருக்கின்றது. அடுத்தகட்டமாக, ஒரேயொரு, Linear Accelerator என்று சொல்லக்கூடிய LINAC என்ற machine ரூ.20 கோடி மதிப்பீட்டில் வந்துவிட்டால், இந்தியாவிலேயே Oncology–னுடைய treatment–ல் தமிழகம்தான் மிகச்சிறந்த ஒரு மாநிலம் என்பதை நாம் achieve செய்துவிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் Onco Surgery Department–ஐ ஆரம்பிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அதைச் சுற்றி 7, 8 மாவட்டங்கள் இருக்கின்றன. அங்கு Department of Onco Surgery ஆரம்பிக்க வேண்டும். அம்மா அவர்கள் அறிவித்த PET CT நமக்கு வரவிருக்கிறது. அதனைத் தொடர்ந்து, இந்த LINAC–ம் வந்துவிட்டால், தமிழகத்திலே தலைசிறந்த ஒரு மருத்துவமனையாக இது இருக்கும்.

அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து, ஓமந்தூரார் போன்ற அரசு மருத்துவமனைகள் மற்றும் District Head quarters–ல் எல்லாம் DNB Course, PG Course–க்கு invite செய்தால், அங்கு பணிபுரிவதற்கு

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [2017 ஜூலை 4

நிறைய டாக்டர்கள் கிடைப்பார்கள். அங்கு patients வருவார்கள். ஏனென்றால், ஒரு Consultant 50 வயதைத் தாண்டியிருப்பார். ஒரு PG அவர்கள்கூட இருந்தால், அவர்களுடைய work efficiency என்பது வேறு level–ல் இருக்கும். கண்டிப்பாக, வருங்காலத்தில் அரசு தலைமை மருத்துவமனைகளில் நிச்சயமாக Post Graduate courses இருக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே உங்களிடத்தில் பணிவோடு சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொரு வேண்டுகோள். Rs.5.5 crore RT building இப்போது தயார் நிலையில் இருக்கின்றது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களால் திறக்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, Sports Medicine. Sports Medicine–ஐப் பொறுத்தவரை, இரண்டே இரண்டு விஷயம்தான். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். நம்முடைய அரசின் மூலமாக, Sports Development Authority of Tamil Nadu மூலம் நிறைய Sports persons training எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் shoulder injury ஆகின்றவர்களுக்கு, மூட்டு விலகுவது, கால்களில் ACL சவ்வு விலகுவதற்கு ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் ஒரு நல்ல department இருக்கிறது. அவர்கள் shoulder cervix open பண்ணுவதற்கு, scheme–ல் சேர்க்க வேண்டும்.

இன்று diabetes இல்லாத ஆட்களே கிடையாது. Diabetes இருக்கும் எல்லோருக்கும் தெரியும், இரண்டு அல்லது மூன்று வருடங்களாக சர்க்கரை நோய் இருப்பவர்களுக்கு கை இதற்கு மேலே போகாது. மேலே தூக்க முடியாது. பிடிப்பு இருக்கும். அதை Periarthritis shoulder என்று சொல்வார்கள். அதற்கு மிக, மிக சுலபமான வைத்தியம், injection–ஐப் போட்டால் உடனடியாக சரியாகிவிடுவார்கள். அந்த injection–ஐப் போட ultra sound machine ஒன்று இங்கே இருந்தால் அந்த injection–ஐ நாம் இங்கேயே போட்டுக்கொள்ளலாம். அந்த injection–ஐப் போட்ட அரை மணிநேரத்தில் அவர்கள் எழுந்து relief ஆவதற்கான ஒரு சூழ்நிலை இருக்கிறது. Sports medicine–ஐ பொறுத்தவரை, operate செய்வது முக்கியமல்ல. அந்த athlete, தமிழ்நாட்டுக்காக, இந்தியாவுக்காக விளையாட வேண்டும். ஒரு rehabilitation தேவை. Sports Rehabilitation Centre அங்கு வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

இறுதியாக, என்னுடைய தொகுதி சம்பந்தமாக, நான்கு கோரிக்கைகளை மட்டும் பதிவு செய்து விடைபெற விரும்புகிறேன்.

Request for Cardiology, Public CPR workshop என்று சொல்கிறோம். ஏனென்றால், heart attack–ஐப்பற்றி நாம் இங்கே பேசினோம். நிறைய பேருக்கு, even for doctors–க்குக்கூட நெஞ்சுவலி வந்து விழுகின்றபோது அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நமக்குத் தெரியாது. இந்த CPR அனைத்து குடிமகனும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும். இந்த public CPR, Cardio Pulmonary Resuscitation Workshop டிரைவர்களில் ஆரம்பித்து, ஆட்டோக்காரர்கள், பேங்க், போலீஸ், டாக்டர், குழந்தைகள் என்று அத்தனைபேருக்கும் public CPR–ஐ உடனடியாக நம்முடைய அரசு கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல்லில் மருத்துவக் கல்லூரி கேட்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து நாங்களும் உங்களிடத்தில் கேட்கிறோம். அங்கு நான்கு தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. அதிகமாக accidents நடக்கிற இடம். திண்டுக்கல்லிலிருந்துதான் மதுரைக்கும், தஞ்சாவூருக்கும், திருச்சிராப்பள்ளிக்கும் விபத்திற்குள்ளானவர்கள் சிகிச்சைக்காக அதிகமாக அனுப்பப்படுகிறார்கள். எனவேதான் திண்டுக்கல்லில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பதை இந்த நேரத்திலே உங்களிடத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் எங்கள் தொகுதியில் பார்த்தால் வறட்சி பாதித்த தொகுதியாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். வறட்சியை எல்லாம் எழுதிக் கொடுங்கள். 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. தொகுதிப் பிரச்சினைகளை எல்லாம் எழுதிக் கொடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம். இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–1989 காலங்களில் பார்த்தால் வறட்சி, தொழில் துறையில் பின்தங்கிய தொகுதி என்றெல்லாம் அறிவித்து. . .

[2017 ஜூலை 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேசி, அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். தொகுதி கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்தால் பதிவு செய்துகொள்ளலாம்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே பாயின்ட்தான். அவ்வளவுதான். 1980–1989 காலங்களில் வறட்சி என்று அறிவித்து, அந்தத் தொகுதியில் வசிப்பவர்களுக்கு சில சலுகைகள் அளிப்பது வழக்கமாக இருந்தது. இப்பொழுது அந்த முறை வழக்கத்தில் இல்லை. வேடசந்தூர், இராமநாதபுரத்தில் விவசாயம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. தண்ணீர் 1,000 அடிக்குக் கீழே போயிருக்கிறது. தொழில் என்று பார்த்தால் spinning mills இருந்தன. அவர்களும் கொஞ்சம் deteriorate ஆகிறார்கள். வரவிருக்கின்ற காலங்களில் வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தொகுதிகளை வறட்சி மற்றும் தொழில் துறையில் பின்தங்கிய தொகுதிகளாக அறிவிக்க வேண்டும். எண்ணற்ற நிதிகள் மாநகராட்சிகளைச் சுற்றியிருக்கிற பகுதிகளுக்குப் போனால்கூட, பின்தங்கிய தொகுதிகளைக் கவனத்தில்கொண்டு அவற்றிற்கு ஒரு சிறப்பு நிதியை ஒதுக்க வேண்டும்.

இரண்டாவதாக, Corporate Social Responsibility Fund—CSR Fund என்று சொல்லக்கூடிய அந்த Fund–ஐ எல்லா கம்பெனிகளும் ஒரு சதவிகிதம் கொடுக்க வேண்டும். அந்த Fund–ஐ எல்லாம் அவரவர்கள் வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் ஒருங்கிணைப்பதற்கான ஓர் ஆணையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

தாமரை பூத்தாற்போல் அழகு; அரியணையில் வீற்றிருந்த முழு நிலவு; அடிமட்டத் தொண்டனையும் தூக்கி உயர்மட்டப் பொறுப்பில் அமர்த்திய துணிவு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு மொழிகள் அறிந்த அன்னை; அவர் திறமைக்கு ஒப்பாருமில்லை; திறம்பட தொண்டு செய்யும் தொண்டனை மறக்காது பதவிகள் வழங்கிய அன்னை. ஆறு கோடி மக்களின் தானைத் தலைவியாய், யார்மனமும் புண்படாமல் ஆண்டார் திறமையாய். வாழ்நாளில் என்றென்றும் சாதனைச் செல்வியாய் வாழ்ந்து மறைந்தார் தமிழரின் இதய தெய்வமாய். தமிழாண்ட அன்னையே! தமிழர் மறப்பாரோ உன்னையே! தங்கத் தாரகையே! பொதுமக்களின்

2017 ஜூலை 4] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

கண்ணீர் கடலலையில் இளைப்பாறு பொன்மகளே, (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனச் செம்மலின் சமாதியில். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்புத் தம்பி டாக்டர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பேசினார்கள். மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். LINAC, Palliative Care, DNB; உங்களுடைய பேச்சைக் கேட்டு நாங்கள் எப்படி மகிழ்ச்சியாக இருந்தோமோ, இந்த அறிவிப்பைக் கேட்டு நீங்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவீர்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

***திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புவி தந்த வரமாக, புகழ் தந்த தவமாக, காலம் தந்த கொடையாக, கடவுள் தந்த விடையாக, கழகம் தந்த தனிமனிதப் படையாக, உலகம் வியக்கும் வண்ணம் ஈகைக்கும் வாகைக்கும் இலக்கணம் வகுத்து, இருபத்தோராம் நூற்றாண்டு இப்படியோர் தலைவரைக் கண்டதில்லை என்கிற அதிசயத்தைப் படைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னமிட்ட தாயாக, அறிவு தந்த கலைமகளாக, வீரத்தைப் போதித்த வெற்றித் திருமகளாக, விண்முட்ட வந்தாலும் விழி சிமிட்டா வீரத்தின் இலக்கணமாக, மீண்டும் வலியோரது பரண்களில் கிடத்தி வைக்கப்பட்ட அரசியலை எளியோரது கரங்களில் அமர்த்தி வைத்த பொதுவுடைமைப் போராளியாக, ஆணுக்குப் பெண் சமம் என்கிற அரசியல் புரட்சி படைத்த அற்புதமாக, உலகின் புனிதர் பட்டம் பெற்ற அன்னை தெரசாவும் இல்லம் தேடிவந்து வாழ்த்துகிற மனிதப் புனிதமாக, மக்கள் மனங்களைக் கணிக்கின்ற துல்லிய கணிதமாக, என் வாழ்வும் எல்லாமும் மக்களுக்காக என்கிற தத்துவத்தை தலைமேல் சுமந்த மகோன்னதத்தின் வடிவாக வாழ்ந்து, இன்று வங்கக் கடலோரம் துயில்கொண்டு, கழகம் என்கிற இமயப் பேரியக்கத்தை வெற்றிப் பாதையில் வழிநடத்த

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [*2017 ஜூலை 4*

வியூகங்களை உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நான் வணங்கும் இதய தெய்வம் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி என் கண்ணீர் கசியும் வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீழாதா கழகம் என விழிநோக்கிக் காத்திருந்த விரோதிகளும், அந்த விரோதிகளுக்கு துணைபோன துரோகிகளும் கூடிச் சேர்ந்து கவிழ்த்துவிடலாம் என்று கனாக் கண்ட கொடுமைகளை கூவத்தூர் ஒற்றுமையால் தகர்த்தெறிந்து, எனக்குப் பின்னாலும் கழகம்தான் ஆளும் என்கிற ஆழ்மனத்து நம்பிக்கையை முன்வைத்துப்போன அம்மாவின் சபதத்தை கண்துஞ்சாது, பசிநோக்காது போராடி மாண்புமிகு எடப்பாடியார் தலைமையில் கழக அரசை அமைத்து, தாய் கண்ட கனவுகளை முன்னெடுத்துச் செல்லுங்கள். தமிழகத்து மக்களுக்கு அம்மா தந்த வாக்குறுதிகளை அணுவளவும் குறையின்றி நிறைவேற்றிக் காட்டுங்கள் என அறிவுறுத்திவிட்டு, இன்று நட்புக்கே இலக்கணம் வகுத்தவராக அம்மாதான் உலகம் என தன் ஆயுளையே கரைத்தவராக, நட்பையே கற்பு என்று நாளெல்லாம் போற்றியவராக, அடுக்காத பழிகளையெல்லாம் நான் சுமக்கிறேன். ஆனால், அம்மாவின் அரசாட்சியை நீங்கள் முன்னெடுத்துச் செல்லுங்கள் என்று பாதை அமைத்துக் கொடுத்த, எங்கள் வாழ்நாள் கழகப் பொதுச் செயலாளர், தியாக மங்கை சின்னம்மா அவர்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்தில் எந்த பாவத்தைச் செய்தாலும், அந்தப் பாவத்திற்குப் பரிகாரம் உண்டு. அந்தப் பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு பல வழிகள் உண்டு. ஆனால், நன்றி மறப்பவர்களுக்கு அந்தப் பாவத்திலிருந்து விடுபட வாய்ப்பே இல்லையென்று சொன்னது உலகப் பொது மறை. (குறுக்கீடுகள்) யார் என்று கேட்டால் எப்படி? நான் பேசுவதை முழுவதுமாகக் கேளுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் இருக்கையில் அமர்ந்தவாறு ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அமர்ந்துகொண்டு பேசாதீர்கள்.*

2017 ஜூலை 4]

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: நான் மீண்டும் சொல்கிறேன். உலகத்தில் எந்தப் பாவத்தைச் செய்தாலும், அந்தப் பாவத்திற்குப் பரிகாரம் உண்டு. அந்தப் பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு பல வழிகள் உண்டு. ஆனால், நன்றி மறப்பவர்களுக்கு அந்தப் பாவத்திலிருந்து விடுபட வாய்ப்பே இல்லையென்று சொன்னவர் உலகப் பொது மறை தந்த புலவன் வள்ளுவன்.

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற ஈரடி குறளால், ஆறடி மனிதனுக்கு அறிவித்துப் போனவன் வள்ளுவன். அந்த வள்ளுவன் குறளுக்கு வடிவம் தருகிற நல்லோரில் ஒருவராக நான் இருக்கிறேன் என ஆட்சியைப் படைத்துக் கொடுத்த அம்மாவிற்கும், இந்த ஆட்சியைக் கவிழாது பாதுகாத்துக் கொடுத்த சின்னம்மா அவர்களுக்கும் நன்றி பாராட்டும் நல்லவராகவும், தமிழகத்து மக்களுக்கு நல்லாட்சி வழங்கி, நான் அம்மாவிடம் அரசு நிருவாகத்தைப் பயின்றவன் என்பதை நிரூபிக்கின்ற விதத்தில், கானகம் போன இராமன் திரும்பி வரும்வரை, அவனது பாதுகையை வைத்து, கோசலை நாட்டை வழிநடத்திய பண்புக்கு இலக்கணம் வகுத்த பரதன் போல, நெருக்கடியான இந்த நேரத்தில், விசுவாசம் குன்றாத வெற்றித் தளபதியாக, கழக அரசை கடுமையான சவால்களுக்கு நடுவே முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வாழ்த்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் குறிக்கோளை ஏற்று, அன்பு, அறிவு, துணிவு என்ற கோட்பாடோடு வெற்றிநடை போடும் எங்கள் பாசமிகு அண்ணன், கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றரைக் கோடி தொண்டர்களும் தங்களது இல்லத்துத் தெய்வமென உள்ளத்தில் வைத்துப் போற்றுகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பெரிதும் பிடித்த துறைகள் இரண்டு. ஒன்று, மக்களின் உயிர் காக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறை, இன்னொன்று மக்களின் உயிரோடு அவர்களின் உடைமைகளையும் காக்கின்ற உள் துறை எனப்படுகிற காவல்

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [*2017 ஜூலை 4*

துறை. அப்படிப்பட்ட இரண்டு துறைகளில் ஒன்றான மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே அதிகமான மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் தமிழகம். அந்தப் பெருமையை உருவாக்கித் தந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற இலட்சியத்தை, ஏறத்தாழ அதனை உறுதிசெய்துவிட்ட மாநிலமாக தமிழகம் இன்று திகழ்கின்றது. ஒரு காலத்தில் எமனின் ஏஜென்ட் என்று எள்ளி நகையாடப்பட்ட அரசு மருத்துவமனைகளெல்லாம், இன்று தனியார் மருத்துவமனைகளையெல்லாம் மிஞ்சுகிறவகையில் அவற்றை மாற்றிக் காட்டியது மட்டுமல்லாமல், முழுமையான மருத்துவக் காப்பீட்டின்மூலம் ஏழையாகப் பிறந்ததால் இன்னுயிரைத் துறந்தார்கள் என்ற விரக்தி நிறைந்த வார்த்தைக்கு முழுமையாக விடை கொடுத்த மாநிலம் தமிழ்நாடு என்கிற புரட்சியை நம் அம்மாவின் அரசாட்சி நிலைநாட்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற சித்தர்கள் பிறந்த தமிழ்நாடு' என்று உலகமே போற்றிப் புகழ்பாடும்வண்ணம், சித்தா, யுனானி, இயற்கை வைத்தியம் உள்ளிட்ட மாற்று முறை வைத்திய முறைகளுக்கும் ஒரு மரியாதையை உருவாக்கித் தந்து தமிழர்தம் பாரம்பரியமிக்க மருத்துவத்துக்கு மகுடம் சூட்டியிருப்பது நமது தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைதான்.

அதுமட்டுமல்லாமல், பிரசவ கால குழந்தைகள் இறப்பு விகிதத்தில் குறைவாகக் கொண்டு இந்தியர்களின் ஒட்டுமொத்த சராசரியைப் பின்னுக்குத் தள்ளி புரட்சி படைத்திருப்பதும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தாக்கிய பேரிடர் பெருவெள்ளம்,

2017 ஜூலை 4] [திரு. தங்க. தமிழ்ச்செல்வன்]

தானே புயல், வர்தா புயல், வரலாறு காணாத வறட்சி போன்ற இயற்கை விளைவித்த இன்னல்களின்போதெல்லாம், வழக்கமாகப் பரவுகின்ற தொற்று நோயிலிருந்து முழுமையாக விழிப்போடு செயலாற்றி பல நாடுகளுமே தமிழகத்தை விழிவிரித்துப் பார்க்கும் வண்ணம் செம்மையோடு செயலாற்றும் துறையும் நம் அம்மா அவர்கள் வழியிலான மக்கள் நல்வாழ்வுத் துறைதான்.

முறைகேடுகள் இல்லாத நியமனங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நியமிக்கப்படும் ஊழியர்கள், கலந்தாய்வுகள் நடத்தி மட்டுமே மேற்கொள்ளப்படும் பணியிட மாற்றங்கள் என நிருவாகத்தில் தூய்மை, சர்வதேசத் தரத்திற்கு நிகரான அளவில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனைகளை உருவாக்கும் முனைப்பு, சவால்கள் நிறைந்த மருத்துவச் சாதனைகளைப் புரிந்து நாடே பாராட்டும்வண்ணம் தமிழக அரசின் மருத்துவர்கள் செயலாற்றுவதற்கான ஊக்குவிப்பு என்றெல்லாம் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை சுழன்று பணி செய்து வருகின்றது.

விபத்து மற்றும் இன்னல்களிலிருந்து உயிருக்குப் போராடுபவர்களை காலத்தே மீட்டு, மருத்துவமனைகளில் சேர்த்து அவர்கள் உயிர் பிழைக்க அருந்தொண்டாற்றிவரும் 108 அவசர சிகிச்சை வாகன சேவையைப் போலவே, நோய் குறித்தான தகவல்களையும், விழிப்புணர்வுகளையும் சாதாரண ஏழை எளியோரும் அறிந்துகொள்ளும் வகையில் நம் அம்மா அவர்களின் பொற்கரங்களால் தொட்டு துவங்கி வைத்த 104 மருத்துவச் சேவை; இதுமட்டுமல்லாமல், கர்ப்பிணிப் பெண்களும், கர்ப்ப காலம் தொடங்கி, பிள்ளைப்பேறுக்குப் பிறகு 6 மாத காலம்வரை ஊக்கத் தொகையோடு கூடிய உதவிகளும், மருத்துவ சிகிச்சைகளும், பல்வேறு மருத்துவ சோதனைகளையும் வழங்கி இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அளப்பரிய சாதனைகளைப் படைத்திருக்கின்றது.

உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் என பல்லாயிரம் பேர் நாளுக்குநாள் சிகிச்சைபெறும்வண்ணம் செயலாற்றிவரும் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போலவே இப்போது தலைநகரத்தில் மட்டும் உள்ள இந்த விரிவான மருத்துவ வாய்ப்புகளும், சேவைகளும்

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [*2017 ஜூலை 4*

மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதோடு, இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அனைத்து ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள் என அனைவரும் வியந்துபோற்றும்வண்ணம் பல அரிய வெற்றித் தடங்களைப் பதித்து செயல்படுகிறது தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை.

இந்த மணிமகுடங்களில், மத்திய அரசின் சார்பில் மேலும் ஒரு முத்தைப் பதிக்கின்றவிதமாக விரைவில் தமிழகத்தில் AIIMS மருத்துவமனை அமைய இருக்கின்றது. இது ஒரு மகிழ்வு தருகிற செய்தியாகும். அது அமைய இருக்கும் இடம் மதுரையாக இருந்தால் இன்னும் சந்தோஷம் அதிகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

> 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்பதைப்போல், நோய்க்கான மூல காரணங்களை அறிந்து, அவற்றை அடியோடு தடுக்கும்வண்ணம், நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி மருத்துவத்தையும் தமிழக அரசு வெகு முனைப்போடு கையாண்டு வருகிறது. இதில் சித்த மருத்துவம் மற்றும் இயற்கை மருத்துவத்தையும் ஈடுபடுத்தி, டெங்கு போன்ற தொற்று நோய்களை வென்றெடுத்த நிகழ்வுகளின்மூலம் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை பரவலான பாராட்டுகளை அள்ளிக் குவித்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் புவி வெப்பமயமாதல், இயற்கையின் சுழற்சியில் ஏற்படும் மாற்றம், உணவுப் பழக்கங்களில் ஏற்பட்டிருக்கும் தவறுகள், வெகுவான மன அழுத்தத்தைக்கொண்டு வாழும் மானுடத்தின் போராட்ட வாழ்க்கை என நோய் பரவலாக்கத்திற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றபோது, இவை அனைத்திற்கும் மிகச் சிறந்த தீர்வாக உடற்பயிற்சி மற்றும் பாரதத்தின் பழமையான யோகக் கலை, உணவே மருந்து, மருந்தே உணவு என்று சித்தர்கள் போதித்த வாழ்வியல் முறை போன்றவற்றையும் இன்னும் கூடுதலாக ஆராய்ச்சி செய்து, தமிழர்தம் பாரம்பரிய மருத்துவத்திற்கு நம் அம்மா வழியிலான அரசு ஆவன செய்திட வேண்டும் என்பதை என் அன்பான வேண்டுகோளாக வைக்கின்றேன்.

நமது நற்றன்னை கட்டிக் காத்த இந்த நல்லோர் இயக்கத்தை, நமது சிற்றன்னை தமது தியாகத்தால் காத்துத் தந்த இந்த நான்கு வருட நல்லாட்சியை, இனிவரும் காலங்களில் நூற்றாண்டுகளுக்கான வலிமைமிக்க ஆட்சியாக மாற்றுவதற்கு ஒற்றுமையோடும், ஒன்றரை கோடி தொண்டர்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்கிற பற்றுதலோடும் செயல்படுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) 'என் மக்கள் எதற்காகவும், யாரிடத்திலும் கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்குவேன்' என்று சொன்னவர், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சத்தியத் தாயாகிய அம்மா அவர்களின் சூளுரையை சாத்தியமாக்கிட, அதனை சரித்திரமாக்கிட, ஒன்றிணைந்து உழைப்போம். 'தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம், ஓர் வழி நின்று, நேர்வழி சென்றால் நாளை நமதே' என்று கழகத்தின் நிறுவனத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் போதித்தப் பாதையில் நாம் சாதித்து வெல்லவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு பிறந்த நாளில் உறுதி ஏற்போம். (குறுக்கீடு) தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை மட்டும் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். அவற்றையெல்லாம் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரமிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமில்லை, தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளைக் கொடுத்தால், பதிவு செய்துகொள்ளலாம். நீங்கள் தண்ணீர் குடித்துவிட்டுக் கொடுங்கள், பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

[*2017 ஜூலை 4*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *கடந்த 2016–ல் நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் தமிழ்நாடு முழுவதற்குமான திட்டத்தைச் சொல்வார்கள்; தொகுதி சம்பந்தமாகவும் சிலவற்றைச் சொல்வார்கள். குறிப்பாக, 'ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் திப்பரவு அணைத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம்' என்று தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் சொன்னது. அம்மா அவர்களின் அரசு முடிந்து, நாம் தேர்தலை சந்திக்கின்றோம். ஆண்டிப்பட்டி என்றாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கோட்டை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோட்டை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தேர்தல் அறிக்கையைவிட்ட போதும், அந்த மக்களிடத்திலே நான் சென்று, அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்றும் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொல்லவில்லை என்றாலும், அந்தத் திட்டத்தை இப்பொழுது உடனடியாகக் கொண்டு வருவதற்கான வேலையைச் செய்வேன் என்று மக்களிடம் நான் தேர்தல் நேரத்தில் கேட்டுக்கொண்டேன். தேர்தலில் வெற்றி பெற்று இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நமது ஆட்சியில் அந்தக் கோரிக்கையை வைத்தபொழுது, வைகையாற்றிலிருந்து நீரை எடுத்து, ஆண்டிப்பட்டி யூனியனுக்குட்பட்ட 10 பெரிய கண்மாய்களை சர்வே செய்து, அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு நிதியை ஒதுக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு முதலில் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இரண்டாவதாக, ஆண்டிப்பட்டி தொகுதி தமிழ்நாட்டில் மிகப்பெரிய தொகுதி என்று நினைக்கிறேன். உசிலம்பட்டியில் ஆரம்பித்து குமுளி வரையிலும், இந்தப் பக்கம் திண்டுக்கல் வரையிலும் போக வேண்டும், இடையில் 3 தொகுதிகளை கடக்க வேண்டும். அது அவ்வளவு பெரிய தொகுதி. குமுளியில் என்ன பிரச்சினை என்று சொன்னால், National Highway 40 அடி ரோடு. Left side–லும் forest, right side–லும் forest; உள்ளே போக முடியாது. அந்த 40 அடி பாதையில்தான் மக்களும் நிற்க வேண்டும்; பேருந்தும் நிற்க வேண்டும். பேருந்து நிலையம் அமைப்பதற்கு அங்கே இடமே இல்லை. குமுளியில் பேருந்துப் பணிமனை ஒன்று இருந்தது. அதை நான் தேர்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கின்றபொழுது,

2017 ஜூலை 4] [திரு. தங்க. தமிழ்ச்செல்வன்]

அந்தப் பேருந்து பணிமனையை கீழே கொண்டு வருவதற்கு எனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.80 இலட்சத்தைக் கொடுத்தேன். அந்தப் பேருந்து பணிமனையும் கீழே வந்துவிட்டது. இப்பொழுது அந்தப் பேருந்து பணிமனை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைக் கட்டிக் கொடுத்தால் கோடிக்கணக்கான ஐயப்ப பக்தர்கள், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் வியாபாரப் பெருமக்கள் வந்து சிறப்பு செய்வதற்கு ஏற்ற இடமாக அந்தப் பேருந்து பணிமனை இருக்கும். ஏனென்றால், அதற்காக நான் 5 வருடங்கள் போராடியிருக்கிறேன். அந்தப் பேருந்து பணிமனையைக் கீழே கொண்டுவந்து கட்டுவதற்கு 5 வருடங்கள் ஆயின. அவ்வளவு சட்டச் சிக்கல் இருந்தது. இடத்தை வாங்க வேண்டும்; இடத்தை மாற்ற வேண்டும்; மின்சாரத் துறையும், போக்குவரத்துத் துறையும், உள்ளாட்சித் துறையும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்; இப்படிப்பட்ட காலகட்டங்களில், இறுதியாக அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. தயவுகூர்ந்து அதை இந்த ஆண்டே நிறைவேற்றித் தர வேண்டும்.

பிற்பகல் 2–10

அடுத்து, தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மதுரை மாவட்டம் என்றாலே, செல்வாக்குமிக்க மாவட்டம் என்று தெரியும். அதற்கு முன்னாலே, திண்டுக்கல் மாவட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வெற்றி பெறச் செய்த மாவட்டம். தேனி மாவட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி பெற்று முதலமைச்சரான மாவட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்களும் வெற்றி பெற்று முதலமைச்சரான மாவட்டம். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை lower camp–ல் எடுத்து மதுரைக்குக் கொண்டுச் செல்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்த்து ஒட்டுமொத்த மதுரை மாவட்டமாக இருந்தது. தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் அந்தத் திட்டத்தை இணைத்து செயல்படுத்தினால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் மாவட்டங்களாக

[திரு. தங்க. தமிழ்ச்செல்வன்] [*2017 ஜூலை 4*

இந்த மூன்று மாவட்டங்களும் இருப்பதால் தயவுகூர்ந்து அந்தத் திட்டத்தில் மூன்று மாவட்டங்களையும் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவதாக, எங்கள் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, polytechnic, கலைக் கல்லூரி என எல்லாக் கல்லூரிகளும் இருக்கின்றன. சட்டக் கல்லூரி மட்டும் இல்லை. அடுத்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்ட ஆண்டிப்பட்டியில் சட்டக் கல்லூரி தந்து சிறப்புச் சேர்க்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், வருங்காலப் பிரதமர், இளந்தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சு. திருநாவுக்கரசர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்த சில கோரிக்கைகளை அவைமுன் பதிய வைத்தபிறகு, தமிழ்நாடு அளவிலுள்ள கோரிக்கைகளை இங்கே அவைமுன் பதிய வைக்கலாம் என்று நான் எண்ணுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், மற்ற மாவட்டங்களை ஒப்பிடும்போது கதிர்வீச்சு அதிகமுள்ள மாவட்டமாகும். குறிப்பாக, இந்தக் கதிர்வீச்சு, ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாஹி போன்ற நகரங்களில் அணுகுண்டு விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பைவிட தற்போது 40 மடங்கு கதிர்வீச்சு அதிகமுள்ள மாவட்டமாகும். மேலும், இம்மாவட்டத்தில் கடலோரக் கிராமங்களிலுள்ள கடல் மணலில் மோனாக்சைடு எனப்படும் தாதுப் பொருள் அதிகமாகக் காணப்படுகிறது. கடந்த 2006 ஆம்

2017 ஜூலை 4] [திரு. செ. ராஜேஷ் குமார்]

ஆண்டில் மாவட்ட நிருவாகத்தின் அறிக்கையின்படி, ஆல்பா கதிர்வீச்சு 9,780BQ/KG மற்றும் பீட்டா கதிர்வீச்சு 69,260BQ/KG என்ற அடிப்படையில் உள்ளது. இதன் காரணமாக, எங்களுடைய மாவட்டத்தில் புற்றுநோய் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதனால் புற்றுநோய் பாதிப்புக்குள்ளான மக்கள் சிகிச்சைக்காக அண்டை மாநிலமான கேரளாவிலுள்ள திருவனந்தபுரம் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள வேலூர் மாவட்டம் மற்றும் தலைநகரமான சென்னை போன்ற பகுதிகளுக்கு சிகிச்சைக்காக செல்லும் நிலை உள்ளது. எனவே, அரசு சார்பில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் மற்றும் அதிநவீன புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு போன்ற வசதிகளை பொது மக்களுடைய வாழ்வாதாரம் மற்றும் நலனைக் கருத்தில்கொண்டு கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உடனடியாக அமைக்க அனுமதி வழங்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு தாலுகாவிற்குட்பட்ட பொது மக்கள் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு பிரசவத்திற்காகவும் மற்றும் விபத்தில் காயம் அடைந்தோர், நோயாளிகள் ஆகியோர் சிகிச்சைக்காகவும் செல்லும்போது பல நோயாளிகளுக்கு இரத்தம் தேவைப்படுகிறது. அதற்காக நோயாளிகள் தங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களை அழைத்துக் கொண்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு வரும்போது மருத்துவமனையிலுள்ள டாக்டர் மற்றும் பணியாளர்கள், 'இங்கு இரத்தம் எடுப்பதற்கான வசதிகள் இல்லை; எனவே, அவர்களை தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இரத்தம் எடுத்து வாருங்கள்' என்று டாக்டர்கள் ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்து, சுமார் 17 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தக்கலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கின்றனர். இதனால் நோயாளிகள் பாதிக்கப்படுவதோடு கால விரயமும் ஏற்படுகின்றது. இரத்தம் கொடுப்பதற்காக அழைத்து வரப்படும் நபர்களும் கடும் அலைச்சலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எனவே, தயவுகூர்ந்து உடனடியாக குழித்துறை அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி மற்றும் அதற்கான பணியாளர்களை நியமனம் செய்து பொது மக்களின் உயிர் காக்க உதவிடுமாறு அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. ராஜேஷ் குமார்] [*2017 ஜூலை 4*

பிற்பகல் 2–15

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், மிடாலம் ஊராட்சிக்குட்பட்ட மிடாலம் பகுதியில் 2006 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அதன் பிறகு அது சம்பந்தமாக அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எனவே, மிடாலம் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டால் குறும்பனை முதல் தேங்காய்ப்பட்டினம் வரையிலும் உள்ள கடலோரக் கிராம மக்களுக்கும் மற்றும் தெருவுக்கடை, கானாவூர், உதயமார்த்தாண்டம், சகாயகிரி, ஆலஞ்சி, மங்கலக்குன்று, தேவிகோடு, குற்றிப்பாறவிளை போன்ற கரையோரக் கிராம மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மிடாலம் பகுதியில் மக்கள் பயன்பாட்டிற்காக புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் துவங்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Zika virus எனும் தொற்றுநோய் கொசுவினால் பரவுகிறது. குஜராத்தில் பரவுவதாக முதலில் கூறப்பட்டது. ஆனால், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கருத்தில்கொண்டு குஜராத் அரசு இதனை முதலில் மறுத்தது. ஆனால், உலக சுகாதார அமைப்பு– WHO, 2016–ல் குஜராத்தில் இதனைக் கண்டுபிடித்து உறுதி செய்தது. இதனுடைய தாக்கம் கர்ப்பிணிப் பெண்களின்மேல் இருக்குமானால் குழந்தைகள் ஊனமாகப் பிறக்க நேரிடும். இது தமிழ்நாட்டில் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதுபோல் கேரளாவில் டெங்கு காய்ச்சலுக்கு இதுவரை 100–க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். கேரள மாநில எல்லையை ஒட்டியிருக்கும் பகுதிகளிலும் இது பரவிவருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. குறிப்பாக கன்னியாகுமரி, நெல்லை, தேனி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட நிருவாகம் மக்கள் மத்தியில் இது சம்பந்தமாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட உத்தரவிட வேண்டும். நெல்லை மாவட்டத்தில் 120–க்கும் மேற்பட்டோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஏற்கெனவே செய்தித்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இந்த நோயின் தாக்கம் இருப்பதாக அறிந்துகொள்ள முடிகிறது. இந்த நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4] [திரு. செ. ராஜேஷ் குமார்]

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமீபத்தில் 117 குழந்தைத் தொழிலாளர்கள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற நிகழ்வுகள் மேலும் நடக்காதவண்ணம் கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிருவாகத்திற்கு இந்த அரசு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது மாவட்டத்தில் முக்கியமான ஒரு பிரச்சினை, கூட்டுறவு பயிர்க் கடன் வழங்குதல் சம்பந்தமானதாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்த வாய்மொழி பாட்டம் குத்தகை அடிப்படையில் பயிர் சாகுபடி செய்யும் நலிந்த விவசாயிகளுக்கு மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படுகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் பயிர்க் கடன் வழங்கப்படவில்லை. இப்போது எங்களுடைய மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. விவசாயம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை இருப்பதால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு, தொடர்ந்து நீண்டகாலமாகப் பின்பற்றி வந்த வாய்மொழி குத்தகை பாட்டக்காரர்களுக்கு பயிர்க் கடன் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு தற்போது பட்ஜெட் தொகையில் 3.2 சதவிகிதம் முதல் 4.9 சதவிகிதம் வரை மட்டுமே மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக செலவு செய்கிறது. அண்டை மாநிலமான கேரளா 5.5 சதவிகிதமும், மகாராஷ்டிரா, கோவா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் 5 சதவிகிதங்களுக்கு மேலாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் செலவு செய்கிறது. தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அளவில் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 41,000 மக்களுக்கு ஒன்று என்ற அளவில் இயங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 1,675 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் 405 மட்டும் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களாக இயங்கி வருகின்றன. NITI Aayog–ன் 2011, 2012, 2013–வது ஆண்டு அறிக்கையின்படி தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் என்பது ஒரு இலட்சம் பிரசவத்திற்கு 79 என்ற அளவில் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் Institutional delivery குறைவாக இருப்பதே ஆகும். எனவே, ஆரம்ப சுகாதார நிலையத்தின் எண்ணிக்கையை உடனடியாக அதிகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்டம், Comprehensive Health Insurance Scheme–ன்கீழ் ஒரு குடும்பத்திற்கு ஒரு

[திரு. செ. ராஜேஷ் குமார்] [*2017 ஜூலை 4*

வருடத்திற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் ரூபாயை மேலும் அதிகரிக்க வேண்டும். சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.2 இலட்சம், மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அரசு மருத்துவர்கள், தனியார் மருத்துவமனைகளில் வேலை செய்வது மற்றும் சொந்தமாக மருத்துவமனைகள் வைத்திருப்பதை முறைப்படுத்தும் விதமாக தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

அரசு மற்றும் அரசு சார்புடைய நிறுவன ஊழியர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது சட்டமாக்கப்பட வேண்டும். இதை மீறுவோர்களுக்கு அரசு வழங்கி வரும் மெடிக்கல் அலவன்ஸ் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இது குறித்து அரசு விதி மற்றும் வருமான வரித் துறையின் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் முன்மொழிவினை தமிழக அரசு மத்திய அரசிற்கு உடனடியாக அனுப்ப வேண்டும்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரக மருத்துவப் பிரிவு சிறப்பாகச் செயல்பட்டாலும், போதிய அளவில் டயாலிசிஸ் கருவிகள் இல்லாததால் சிறுநீரகச் செயலிழப்புக்கு உள்ளாகி உள்ள நோயாளிகளுக்குத் தொடர்ந்து டயாலிசிஸ் சிகிச்சை வழங்க முடியாத நிலை உள்ளது. இதனால் நோயாளிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். எனவே, இத்துறைக்கு அதிக எண்ணிக்கையிலான டயாலிசிஸ் கருவிகளை வழங்கிட வேண்டும்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் அளிக்கலாம் என்றிருந்தேன். நோயாளிகள் திருப்பி அனுப்பப்படுவது குறித்துச் சொன்னீர்கள். சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்பது, பிரதானமான மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகும். அதில் Urology Department மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. Dialysis கருவிகள் போதிய

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அளவில் இல்லையென்ற காரணத்திற்காக நோயாளிகள் திருப்பி அனுப்பப்படுகிற நிலை நிச்சயமாக கிடையாது. அதேபோல் Dialysis கருவிகளைப் பொருத்தவரை சர்வதேச தரத்தோடு (International standard), ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் வைத்துள்ளோம், KMC மருத்துவமனையிலும் வைத்துள்ளோம், ஸ்டான்லி மருத்துவமனையிலும் வைத்துள்ளோம். சென்னையில் உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற எந்த நிலைமையும் இல்லை. படிப்படியாக மற்ற இடங்களுக்கும் சிறப்பான சேவை விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது என்பதை அன்போடு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

PHC பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் 30 ஆயிரம் மக்கள்தொகைக்கேற்ப PHC இல்லையென்று சொன்னீர்கள். அது தவறான தகவல். PHC–ஐப் பொறுத்தவரைக்கும் 30 ஆயிரம் மக்கள்தொகைக்கு ஒரு PHC இருக்க வேண்டும் என்று உள்ளது. பல இடங்களில் 20 ஆயிரம் மக்கள்தொகையும், மலைப் பகுதிகளில் 10 ஆயிரம் மக்கள் தொகையும் இருக்கும் இடங்களிலெல்லாம்கூட PHC உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் அதிகமாக 1,751 PHC–க்கள் இருக்கின்றன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Institutional delivery பற்றி உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதில் நீங்கள் கூறிய சதவிகிதம் என்பது தவறானது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் 99.8 சதவிகிதம் Institutional delivery உள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இப்படிக் கிடையாது. அதுமட்டுமல்லாமல் delivery–ஐப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டில் நடக்கும் ஒட்டுமொத்தப் பிரசவத்தில் 68 சதவிகிதம் அரசு மருத்துவமனைகளில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாகப் பதில் சொல்லியுள்ளார்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

[*2017 ஜூலை 4*

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களைக் கொஞ்சமாவது பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்து நிமிடங்கள் பேசியுள்ளீர்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட, வட்டார மருத்துவமனைகளிலும் சிறுநீரக நோயாளிகளுக்கான dialysis வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் அல்லவா? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே தொடங்கவில்லை. மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களான கரூர், திருவள்ளூர், இராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல், திருப்பூர், அரியலூர், பெரம்பலூர், விருதுநகர், நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். AIIMS மருத்துவக் கல்லூரியைத் தமிழகத்தில் விரைவாகத் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் 65 விழுக்காடு இடங்களையும், வேலைவாய்ப்பையும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியை, தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். அங்கு படிக்கும் மருத்துவ மாணவர்களுக்கு, தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும்.

அரசு மருத்துவர்களுக்கு, முதுநிலை மருத்துவக் கல்வியில், கிடைத்துவந்த 50 சதவிகித இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தி இந்திய மருத்துவக் கழகத்தின் விதிமுறைகளில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும். DM/ Mch. போன்ற உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 192–க்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. வேறு மாநிலங்களில் இந்த

2017 ஜூலை 4] [திரு. செ. ராஜேஷ் குமார்]

அளவிற்கு அதிகமான இடங்கள் இல்லை. 10 மாநிலங்களில் ஒரு இடம் கூட இல்லை. 10 மாநிலங்களில் ஒற்றை இலக்கத்தில்தான் இடங்கள் உள்ளன. இந்நிலையில், நமது இடங்கள் அனைத்தையும், அகில இந்திய அளவில் பொதுப் போட்டிக்கு விட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால், தமிழகத்தின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் உள்ள உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் மற்றும் அனைத்து மருத்துவ இடங்களும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே கிடைத்திட ஆந்திராவைப் போல் சட்டம் கொண்டு வர வேண்டும். தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இளநிலை, முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவ இடங்களுக்கு NEET நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். காப்பீடு திட்டத்தில் அரசு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முடிக்கச் சொல்கிறார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட வேண்டும். ஒப்பந்தப் பணியாளர்கள், தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். அகில இந்தியத் தொகுப்புக்கான, மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் பொதுப் போட்டி இடங்கள் அனைத்தையும் முன்னேறிய வகுப்பினருக்கு மட்டுமே வழங்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை எடுப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்திட தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

[திரு. செ. ராஜேஷ் குமார்] [*2017 ஜூலை 4*

உறுப்புதான அறுவைச் சிகிச்சைக்கான உறுப்புகளைப் பெறுதல் மற்றும் வழங்குதல் தொடர்பான அமைப்பின் அதிகாரத்தை, மத்திய அரசு பறிப்பதாகச் செய்திகள் வெளியாகின்றன. அதாவது, மூளைச்சாவிற்கு உள்ளானவர்களின் உறுப்புகளைப் பெற்று, எந்த நோயாளிக்கு வழங்க வேண்டும் என்பதற்கான பட்டியலை நிருவகிக்கும் பொறுப்பை மத்திய அரசு தமிழகத்திடமிருந்து பறிப்பது ஏற்புடையதல்ல. உறுப்புதான அறுவைச் சிகிச்சையில் தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர், இந்தப் பக்கத்துடன் உரையை முடிக்க வேண்டும்.

திரு. செ. ராஜேஷ் குமார்: என்னுடைய கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கடலோரக் கிராமங்களான இரவிபுத்தன்துறை, வள்ளவிளை பகுதிகளில் கடல் பேரலையின் காரணமாக, இரவிபுத்தன்துறையில் 21 வீடுகளும், வள்ளவிளையில் 8 வீடுகளும் முழுவதுமாக கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டன. இந்த வீடுகளில் வசித்த மக்கள் இப்போது Disaster Management அதாவது தேசிய பேரிடர் மேலாண்மைக் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாவட்ட நிருவாகம் உடனடியாகத் தலையிட்டு மக்களுக்கான வாழ்வாதாரத்தைக் காத்திட தங்கள் அரசு நல்லது செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–25

எனது தொகுதியில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சின்னத்துறை பகுதியில் 2 கோடியே 4 இலட்சம் ரூபாயும், அதுபோல் பூத்துறை பகுதிக்கு 15 கோடி ரூபாய்க்கு தூண்டில் வளைவும் ஏற்படுத்துவதற்காக ஏற்கெனவே நிதியை ஒதுக்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

2017 ஜூலை 4]

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக தங்களுக்கும், மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதில் அளிக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், அதோடு சிறிய சிசிச்சைக்காக வேண்டி அனுமதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் விரைவாகக் குணம் பெற்று அவைக்கு வர நானும் பிரார்த்து, வாழ்த்துகின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் நடமாடும் மருத்துவமனை பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தை கிராமங்கள், வனப் பகுதி உள்ளிட்ட பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் விரிவுபடுத்தினால், அந்த மக்களுக்கெல்லாம் பயனுள்ளதாக இருக்கும். என்னுடைய தொகுதியில்கூட அந்தத் திட்டத்தை பயன்படுத்தினால், அந்தப் பகுதி மக்கள் எல்லாம் பயன்பெறக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு இருக்கின்றது. அதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் First Responder Bike Ambulance, இரு சக்கர அவசர கால ஊர்தித் திட்டம் என்பது ஒரு நல்ல திட்டம். கிராம மக்கள், வனப் பகுதி மக்கள் இந்தத் திட்டத்தின்மூலம் முழுமையாகப் பயன்பெற்றால் நன்றாக இருக்கும். அந்தக் கிராமங்களுக்கு, வனப் பகுதிக்கு தற்போது ஆம்புலன்ஸ் மூலமாக வாரத்திற்கு இரண்டு முறையோ, மூன்று முறையோதான் மருத்துவர்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதனால், இந்தத் திட்டத்தின் மூலமாக எளிதில் அங்கே சென்று, அவர்களுக்கு மருத்துவ உதவியைச் செய்ய முடியும்; அதையும் ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தியமைக்கப்பட்ட பள்ளி சுகாதாரத் திட்டம். இந்தத் திட்டத்தை எல்லா பள்ளிக்கூடங்களிலும் வாரத்திற்கு இரண்டு முறையோ, மூன்று முறையோ மாணவர்களை எல்லாம் பரிசோதனை செய்யக்கூடிய திட்டமாக இதனை மாற்றியமைத்தால் நன்மை பயக்கும் என்பதையும் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜூலை 4*

கொள்கை விளக்கக் குறிப்பில், மதுரை, தஞ்சாவூர், கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் புற்றுநோய்க்கான ஒரு மையத்தை 60 கோடி ரூபாயில் ஆரம்பிப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். இது ஒரு நல்ல திட்டம். ஏற்கெனவே, Regional Cancer Centres (RCC), திருவனந்தபுரம், பெங்களூர், கொல்கத்தா, மும்பையில் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. வெளியில் மருத்துவம் செய்யும்போது ஏற்படும் செலவில் பத்து சதவிகிதம்தான் அங்கே கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. அதைப்போன்ற ஒரு தரம் வாய்ந்த cancer centre–களை இங்கும் உருவாக்க வேண்டும். திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கு மருத்துவத்திற்குச் செல்கிறார்கள். ஆனால், கேன்சர் போன்ற நோய்களை ஒரு நாளில் குணப்படுத்திவிட முடியாது. பல நாட்கள் அங்கே தங்கி பரிசோதனை செய்து, சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த மையங்களில் போதிய அளவு தங்கும் வசதி, உணவு உள்ளிட்ட வசதிகள் இல்லாத நிலையுள்ளது. எங்கள் கட்சியின் சார்பாக, கேரளாவின் முன்னாள் முதல்வர் திரு. சி.ஹெச். முஹமது கோயா சென்டர் என்ற பெயரில், cancer patient தனியாகத் தங்குவதற்கு தனி அறை, அவர்களுக்கு மூன்று வேளை சாப்பாடு போன்றவை எல்லாம் வழங்குகின்றோம். நம் அரசாங்கத்தின் சார்பாகவே, அதுபோன்ற cancer centres–ஐ ஏற்படுத்தினால், அவை மக்களின் மிகப் பெரிய வரவேற்பைப் பெறும் என்பதை என்னுடைய தாழ்மையான கருத்தாக இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்பு, 211–வது பக்கத்தில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேர பிரசவ சேவை ஏற்படுத்தித் தரப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. என்னுடைய கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட புளியரையில் மகப்பேறு பெண் மருத்துவர் இல்லாத குறைபாட்டை ஒரு வருடமாக தொடர்ந்து நான் இங்கே சொல்லி வருகின்றேன். இந்த முறையாவது, நீங்கள் அறிவிப்பு செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு வசதிகள் செய்யும்பொருட்டு அங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. திருநெல்வேலி மாநகராட்சியைத் தூய்மை நகரமாக மாற்றக்கூடிய பணியின் காரணமாக, அங்கேயுள்ள குப்பைகளை எல்லாம் எடுத்துச் செல்லக்கூடிய பணி நடைபெற்று

2017 ஜூலை 4] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

வருகின்றது. எனவே, இந்த மருத்துவமனை பத்து தொகுதிகள் சம்பந்தப்பட்டதாகும். அங்கே ஒரு Solid Waste Management, திடக் கழிவு மேலாண்மையை ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே அங்கே இடம் உள்ளது. அதற்கான fund–ஐ allot செய்து, அங்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–30

One Health Initiative Scheme, ஒரே சுகாதார முயற்சித் திட்டம். தமிழ்நாட்டில்தான் முதல்முறையாகத் துவங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, One Health Initiative–ல் மனிதர்கள் சுகாதாரம், விலங்குகள் சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் என மூன்றையும் ஒரே நிலையிலே செய்யக்கூடிய ஒரு நல்ல திட்டமாகும். எங்கெங்கே அதிகமாக நோயிலே பாதிக்கப்பட்டிருக்கின்றார்களோ, அந்த இடங்களிலே இதைச் செயல்படுத்தலாம். குறிப்பாக, என்னுடைய கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரை, டெங்கு காய்ச்சலினுடைய அபாயம் பூச்சிகளால் ஏற்படக்கூடிய நோயால் வரும் ஒரு அபாயம் இருப்பதன் காரணமாக இந்தத் திட்டத்தை கடையநல்லூர் நகராட்சியிலே செயல்படுத்தினால் நன்மை பயக்கும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்று கூறப்பட்டிருக்கிறது. இது ஓர் அருமையான தத்துவம்தான். ஏனென்று சொன்னால், இன்று பல்வேறு மருந்துகள் மிக அதிகமான விலையிலே விற்கப்படுகின்றன. தரமில்லாததாக இருக்கின்றன என்ற சந்தேகம் இருப்பதன் காரணமாக மக்களுக்கு எல்லாம் generic medicines குறைந்த விலையிலே கிடைக்கின்றது. அதேபோல, organic food-இயற்கை உணவு மூலமாக அந்தப் பழக்கத்தை எல்லாம் அவர்கள் ஆர்வப்படுத்தி வருகின்றார்கள். அதுபோன்ற நல்ல திட்டங்களை அரசினுடைய திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையிலே அமைய வேண்டும். தமிழகத்தினுடைய 2.5 சதவிகித மக்கள் மதுரைக்கு அந்தப் பக்கம்தான் இருக்கிறார்கள். பத்துக்கும் மேற்பட்ட மாவட்ட மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, அதையும் இந்த அரசாங்கம்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜூலை 4*

வலியுறுத்தக்கூடிய வகையிலே நீங்கள் அதைச் செயல்படுத்த வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்த ஊர் காயல்பட்டினம். திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அண்ணன் இருக்கிறார். காயல்பட்டினத்தைப் பொறுத்தவரையிலும் 45,000 மக்கள் அங்கு வாழ்கிறார்கள். அங்குள்ள அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்பதையும் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதிகமாக விபத்துகள் நடக்கக்கூடிய பகுதியாக தென்காசி–மதுரை highways இருக்கிறது. அதை நான்கு வழிப் பாதையாக மாற்றக்கூடிய ஒரு திட்டம் நிலுவையில் இருந்து வருகின்றது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இலாகாவாக இருப்பதனால், அதைக் கனிவோடு பரிசீலித்து, தென்காசி–மதுரை நான்கு வழிப் பாதைத் திட்டத்தை விரைவாக நீங்கள் அறிவிப்பு செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு ஆலைகள் ஆங்காங்கே இருக்கின்றன. அந்த ஆலைகள் மூலமாகப் பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம் இருப்பது அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பாக, தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய Sterlite ஆலை 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையிலே பல்வேறு ஐயப்பாடுகள், மக்கள் எல்லாம் போராடக்கூடிய சூழ்நிலை இருந்தது. 2004 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றக் குழு ஆய்விலே, இந்த ஆலையில் உற்பத்தி விரிவாக்கம் பொதுமக்களுடைய நலனுக்கு உகந்தது அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, நீதிபதிகள் தர்மா ராவ், பால் வசந்தகுமார் போன்றவர்கள், விதிமீறல் இருப்பதால் ஆலையை மூட வேண்டுமென்றுகூட அறிவித்திருந்தார்கள். NEERI-சுற்றுச்சூழல் ஆய்வு அமைப்புகூட பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலே, இங்கே கழிவுகள், ஆர்சானிக் போன்ற வேதிப்பொருள் போன்றவையும் பற்களை அரிக்கும், புரோனைட் தாமிரம் போன்றவையெல்லாம் இங்கே தயாரிக்கப்படுவதனால் மக்களுக்கு இடைஞ்சல் இருப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். இந்த ஆலையின் மூலமாக வெளியேறக்கூடிய கசிவின் காரணமாக கேன்சர், கிட்னி செயலிழப்பு, சுவாசக் கோளாறு, கருச்சிதைவு, மலட்டுத் தன்மை போன்ற நோய்கள் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும், இந்த ஆலைக்கு நாம்

2017 ஜூலை 4] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு கோடி லிட்டர் தண்ணீர்கூட கொடுக்கின்றோம். இப்படி எல்லா வசதிகளும் கொடுத்தும்கூட, மக்களுக்கு அபாயமாக இந்த ஆலை இருக்கின்றது. இதேபோன்று எங்களுடைய காயல்பட்டினம் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சாகுபுரம் பகுதியில் இருக்கக்கூடிய DCW–Dhrangadhra Chemical Works மூலமாகவும் இதுபோன்ற அபாயங்கள் எல்லாம் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இதை அரசு கனிவோடு கவனித்து மக்களைப் பாதுகாக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் இங்கே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் பேச ஆரம்பித்து 9 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன். Suggestions தான் சொல்கிறேன். கட்சிக்கு ஒருவர்தான் பேசுகிறேன். ஒருசில விஷயங்கள் தான். உரையை உடனே முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 9 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: தயவுசெய்து மிகவும் கடுமையாக இருக்காதீர்கள். நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கல்விப் புரட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். 12 ஆம் வகுப்பில் குறைந்த மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்குக் கல்லூரியிலே seat கிடைப்பதில்லை. அவர்கள் எல்லாம் drop–out ஆகாமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்தால் நன்மை பயக்கும்.

மாற்று முறையிலான மருத்துவத்திற்கு இந்த அரசாங்கம் அங்கீகாரம் வழங்க வேண்டும். அக்குபஞ்சர், அக்குபிரஷர் போன்ற மருத்துவத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்கின்றார்கள். அதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜூலை 4*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

தமிழ்நாடு சமையல் தொழிலாளர் நல வாரியம், அரசாணை எண் 108/2015–ல் அறிவிக்கப்பட்டு செயல்படாமல் இருக்கின்றது. அதையும் நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊனமுற்றோர்களுக்கு 3 சக்கர வாகனத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவதற்கு வழிவகைகள் உள்ளன. ஆனால், கடுமையான நடைமுறைகள் இருப்பதால், நான் 12 பேரை பரிந்துரை செய்தும்கூட, அரசாங்கம் 2 பேருக்குத்தான் கொடுத்திருக்கிறது. அதற்கென ஏதாவது ஒரு திட்டத்தைக் கொடுத்தால், ஊனமுற்றோர்களெல்லாம் பயன்பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

அதேபோல, சட்டமன்ற அவைக் குழு என்னவாயிற்று என்பதே தெரியவில்லை. ஒரு கூட்டமும் நடைபெறவில்லை. அது செயல்படக்கூடிய வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். நெல்லை மாவட்டம், சேர்வலாறு அணை பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டது. 14 அடி அளவில் தண்ணீர் வீணாக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீருக்காக நாம் எல்லோரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம், போராடிக் கொண்டிருக்கின்றோம். இறைவனுடைய அருளால் அங்கு மழை பெய்து தண்ணீர் வந்தும், அந்தத் தண்ணீரெல்லாம் வீணடிக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றது. அங்கேயுள்ள மக்களெல்லாம், விவசாயிகளெல்லாம் மிகவும் கவலைப்படுகின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இலாகாவாக இருக்கின்ற காரணத்தால், அதையெல்லாம் சரி செய்யக்கூடிய வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். அதேபோல, 2012 ஆம் ஆண்டு பர்மாவில் ஏற்பட்ட கலவரத்தால் ரோகிங்யா அகதிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்கள், கேளம்பாக்கம் பகுதியிலுள்ள cyclone shelter,

2017 ஜூலை 4] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

அதாவது,புயல் பாதுகாப்பு மையத்தில் 94 பேர் இருக்கின்றார்கள். 19 குடும்பத்தினர்கள், 47 பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பாக மின் இணைப்பு வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆதார் கார்டுகள்கூட வழங்கப்பட்டுள்ளன. எனவே, அவர்களுடைய இருப்பிடத்தில் அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அந்த 94 பேருக்கு இரண்டே இரண்டு கழிப்பறைகள்தான் உள்ளன. அதையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களெல்லாம் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு டிரைவிங் லைசென்ஸ் வழங்கினால், அவர்களெல்லாம் சுயமாக சம்பாதிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்த முடியும் என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது. ஏற்கெனவே கடையநல்லூரில். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். உரையை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: நான் சிறிது நேரத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அவர்கள் தினமும் பேச முடியும். நான் ஒருவர்தான். பேசும் வாய்ப்பு நான்கு நாட்கள்தான். Kidney dialysis centre அமைத்துத் தரப்படும் என்ற அறிவிப்பை நான் எதிர்பார்க்கின்றேன். செங்கோட்டை மருத்துவமனை சுற்றுச்சுவர் இல்லாமல் இருக்கின்றது, அடிப்படை வசதிகள் இல்லை. அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்களை வடகரை வாவாநகரம், கடையநல்லூர் இக்பால் நகர், கண்ணம்புளியில் அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். ஒரு வார காலமாக சுகாதாரத் துறை அமைச்சர் மிகப் பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறார். சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களுடைய சொந்த மாவட்டமான, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏற்கெனவே அடவிநயினார் சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்படும் என்று ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. எங்களுடைய தலைவருடைய மாவட்டம். நீங்களாவது கருணையோடு செய்வீர்கள் என்ற ஓர் எதிர்பார்ப்பு எங்களிடம் இருக்கிறது.

அருமையான பெருமக்களே, சமுதாயம் சார்ந்த ஒரு பிரச்சினையைச் சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்,

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜூலை 4 நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சியில், சிறுபான்மையினரின் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கு நன்றி. ஆனால், இப்பொழுது என்ன நிலைமை? பள்ளிவாசல்களில் இருக்கக்கூடிய கூம்பு வடிவிலான குழாய்களை,* noise pollution *என்ற அடிப்படையில் அகற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். கூம்பு வடிவிலான அந்தக் குழாய்களை எடுக்க வேண்டும் என்பதில், பல்வேறு நீதிமன்றங்களும் பல்வேறு மாதிரியான தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன. சென்னை உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அளவைக் கட்டுப்படுத்துவதா, இல்லையெனில் தடை செய்வதா என்பதை அரசாங்கம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தினுடைய காவல் துறை அதிகாரி அவர்கள், கடந்த ஒரு வார காலமாக கடுமையான நடவடிக்கையை எடுத்து, கேஸ் போட்டிருக்கிறார்கள். அரசாங்கம்தான் இதற்கு வழிகாட்ட வேண்டும். சப்தத்தைக் குறைக்கலாம், தொழுகையை மட்டும் செய்யலாம் என்று சொல்லலாமே தவிர, ஒட்டுமொத்தமாக குழாயை எடுங்கள் என்று சொன்னால், எப்படித் தொழ முடியும்? ஒரு நாளைக்கு 5 தடவை தொழுகிறோம். பாங்கு சொன்னால்தான் தொழ முடியும். அரசாங்கம் மேலும் மௌனமாக இருக்காமல், தொடர்ந்து நீங்கள் எப்படி அனுமதித்தீர்களோ, அந்த அடிப்படையிலே எங்களுடைய வழிபாட்டு உரிமைகளை பாதுகாக்கக்கூடிய வகையில், நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாட்டுக் கறி பிரச்சினையால் வட மாநிலங்களில் 4 பேர் இறந்துவிட்டார்கள். தமிழ்நாடு அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி, சிறுபான்மையினர்களுடைய உரிமைக்காகப் பணியாற்ற வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். வக்ஃப் வாரியம் 14 மாதங்களாக தலைவர் இல்லாமல் இருக்கிறது. அதற்கு விரைவான நடவடிக்கை வேண்டும்.*

இராமநாதபுரத்தில், பொதுக்கூட்டத்தில் கடுமையான முறையில் சிறுபான்மையினர்களுக்கு எதிராக இராமநாதபுரம் அமைச்சருக்கு

2017 ஜூலை 4] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

எதிராக மத்தியில் ஆளக்கூடியவர்கள் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். இல்லையெனில், அதுவே ** என்பதையும் இங்கே உங்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று, வழிபாட்டு உரிமைகள் சம்பந்தமாகவும் ஒரு தெளிவான அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தால்தான் அந்தப் பிரச்சினை solve ஆகும். ஏற்கெனவே, திருப்பூரில் பள்ளிவாசலுக்கு இடம் ஒதுக்கி அங்கே பிரச்சினை ஏற்பட்டு, பள்ளிவாசலில் தொழுகை நடத்த முடியாத அளவிற்கு ஆக்கிவிட்டார்கள்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): உரையை முடித்துவிடுங்கள். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். அடுத்து, அமைச்சர் அவர்களின் பதிலுரையும் இருக்கிறது.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: ஒரேயொரு கோரிக்கை, வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய மானியக் கோரிக்கையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 'எட்டாவது வள்ளல் எம்.ஜி.ஆர்.' என்ற ஒரு புத்தகம் மணவை பொன்மாணிக்கம் என்பவருடைய தொகுப்பிலேயிருந்து வழங்கப்பட்டது. நல்ல செய்திகள் எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. நானும்கூட பல்வேறு செய்திகளைப் படித்தேன். நன்றி. அதிலே பக்கம் 46–ல் 'காகித அம்புகள்' பகுதியிலே ஓர் அற்புதமான படம். தேசிய ஒருமைப்பாடு, சமய நல்லிணக்கம், தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்களுடைய கலாச்சாரத் தனித்தன்மையை பாதுகாக்கக்கூடிய வகையிலே ஓர் அளப்பரிய பணியைச் செய்த ஒரு தலைவரோடு, நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படமும் இணைந்து, தோளோடு தோள் நின்று 'உறவுக்குக் கை கொடுப்போம். உரிமைக்கு துணை நிற்போம்' என்ற காட்சியோடு இடம் பெற்றிருக்கின்றது. அவர் வேறு யாரும் இல்லை. தந்தையினுடைய வழியிலே அவருடைய உறுதியான கொள்கையுடன், இன்று ஜனாதிபதி தேர்தலிலே மதச்சார்பற்ற 17 கட்சிகளின் சார்பாகப் போட்டியிடும் திருமதி மீரா குமார் அவர்களுடைய தந்தை திரு. பாபு ஜெகஜீவன்ராம் அவர்களும்,

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜூலை 4*

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் இருக்கும் படம்தான். புரட்சித் தலைவருடைய வழியிலே அவரது தொண்டர்களும் அவரது உறவுக்குக் கை கொடுக்க வேண்டுமென்பதை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாகத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு கருத்தைச் சொல்லி, அதனால் ** என்று சொன்னார்கள். அதைமட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஒரு மசூதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்றால் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று கூறினார்கள். ஒரு மசூதி கட்ட வேண்டுமென்றால் அதற்கு சில norms இருக்கின்றன. Rules and Regulations இருக்கின்றன. அதை correct ஆக follow செய்தால், கண்டிப்பாக எந்தப் பிரச்சினையும் வராது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வக்ஃபு போர்டு இன்னும் அமைக்கப்படவில்லை என்று பேசினார்கள். 14–6–2017 அன்றுதான் வக்ஃபு போர்டினுடைய காலம் முடிந்தது. தற்போது தமிழக அரசு புதிய வக்ஃபு போர்டு அமைத்திட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

தொடர்ந்து suggestions ஆகச் சொல்லிக் கொண்டிருந்ததால் நான் குறுக்கீடு செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட Regional Cancer Centre என்பது அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் புற்றுநோய்க்கு என பிரத்யேகமாக கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 1.5 கோடி ரூபாயில் மிகச் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டு இப்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது புற்றுநோய் சிகிச்சைக்காக மற்ற மாநிலங்களுக்கு செல்ல வேண்டியிருக்கிறது என்றும், அங்கு இங்கு வாங்கப்படும் கட்டணத்தில் 10 சதவீத கட்டணம்தான் வாங்குகிறார்கள் என்றும் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டிலிருந்து எந்தவிதமான மேல் சிகிச்சைக்கும் அண்டை மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய நிலை நிச்சயமாகக் கிடையாது. அனைத்து உயர்தர சிறப்பு சிகிச்சைகளும் தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாக, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 10 சதவீத கட்டணம்கூட இல்லாமல், எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் இங்கே கிடைக்கிறது. நீங்கள் மருந்து குறித்தும் சொன்னீர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், T.N.M.S.C. மூலமாக ஒன்றேகால் பைசாவிற்கு வாங்கக்கூடிய கேப்சூலிலிருந்து Anti–Cancer Drug அதாவது மெட்டலேஸ்மேப் என்ற அந்த மருந்து 74,429 ரூபாய்; ஒரு injection விலை 74,429 ரூபாய். வெளிச்சந்தையிலே ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே வரும். அதைக்கூட எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் வருகின்ற அத்தனை நோயாளிகளுக்கும் இலவசமாகக் கொடுக்கின்ற ஒரே அரசு இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, Generic மருந்தைக் குறிப்பிட்டீர்கள். முக்கியமான நிகழ்வு. இன்றைக்கு வெளிச்சந்தையிலே மருந்துகளைக் குறிப்பிடுகின்ற வகையில் non–brand, brand இல்லாமல் generic மருந்துகளைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேஷன் மூலமாக மிகத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. விரைவிலே நல்ல அறிவிப்புகளை இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

அளவிற்கு விலை குறைந்த மருந்துகளை வெளிச் சந்தையில் இருப்பவர்களும் வாங்கக்கூடிய நிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.

பிற்பகல் 2–45

***திரு. ஆர். சுந்தரராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற கொள்கை முழக்கத்தோடு, அன்னை தமிழகத்தை ஆண்ட நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று வாழ்ந்தும், மறைந்தும், மறையாமலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கும் மனித தெய்வம்; தமிழினம் காத்து நிற்கும் தமிழர் குல சாமி; (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முகவரி கொடுத்த மூகாம்பிகை, வணங்கிய கைகள் பிரியும் முன்னே வரம் தந்த அன்னை, 'அம்மா உணவகம்' தந்து அனைவருக்கும் அன்னமிட்ட அன்னபூரணி, பாரதி கண்ட புதுமைப் பெண் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'மக்களால் நான், மக்களுக்காக நான்' என தமிழகமெங்கும் முழங்கி, தமிழக மக்களின் நலனே தன் நலன் எனக் கருதி நம் அன்னைத் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் தழைத்தோங்க, தமிழக மக்கள் வாழ்வில் வளம் பெற்றிட, இரவு பகல் பாராமல் அயராது உழைத்து வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை, அம்மா அவர்களின் நினைவிட திசைநோக்கி பணிந்து வணங்குகின்றேன்.

'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்' என்ற வைர வரிக்கு ஏற்ப, இன்றையதினம் மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழா காணும் நேரத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்றோர்களும், சான்றோர்களும் வீற்றிருந்த இந்த அவையில் எளியவனான எனக்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

அம்மா அவர்களின் துணிவு, பணிவு, எளிமையின் இருப்பிடம், பண்பின் பிறப்பிடம், பாசத்தின் பணிவிடம், அம்மா அவர்களின் நல்லாட்சியை தரும் அற்புதமே, மக்களின் தூய காவலரே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தெற்கு வீரபாண்டிபுரம் மற்றும் மீளவட்டான் கிராமங்களில் சிப்காட் நிலை–2 மூலம் 1,600 ஏக்கர் பரப்பளவில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வழங்கி சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை மீண்டும் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின் கலங்கரைவிளக்கமாக விளங்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியிலே, 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி' என்ற புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களின் பாடலுக்கேற்ப, எனது தொகுதியில் ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்துக்குட்பட்ட மேலசுப்பிரமணியாபுரம் கிராமத்திலும், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கீழக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட கோவிந்தாபுரம் கிராமத்திலும் உள்ள இரண்டு ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளை மாணவர்கள் நலன் கருதி, இவ்விரு குக்கிராமங்களுக்கும் புதிய துவக்க பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கியிருக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற வரிக்கேற்ப சுகாதாரத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் மனித வளம் ஆகிய இரண்டையும் மேம்படுத்த உதவுகிறது. நமது சுகாதாரத் துறையின் முக்கிய பங்காக குழந்தைகள், மகளிர், மாற்றுத் திறனாளிகள், முதியோர் போன்றோருக்கு சிறப்புக் கவனம் அளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையோடு, இந்த அரசு தமிழகத்தில் பல முன்னோடித் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

[திரு. ஆர். சுந்தரராஜ்] [*2017 ஜூலை 4*

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்கள், 42 சுகாதார மாவட்டங்கள் என பிரிக்கப்பட்டு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன. கிராமங்களில் பாட்டி வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு 5,000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைத்தும், 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதனால், இன்றையதினம் சிறப்பான ஒரு நிலையை நம் தமிழகம் எய்தியுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

பிற்பகல் 2–50

அரசின்மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் தாய்–சேய் நல சேவைகள் மற்றும் 30 படுக்கை வசதிகள், இரத்த வங்கிகள் ஏற்படுத்துதல் முதலியன சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், மாதவிடாய்க்கால சுகாதாரத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அம்மாவின் சிறப்புத் திட்டங்களான அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், தாய்ப்பால் வங்கித் திட்டம் ஆகிய திட்டங்களை அம்மாவின் அரசு சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,116 வகையான சிறப்பு சிகிச்சை முறைகளும், 23 முக்கியப் பரிசோதனைகளும் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளும் வழங்கப்படுவதோடு, ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்தது 1.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், 12,000 ரூபாயாக வழங்கப்பட்ட உதவித் தொகை இன்றையதினம் 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. விலையில்லாத sanitary napkin வழங்கப்படுகிறது. 416 நடமாடும் மருத்துவமனைக் குழுக்கள் நமது மருத்துவத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உணவுப் பாதுகாப்பு மற்றும் மருத்துவக் கட்டுப்பாடு நிருவாகம் என்ற துறை ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

மாநிலத்திலேயே சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியம்மூலம் 20,853 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த 6 ஆண்டுகளில் 212 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 175 கோடி ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை வசதி போன்ற வசதிகளுடன் 126 சுகாதார நிலையங்கள் 145.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. சென்னை, அடையார் புற்றுநோய் மையம் மாநில அளவிலே புற்றுநோய் உயர் சிகிச்சை அளிக்கும் மையமாக அறிவிக்கப்பட்டு, ஒப்புயர்வு மையமாக 120 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. மேலும், 4 மண்டல புற்றுநோய் மையங்கள் 60 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தேவையான பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்புயர்வு மையக் கட்டடமாக 7–9–2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. கூடுதலாக 1,000 மருத்துவப் படிப்பு இடங்கள் இன்றையதினம் உருவாக்கப்பட்டுள்ளன. 104 மருத்துவத் தகவல் சேவை 30–12–2013 அன்று தொடங்கப்பட்டு, பொது மக்களிடையே சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது. 108 அவசர கால ஊர்தி சேவைகள், 16 வகையான பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகங்கள் 67 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன. இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தில் இந்திய அளவிலே மிகச் சிறந்த மாநிலத்திற்கான விருதைத் தமிழகம் பெற்றுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகம்மூலம் ஆயுர்வேதா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி மருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. மக்கள் துயர் துடைக்கும் வகையில், ஏழையெளிய மக்கள் பயன்படும் வகையில் கட்டணமில்லாமல் இறந்தவர்களின் உடலை சொந்த ஊர்களுக்குக் கொண்டு செல்வதற்காக தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் அமரர் ஊர்தி சேவையை செயல்படுத்தி வருகிறது. சுகாதாரத் தகவல் மையம்மூலம் பிரசவத்திற்குப்பின் உடனடியாக பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, பிறப்பு ஆவணம் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு அலுவலகங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள்மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. பள்ளி சுகாதாரத் திட்டத்தின்மூலம்

[திரு. ஆர். சுந்தரராஜ்] [2017 ஜூலை 4

மாணவர்களின் நோய்கள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் சிறப்பான முறையில் கண்டறியப்பட்டு, சுகாதாரத் துறையின்மூலம் விலையில்லாத கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2017–2018 ஆம் ஆண்டு சுகாதாரத் துறைக்கு 10,157.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 2–55

தீக்காய சிகிச்சைப் பிரிவு மற்றும் மண்டல புற்றுநோய் மையங்கள், தேசிய வளரிளம் பருவத்தினர் நலப் பாதுகாப்பு திட்டம், மாவட்ட ஆரம்ப நிலை சிகிச்சை மையம், இரும்புச்சத்து மாத்திரைகள் அளித்தல், நடமாடும் மருத்துவக் கல்லூரி, பொது சுகாதார வசதிகளில் காயகல்ப விருதுத் திட்டம் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சிறுநீரகக் கல் நீக்கும் மையம், காசநோய் மையங்கள், தேசிய மருத்துவத் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களை மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக அரசு சிறப்பான முறையிலே செயல்படுத்தி வருகிறது.

பேரிடர் எதிர்கொள்ளுதல் மற்றும் மேலாண்மை இயக்கத்தின் சார்பாக மனித செயல் பாதிப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்க போதுமான உறைவிடம், தண்ணீர், துப்புரவு, உணவு ஆகியவற்றை வழங்குவதை மிகவும் சிறப்பான முறையிலே நமது அரசாங்கம் செய்கிறது.

வர்தா புயல் நிவாரணம். வர்தா புயல் கடந்த டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையைத் தாக்கியபோது நம்முடைய அரசாங்கம் மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு, அனைத்து வகைகளிலும், மக்கள் சுகாதாரத்துடன் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தது என்பதை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஒரு சில கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே நான் கூற விரும்புகிறேன். மற்றவற்றைப் பதிவு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, தமிழகம் எப்பொழுதும் காணாத ஒரு வறட்சியை 140 ஆண்டு காலத்திற்குப் பிறகு இப்போது கண்டுள்ளது. ஆனால், எனது தொகுதி ஒட்டப்பிடாரம் ஆண்டாண்டு காலமாக வறட்சியாக உள்ளது. வானம் பார்த்த பூமியாகவும், கரிசல்காட்டு பூமியாகவும்

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

இருக்கிறது. தொகுதி மக்களின் 50 ஆண்டு கனவுத் திட்டம், தாமிரபரணி ஆற்றில் வரும் வெள்ள நீரை கோடைமேல் அழகியான் என்ற இடத்திலிருந்து தனியாக ஒரு வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, உப்பாறு, சிற்றாறு, கடனா நதி போன்றவற்றை இணைத்து, வறண்டு கிடக்கும் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் மற்றும் எட்டையாபுரம் பகுதிக்கு ஓட்டப்பிடாரம் விவசாயிகளின் நலன் கருதி தனிக் கால்வாய்த் திட்டத்தின்மூலம் தாமிரபரணி தண்ணீரை ஓட்டப்பிடாரம் பெரிய குளத்திற்குக் கொண்டு வந்து, அதன்மூலம் விவசாயம் செழித்திடவும், குடிநீர் ஆதாரம் பெருகிடவும் நிதியொதுக்கீடு செய்து இத்திட்டத்தைச் செயல்படுத்த கேட்டுக்கொள்கிறேன். இதனால், சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயனடையும், 36 பாசனக் குளங்கள் பயனடையும்.

ஓட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட கோரங்குளம் சுமார் 1400 ஏக்கர் பரப்பளவு கொண்டது. கடைமடை பகுதிகளான பெட்டைக்குளம், குலையன்கரிசல், கூட்டாம்புளி பகுதிகளிலே ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுமூலம் கோரப்பள்ளம் குளத்தில் பாசன வசதி செய்யும் வசதி இருந்தும் நீர் வரத்து சரியாக வரவில்லை; குடிநீர்த் தட்டுப்பாடாக இருக்கிறது. தாமிரபரணியில் மிகுதியாக வரும் வெள்ள நீரை மேற்படி தனிக் கால்வாய்த் திட்டம்மூலம் கோரப்பள்ளம் கொண்டு வந்து, கோரப்பள்ளத்தைத் தூர்வாரி அணைக்கட்டு அமைத்து தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியைச் சுற்றியுள்ள மாப்பிள்ளையூரணி, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, சங்கரப்பேரி, முத்தம்மாள் காலனி, பண்டாரம்பட்டி, ஸ்டேட் பாங்கு காலனி போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைய வாய்ப்புள்ளன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ், மீதி கோரிக்கைகளை நான் பதிவு செய்து கொள்கிறேன். கொடுத்துவிடுங்கள். இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஆர். சுந்தரராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தாலுகா 1974 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தலைமையிடமான ஓட்டப்பிடாரம் அதிகமான சாலைகளையும், பேருந்து வழித்தடங்களையும் பெற்ற பகுதியாகும்.

[திரு. ஆர். சுந்தரராஜ்] [*2017 ஜூலை 4*

ஆகவே, அங்கே ஒரு பேருந்துப் பணிமனை ஒன்றை அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி வீரத்திற்கு வித்திட்ட பகுதியாகும், சுதந்திரத்திற்காக முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டியத் தமிழன் வ.உ. சிதம்பரனார் பணியாற்றிய அந்த ஒட்டப்பிடாரத்திலேயே பிறந்து வாழ்ந்தார்கள். அந்த ஒட்டப்பிடாரத்திலே வ.உ.சி. அவர்கள் வழக்கறிஞராகப் பணியாற்றினார்கள். ஒரு தாலுகாவுக்கு ஒரு நீதிமன்றம் என்பதற்கிணங்க அந்தத் தாலுகாவிலே ஒரு நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு மற்ற கோரிக்கைகளையெல்லாம் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக ஒட்டநத்தம், வல்லநாடு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவு சேவைகளுக்கு கட்டடமும், கைலாசபுரம் ஊராட்சி, கைலாசபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடமும் வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

கில்லிவலம் வேளாண்மைக் கல்லூரியிலே தற்காலிகமாக பணிபுரியும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த கால ஆட்சியிலே தூத்துக்குடி, மதுரையை தொழிற்பூங்கா நகரமாக மாற்றி, மீளவட்டான் முதல் மணியாச்சி வரை சாலை வசதி ஏற்படுத்தப்படும் என்று பேரவையிலே அறிவித்தார்கள். அந்தச் சாலை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மீதியெல்லாம் நாங்கள் பதிவு செய்துகொள்கிறோம்.

திரு. ஆர். சுந்தரராஜ்: 2015 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வெள்ளநீர்க் கால்வாய் அமைக்க 73 கோடி ரூபாயிலே அம்மா அவர்கள் திட்டங்களை அறிவித்தார்கள். முத்தையாபுரம், முத்தம்மாள் காலனி, சங்கரப்பேரி காலனி, ஆதிபராசக்தி நகர் போன்ற மையப் பகுதிகளில் அந்தக் கால்வாய் அமைய வேண்டுமென்றும் இந்தத் திட்டத்தை அறிவித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த வாய்ப்பு அளித்தத் தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

தொகுதிக் கோரிக்கைகள்

வறண்ட ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், எட்டையபுரம் பகுதிகளுக்கு தனிக் கால்வாய் திட்டம்மூலம் தாமிரபரணி தண்ணீர் கொண்டுவர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரப்பள்ளம் குளத்தைத் தூர்வாரி அணைக்கட்டு அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் பேருந்துப் பணிமனை ஒன்று அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, சாலிக்குளம் காடுகளில் எல்லைப் பாதுகாப்பு கற்கள் நட்டு, வன வளங்கள் சுரண்டப்படுவதைத் தடுத்து, கனிம வளங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் நீதிமன்றம் அமைக்க வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் ஒரு கலைக் கல்லூரியையும், ஒரு தொழில்நுட்பக் கல்லூரியையும் துவக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனவரதநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்த வேண்டும். மதுரை–தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள குறுக்கு சாலை சந்திப்பு, தூத்துக்குடி–பாளையங்கோட்டை தேசிய நெடுஞ்சாலை, புதுக்காட்டை–வல்லநாடு சந்திப்பு ஆகிய மூன்று இடங்களிலும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தை புதிதாக மேம்படுத்தித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்துத் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், அய்யனடைப்பு ஊராட்சி, தொழிலாளர் நலத் துறைக்குட்பட்ட இடத்தில் இயங்கி வந்த சோரீஸ்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அதே இடத்தில் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். ஒட்டப்பிடாரத்தில் தீயணைப்பு அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், புதியம்புத்தூர் கிராமத்தில் ஆயத்த ஆடைப் பூங்கா ஒன்று புதிய தொழில்நுட்பத்தில் உருவாக்கித் தர வேண்டும். சுதந்திரப் போராட்ட தியாகி வாஞ்சிநாதனுக்கு மணியாச்சி இரயில் நிலையம் அருகில் மணிமண்டபம் கட்டித் தர வேண்டும். தூத்துக்குடி–மணியாச்சி, மேம்படுத்தப்பட்ட உட்கூறுகளுடன்கூடிய சாலை வசதி செய்து தர வேண்டும்.

[திரு. ஆர். சுந்தரராஜ்] [*2017 ஜூலை 4*

ஒட்டப்பிடாரம் தொகுதியில் சாலை வசதிகள் செய்து தர வேண்டும். பேருந்து வசதி இல்லாத கிராமங்களில், புதிய வழித்தடங்களை உருவாக்கி பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டையில் பல்நோக்கு வணிக வளாகக் கட்டடம் ஒன்றை கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, மாப்பிள்ளையூரணிக்கு தனிக் குடிநீர்த் திட்டம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டும். தூத்துக்குடி–மதுரை நெடுஞ்சாலை, மாப்பிள்ளையூரணி விலக்கு–முத்தம்மாள் காலனி விலக்கு ஆகிய பகுதிகளில் ரவுண்டானா அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, தருவைக்குளம் மற்றும் அந்தமாடன் பச்சேரி குளங்களைத் தூர்வார வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, புதுக்கோட்டை வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஒட்டநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம், புதியம்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், எஸ்.கைலாசபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், மேல அரசரடி துணை சுகாதார மையம், கொல்லங்கிணறு துணை ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை தரமுயர்த்த வேண்டும்.

ஒட்டப்பிடாரம் வட்டார அரசு மருத்துவமனையை தரமுயர்த்த வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, மாப்பிள்ளையூரணியில் ஓர் இசைப் பள்ளி துவக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, பாஞ்சாலக்குறிச்சி சுற்றுலாத்தலத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, பாஞ்சாலக்குறிச்சியில் ஒரு நூற்பாலை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, மருதூர் கீழக்கால் மணக்கரை கிராமத்தில் புதிய தடுப்பணை கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, உமரிக்கோட்டை மற்றும் எஸ்.கைலாசபுரம் சாலை ஆகிய பகுதிகளில் உயர்மட்டப் பாலங்கள் கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செக்காரக்குடி–மகிழம்புரம் சாலையில் உயர்மட்டப் பாலம் கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரம்பள்ளம், கைலாசபுரம் சாலையில் அய்யனடைப்பு ஊருக்குள்ளும், கைலாசபுரம் அருகிலுள்ள இரண்டு தாம்போதிகளை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும்.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

ஒட்டப்பிடாரம் தொகுதி, புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடி செல்ல புறவழிச் சாலை அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி, வல்லநாடு–அகரம் சாலையை இணைப்புப் பாலம் அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் பேருந்து நிலையத்தை சீர் செய்து மேம்பாடு செய்ய வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவ பிரிவிற்கு தனிக் கட்டடம் கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சி, தாய்நகர், துரைசிங்கநகர், ஓம்சக்தி நகர் ஆகிய இடங்களில் வெள்ளம் ஏற்பட்டபோது வீட்டு வசதி வாரிய வீடுகளில் குடியமர்த்தப்பட்ட 700 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, மாப்பிள்ளையூரணி ஊராட்சி, தாளமுத்துநகர், சிலுவைப்பட்டியில் ஒரு தூண்டில் வளைவு அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தருவைக்குளம் கிராம ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, முப்புலிவெட்டி கிராமத்திலுள்ள சமுதாயக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், அந்தோணியாபுரம் கிராமத்தில் பல்நோக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரப்பள்ளத்திலுள்ள தொழிற்பயிற்சிக் கல்லூரிக்கு (ஐ.டி.ஐ.) சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, முடிவைத்தானேந்தல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதாரம் நிலையம் மேம்பாடு செய்து கழிப்பறை மற்றும் இதர வசதிகள் செய்து தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், முடிவைத்தானேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் அறை, நூலகம், சைக்கிள் செட் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், அந்தோணியார்புரம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தை மேம்பாடு செய்ய வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், நடுக்கூட்டுடன்காடு கிராமத்தில் மின் கம்பிகளை மாற்றித் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி

[திரு. ஆர். சுந்தரராஜ்] [2017 ஜூலை 4

ஒன்றியம், மேலக்கூட்டுடன் கிராமத்தில் ஊரக சாலை, சிமென்ட் சாலை மற்றும் வாறுகால் அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், போடம்மாள் துணை சுகாதார நிலையம், சிருப்பாடு கிராம துணை சுகாதார மையம், கோரம்பள்ளம் துணை சுகாதார மையம், மேலத்தட்டப்பாறை துணை சுகாதார மையம் ஆகியவற்றை தரமுயர்த்த வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், உமரிக்கோட்டை கிராமத்திலுள்ள புதுக்குளம் கால்வாய்–ஓடை வரை இருபுறமும் தூர்வாரி தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், உமரிக்கோட்டை கிராமத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், வர்த்தகரெட்டிபட்டி வ.பாண்டியாபுரம் கிராமத்தில் சாலை வசதி மற்றும் பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், உமரிக்கோட்டை கிராமத்திலுள்ள பெரியகுளத்தைத் தூர்வார வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கே.தளவாய்புரம் கிராமத்தில் மயான பாதை மற்றும் பாலம் அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், முடிவைத்தானேந்தல் பகுதியில் சமுதாயக் கூடம் சுற்றுச் சுவர் மேம்பாடு செய்து தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கூட்டாம்புளி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும்.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், சிவன் கோயில், பெருமாள் கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, பெரியநத்தம் கிராமத்திலுள்ள கண்மாயை சீர் செய்ய வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, புதியம்புத்தூர்–வடக்கு சிலுக்கன்பட்டி கிராமம், ஊரக சாலைகளை மேம்பாடு செய்து தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, தருவைக்குளத்தைத் தூர்வாரி, தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதி, கொத்தாளி கிராமம், மின்சார கம்பிகளை மாற்ற வேண்டும்.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

ஓட்டப்பிடாரம் தொகுதி, கொத்தாளி கிராமம், 3–வது வார்டு, சிமென்ட் சாலை மற்றும் வாறுகால் வசதி செய்து தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, பரிவில்லிகோட்டை கிராமத்திலுள்ள கலையரங்கத்தை மேம்பாடு செய்ய வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, பரிவில்லிக்கோட்டை கிராமம், காம்ப்ளக்ஸ்–மாடசாமி கோவில் சாலை வரை தார்ச் சாலை மற்றும் வாறுகால் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, குலசேகரநல்லூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, டி. அய்யப்பாபுரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, மேலப்பாண்டியாபுரம்–சண்முகபுரம் அரியநாச்சியம்மன் கோவில் அருகில் ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, நாரைக்கிணறு கிராமத்தில் விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக் கூடம், சிறுவர் பூங்கா, கலையரங்கம் மற்றும் குடிநீர் வசதி செய்து தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, அம்மாள்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கலப்பைபட்டி கிராமத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, வேப்பங்குளம் கிராம மயான சாலையை சீரமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, தருவைக்குளம்–ஓட்டப்பிடாரத்திற்கு பேருந்து வசதி செய்து தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, டி.டி.அய்யப்பாபுரம் கிராமத்தில், கிராம குளத்தை மேம்பாடு செய்து, மயானச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சுற்றுச் சுவர், தரைத் தளம், தலைமை ஆசிரியர் அறை, கலையரங்கம், மிதிவண்டி நிறுத்துமிடம், 10 வகுப்பறைக் கட்டடங்கள், ஆண், பெண் கழிப்பறைகள் ஆகியவற்றை கட்டித் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, மேலப்பாண்டியாபுரம் கிராமத்திலுள்ள பழைய ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை மேம்படுத்த வேண்டும்.

ஓட்டப்பிடாரம் வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர் அறை, சுற்றுச்சுவர், 160 அடி குடிநீர் வசதி ஆகியவற்றை அரசு செய்து தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் அரசு உயர்நிலைப் பள்ளி–

[திரு. ஆர். சுந்தரராஜ்] [2017 ஜூலை 4

தொல்லங்கிணறு பகுதியில் ஒரு ஆண்கள் கழிப்பறை கட்டித்தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அரசு உயர்நிலைப் பள்ளி–பிரிவில்லிகோட்டையில் சுற்றுச்சுவர், பள்ளி மேல்தளத்தை மாற்றியமைத்து தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அரசு மேல்நிலைப் பள்ளியில், தருவைகுளத்தில் இயற்பியல் ஆய்வகம் கட்டித்தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அக்காநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், புதியம்புத்தூர் கிராம அமெரிக்கன் மருத்துவமனை அருகில் குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கொத்தாளி முதல் ஒட்டநத்தம் வரை கிராமச் சாலை அமைத்து, மேம்பாடு செய்து தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், தென்னம்பட்டி–தாழையூத்து சாலை அமைத்துதர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வேப்பன்குளம்–கயத்தார் சாலை கிலோ மீட்டர் 0/0–3/0R31 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அக்கநாயக்கன்பட்டி மருதன்வாழ்வு கிலோ மீட்டர் 0/0–3/0R31 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை முதல் அருப்புக்கோட்டை மேல இலட்சுமிபுரம் சாலை கிலோ மீட்டர் 0/0–2/249 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை முதல் அருப்புக்கோட்டை தெற்கு ஆவங்காடு சாலை கிலோ மீட்டர் 0/0–3/0R85 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை முதல் அருப்புக்கோட்டை கொம்பாடி தளவாய்புரம் சாலை கிலோ மீட்டர் 0/0–1/0R95 சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், குறுக்குச்சாலை ஊராட்சி–குறுக்குச்சாலை சிந்தரக்கட்டை சாலை கிலோ மீட்டர் 0/0–4/0R27 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், சில்லாநத்தம் ஊராட்சி நயினார்புரம் சாலை கிலோ

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

மீட்டர் 0/0–1/0R48 சாலை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம், அத்திமரப்பட்டி கிராமத்திலுள்ள துணை சுகாதார மையம் மேம்பாடு செய்து தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் முத்தம்மாள் காலனி, ஆதிபராசக்தி நகர், ஆர்.டி.சி. நகர் ஹவுசிங் போர்டு, சாந்தி நகர் போன்ற இடங்களில் மழைக்கால வெள்ள தடுப்புக் கால்வாய் அமைத்த தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், இராஜவின் கோவில் கிராமத்தின் அருகில் ஓடையில் உயர்மட்ட கண்பாலம் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கொத்தாளி–கொல்லங்கிணறு சாலையில் பாலங்கள் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், சுப்பிரமணியாபுரம் சாலையில் பாலம் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், மணியாச்சி–கொல்லங்கிணறு சாலையில் பாலம் கட்டப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், பூவானி ஊராட்சி, மேலப் பூவானி கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் கட்டித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வசப்புரம் வழியாக சென்னல்பட்டி செல்லும் பாதையில் (முறப்பநாடு புது கிராமம் ஊராட்சி) மருதூர் மேல்க்கால் வடிகால் இணைப்புப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி ஆதி திராவிடர்கள் அதிகம் வசிக்கும் அனந்த நம்பி குறிச்சி கிராமத்தில் சமுதாயக் கூடம், மயான சாலை அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செக்காரக்குடி ஊராட்சி, மேலச் செக்காரக்குடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மைய மேற்கூரை, கதவு, கழிப்பறை, சமையலறை, சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சுந்தரராஜ்] [*2017 ஜூலை 4*

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், எல்லைநாயக்கன்படி ஊராட்சி, எல்லைநாயக்கன்படி கிராமத்தில் அங்கன்வாடி மைய மேற்கூரை, சமையலறை, சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வசவப்பபுரம் ஊராட்சி அனவரதநல்லூர் கிராமத்தில் அங்கன்வாடி மைய சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வல்லநாடு ஊராட்சி முத்தாரம்மாள்புரம் கிராமத்தில் அங்கன்வாடி மைய சுற்றுச்சுவர், கலியாவூர் ஊராட்சி சின்னக் கலியாவூர் கிராமத்தில் அங்கன்வாடி மைய சுற்றுச்சுவர், ஆலந்தா ஊராட்சி சவலப்பேரி கிராமத்தில் அங்கன்வாடி மைய சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், ஆழிகுடி ஊராட்சி, ஆழிகுடி கிராமத்தில் அங்கன்வாடி மையம் பழுதுபார்த்து, சுற்றுப்புற சுவர் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வல்லநாடு கஸ்பா ஊராட்சியில் வல்லநாடு கீழ்பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், அரசு உயர்நிலைப் பள்ளி–அனவரதநல்லூர் 1–ல் நான்கு வகுப்பறைகள் மற்றும் தலைமை ஆசிரியர் அறை கட்டித் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம் VTVD அரசு மேல்நிலைப் பள்ளி வல்லநாட்டில் தண்ணீர் வசதியுடன் கழிப்பறை, கணினி மற்றும் தலைமை ஆசிரியர் அறை கட்டித் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், அரசு மேல்நிலைப் பள்ளி கீழப்பூவாணியில் இரண்டு வகுப்பறைகள், பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம் அரசு மேல்நிலைப் பள்ளி சவலப்பேரியில் 3 வகுப்பறை கட்டடம் மற்றும் நூலகம் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியத்தில் 3 வகுப்பறைக் கட்டடம், ஆசிரியர் அறை, நூலக அறை, மாணவ–மாணவியர் கழிப்பறை, சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், அரசு உயர்நிலைப் பள்ளி–காசிலிங்கபுரத்தில் 120 மீ. சுற்றுச்சுவர், பள்ளி மைதானம் தரை ஓடு பதித்தல் ஆகியவற்றை அமைத்துத் தர

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்த நம்பிகுறிச்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், முறம்பன் ஓட்டநத்தத்தில் சாலை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பட்டி சாலையை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், பாஞ்சாலங்குறிச்சி சாலையை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பட்டி சாலையை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், நாணல்காடு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டடங்களை சரி செய்து தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் வசவப்பபுரம் ஊராட்சி, அனவரதநல்லூர் கிராமத்தில் கிழக்குத் தெருவில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், வசவப்புரம் ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் பஸ் ஸ்டாப்பில் பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேதுராமலிங்கபுரம் கிராமத்தில் காமராசர் விளையாட்டு மைதானம் சீர் செய்து தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், அகரம் கிராமம் தூத்துக்குடி–திருநெல்வேலி நெடுஞ்சாலையில் அகரம் ஆற்றுப் பாலம் அருகே பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், லெட்சுமிபுரம் வடக்கு காலனியில் பயணிகள் நிழற்கூடம் அமைத்துத் தர வேண்டும். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் அகரம் கிராமத்திற்கு விளையாட்டு மைதானம் மற்றும் நூலகம் அமைத்துத் தர வேண்டும். ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், முத்தாலங்குறிச்சி கிராம குளத்தை தூர்வாரி மேம்பாடு செய்தும், செக்காரக்குடியில் சுகாதார நிலையத்தை மேம்பாடு செய்தும், விட்டிலாபுரம் கிராமம் மற்றும் மணக்கரையில் சாலை அமைத்து 2 பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கலியாவூர்–சேதுராமலிங்கபுரம் மெயின்ரோடு வரை மருதூர்

[திரு. ஆர். சுந்தரராஜ்] [*2017 ஜூலை 4*

கீழ்க்கால்வாய் வரை 2 1/2 கி.மீ. சாலை வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் அகரம் கிராம செம்மண் சாலையை தார்சாலையாக மாற்றித்தர வேண்டுகிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் முத்தாலங்குறிச்சி–பொன்தன்புளி கிராமச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடவல்லநாடு கிராமத்தில் சிவன் கோயில் தெரு சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் வட வல்லநாடு இராஜாங்குளத்தை தூர்வாரி மேம்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் மருதூர் கீழக்கால் வாய்க்காலில் படித்துறை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சவாலாப்பேரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி, வல்லநாடு ஆரம்ப சுகாதார மையத்தில் சித்த மருத்துவத்துக்கு தனி கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், வல்லநாடு–காசிலிங்கபுரம், ஆலந்தா இடையே உள்ள சாலைகளில் பாலம் கட்டப்பட வேண்டும். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், முறப்பநாடு ஸ்ரீகைலாசநாதர் கோயிலில் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், முறப்பநாடு ஸ்ரீகைலாசநாதர் கோயிலைச் சுற்றி பேவர் பிளாக் (தரை தளம்) மற்றும் தாமிரபரணி ஆற்றுக்கும் கோயிலுக்குமிடையில் தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், நாணல்காடு கிராமத்தில் படித்துறை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மணக்கரை கிராமத்தில் படித்துறை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், முத்தாலங்குறிச்சி கிராமத்தில் படித்துறை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், உமரிக்கோட்டை பகுதியில் உள்ள பெரியகுளத்து பகுதியில் சுமார் 5,000 மயில்கள் உள்ளன. மயில்களை வேட்டையாடுவதை தடுத்து பாதுகாத்து பறவைகள் சரணாலயங்கள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

ஒட்டப்பிடாரம் மற்றும் செக்காரக்குடி ஆகிய இரு பால் குளிர்விப்பான் நிலையங்களை மேம்பாடு செய்து, சுற்றுச் சுவர் மற்றும் உட்கட்டமைப்பு வசதி செய்து ஒட்டப்பிடாரம் பால்குளிர்விப்பான் நிலையத்தில் கூடுதலாக 5,000 லிட்டர் டேங்க் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட அனைத்துச் சாலைகளுக்கும் புதிய சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சி, சிலுவைப்பட்டியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சி, சிலுவைப்பட்டி கிராமத்தில் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் பழுது பார்ப்பதற்கு ஒரு நிழற்கூடம் மற்றும் மின் விளக்கு பூங்கா அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேல அரசரடி தெற்கு கல்மேடு அனந்தமாடன்பச்சேரி சாலை கி.மீ. 1/0–21/2/R41 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை முதல் அருப்புக்கோட்டையிலிருந்து பிரியும் சங்கரராஜபுரம் சாலை கி.மீ. 0/0–1/0R54 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், மேல அரசடி தெற்கு கல்மேடு சாலை கி.மீ.0/0–2/0R34 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை முதல் அருப்புக்கோட்டையிலிருந்து பிரியும் ஓ. சுப்பிரமணியாபுரம் சாலை கி.மீ.0/0–1/0R112 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கடம்பூர் தெய்வச்செயல்புரம் சாலை முதல் வி.பி. தாழையூத்து சாலை கி.மீ.0/0–3/0R202 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், மணியாச்சி–கொல்லங்கிணறு சாலை கி.மீ. 0/0–3/6 R186 சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மும்புலிவெட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் மாணவ–மாணவியர்களுக்கு தனித்தனி கழிப்பறைகள் கட்டித்தரவும், கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சுந்தரராஜ்] [2017 ஜூலை 4

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு வீரபாண்டியபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு குமாரகிரி கிராம ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டுகிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வடமலாபுரம் கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், இளவேலங்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் அறையுடன்கூடிய கூடுதல் வகுப்பறை கட்டித்தர மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் (ஊரகம்), கீழக்கூட்டுடன்காடு ராஜிவ் நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டித்தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் (ஊரகம்), அத்திமரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் தரைத் தளம் அமைத்துத் தர வேண்டி கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் (ஊரகம்) தெற்கு சிலுக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தரைத் தளம் மிகவும் மோசமாக உள்ளது. இதனைப் பழுது நீக்கிட கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் (ஊரகம்) கேம்ப்தட்டப்பாறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கழிப்பறை கட்டடம் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம் வடக்கு காரசேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஒன்றியம்–சவலாப்பேரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத்தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இப்பள்ளிக்கு தேர்வு மையம் (Exam center) ஏற்படுத்தித் தர ஆவன செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் (ஊரகம்), காலாங்கரை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டுகிறேன். கருங்குளம் ஒன்றியம், வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவுக்கு தனியாக கட்டடம்

2017 ஜூலை 4] [திரு. ஆர். சுந்தரராஜ்]

கட்டித் தர வேண்டுகிறேன். ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குறுக்குச் சாலை முதல் குலசேகரநல்லூர் வரை பாஞ்சை சிலோன் காலனி வழியாக செல்லும் மங்காம்மாள் சாலை மேம்பாடு செய்து வாஞ்சி மணியாச்சி சந்திப்பு இரயில் நிலையம் வரை சாலை மற்றும் போக்குவரத்து வசதி செய்துதர வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஒட்டப்பிடாரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இரண்டு தொடக்கப் பள்ளிகள் அவர்களுடைய பகுதியிலே வேண்டும் என்று கேட்டார்கள். 30 தொடக்கப் பள்ளிகளை இந்த ஆண்டு துவங்க இருக்கிறோம். அவருடைய தொகுதியிலே அவர் கேட்ட அந்த இரண்டு பள்ளிகளும் மேற்படி பட்டியலில் இணைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊமைகளைப் பேச வைத்த உணர்ச்சிக் காவியம், ஊனமாய் கிடந்த தமிழகத்தை உயர்த்திக் காட்டிய உத்தமர், விசை உடைந்த தேகத்தில் விரியம்கொள்ளச் செய்தவர், தறி கெட்ட தமிழகத்தை நெறிபடுத்திய நெறியாளர், காலம் தந்த கைவிளக்கு, ஞானத்தின் இருளைப் போக்க வந்த காலக் கண்ணாடி, (மேசையைத் தட்டும் ஒலி) கண் இமைக்காமல் கடமையாற்றும் தமிழ்க் காவலர், தமிழர்களின் நெஞ்சங்களில் பூவாய், புன்னகையாய், பூபாளமாய் வீற்றிருக்கிற வைரவிழா நாயகர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அங்கம் வகிக்கின்ற இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக உரையாற்றுகிற ஒரு வாய்ப்பினை அளித்திருக்கிற திராவிட இயக்கத்தின் மூன்றாவது அத்தியாயம்;

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வருங்கால தமிழகத்தை வழி நடத்த இருக்கிற கழகத்தின் செயல் தலைவர் தளபதி அவர்களுக்கு (மேசையைத் தட்டும்

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4* ஒலி) என்னுடைய நன்றியையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் முதற்கண் உரித்தாக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் செல்வதற்கு முன்பு தொகுதி சம்பந்தமான நான்கைந்து கோரிக்கைகளை வைத்து மற்றவற்றை நான் இந்த மன்றத்தில் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

மயிலம் ஊராட்சி ஒன்றியம், கூட்டேரிப்பட்டு நெடுஞ்சாலையில் தொடர்ந்து நடைபெறுகிற விபத்துகளைத் தடுக்கின்ற வகையில் கூட்டுப்பாதையில் ஒரு மேம்பாலம் அமைத்துத் தரப்பட வேண்டும். அதேபோல, கூட்டேரிப்பட்டில் ambulance வசதியுடன்கூடிய ஓர் அவசர சிகிச்சை மையம் அமைக்கப்பட வேண்டும். கூட்டேரிப்பட்டு இரயில்வே மேம்பாலத்தை உடனடியாக முடித்துத் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், கடுகுப்பட்டு, மேல்ஒலக்கூர் செல்லும் சாலையில் தொண்டி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், கீழையூர் மணியப்பட்டிலிருந்து கொங்கரப்பட்டு சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டும். வீடூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், நெடுமோழியனூர் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை, மக்கள் தொகை அதிகமாகி விட்டதால் மயிலம் ஒன்றியம் நெடுமோழியனூர் கிராமத்தையும், வல்லம் ஒன்றியம் நெகனூர், புதூர் கிராமத்தையும் தனித்தனி பஞ்சாயத்தாக பிரிக்க வேண்டும். வல்லம் ஒன்றியம், பேரணாம்பட்டு கிராமத்தில் நீண்ட நாள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு திறந்தவெளிக் கிணறு வெட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்த மன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால் சற்று கூடுதல் நேரம் எனக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, இங்கே இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்றபொழுது நாங்கள்

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

எடுத்து வைக்கின்ற செய்திகள் எங்களுக்குத் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நாங்கள் அறிந்த, கேட்டறிந்த, கேட்ட அந்தச் செய்திகளை இந்த மன்றத்தில் பதிவு செய்கின்றபொழுது நான் இந்த ஆட்சியின்மீது ஒரு குற்றச்சாட்டை வைப்பதாகவோ அல்லது குறை சொல்வதாகவோ தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய இந்த விவாதத்தை உள் வாங்கிக் கொண்டு, இறுதியாக மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையில் அவர் பதில் தர வேண்டும் என்ற அன்பான கோரிக்கையை வைத்து, மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 3–05

ரோம சாம்ராஜ்யத்தில் சீசரின் ஆட்சிக் காலம் எப்படி ஒரு பொற்காலமோ, குப்தர்களுடைய ஆட்சிக் காலத்தில் எப்படி சந்திரகுப்த மௌரியர்களின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமோ, மூவேந்தர்கள் ஆட்சிக் காலத்தில் எப்படி ராஜேந்திர சோழன், இராஜராஜ சோழனுடைய ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமோ, அப்படித்தான் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலம்தான் ஒரு பொற்கால ஆட்சி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அவர் இந்தத் துறைக்கு ஆற்றிய எண்ணற்ற பணிகளில் ஒரு சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அவசரகால 108 ஆம்புலன்ஸ் சேவைத் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு 15–9–2008 அன்று தலைவர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது என்பதை நான் இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோல எண்ணற்ற திட்டங்கள். இளம் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம், பள்ளி சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம், கண்ணொளி காக்கும் திட்டம், வரும்முன் காப்போம் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், மகளிர் கருப்பை வாய் புற்றுநோய் திட்டம், இருதய நோய் தடுப்புத் திட்டம், இறுதியாக இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கலைஞர் காப்பீட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எண்ணற்ற திட்டங்களை இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

வழங்கியது டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு முன்னால் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் 108 ஆம்புலன்ஸ் திட்டத்தைப் பற்றி பேசுகின்றபோது, அமைச்சர் அவர்கள் எழுந்து அதற்கு மறுதலித்து பதிலளித்தார்கள். நான் இதை விவாதப் பொருளாக ஆக்க விரும்பவில்லை. பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியிலேயும், படத்தை கொடியிலும் நீங்கள் வைத்திருக்கின்றீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொன்னார்கள். எனவே, அந்த அடிப்படையில் உங்கள் ஆட்சியில் நீங்கள் செய்த சாதனைகளைச் சொல்வதற்கு உங்களுக்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அப்படி எங்கள் ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளைச் சொல்வதற்கு எங்களுக்கும் உரிமை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 108 ஆம்புலன்ஸ் திட்டம் என்பது கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. 2005 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் மருத்துவமனைகளுக்காக 187 ஆம்புலன்ஸ் வாகனங்களை வாங்கி, அதைச் சிறப்பாகச் செயல்படுத்தினோம் என்று நீங்கள் சொன்னீர்கள். எந்த ஆட்சி வந்தாலும், ஆம்புலன்ஸ் வசதியாக இருந்தாலும் சரி, அமரர் ஊர்தியாக இருந்தாலும் சரி, பொதுவாக மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ் வசதிகளை செய்து கொடுப்பது சுகாதாரத் துறையினுடைய நோக்கம். ஆனால், இந்த 108 ஆம்புலன்ஸ் திட்டம் என்பது ஒரு comprehensive scheme. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திட்டமாக பெயர் வைத்து, அகில இந்திய அளவில் ஒரு திட்டமாக அறிவித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே subject–ஐ அவர் மீண்டும் பேசுகிறார். தாங்களும் ஒரு மருத்துவர். ஒவ்வொரு மருத்துவமனைக்கும் இருக்கக்கூடிய ஓர் ஆம்புலன்ஸை போய், 'நான் ஆம்புலன்ஸ் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்' என்று இந்த மாமன்றத்திலே எப்படிச் சொல்லுவேன்? நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். நான் சொல்கின்ற அத்தனை வார்த்தைக்கும் நானே பொறுப்பு எடுத்துக்கொள்கின்றேன்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நீங்கள் சொல்கின்ற அந்த comprehensive திட்டத்தைத்தான் 24 x 7 என்கின்ற அடிப்படையிலே, ஆம்புலன்ஸ் திட்டத்தை 1056 என்ற எண்ணைக் கொடுத்து, நிதியை ஒதுக்கி, ஷீலாராணி சுங்கத் அவர்கள் அரசுச் செயலாளராக அம்மா அவர்களின் ஆட்சியில் இருந்தபோதுதான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு சிந்திக்கப்பட்டது, நிதியொதுக்கப்பட்டது, ஆம்புலன்ஸ் வாங்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் comprehensive என்ற முறையில்தான் ஆம்புலன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது. நான் G.O. அனைத்தையும் வைத்திருக்கிறேன். அண்ணன் மாண்புமிகு நம்முடைய முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், நான் ஹைதராபாத்துக்கு சென்றேன். அப்போது சுப்புராஜ் அவர்கள் செயலாளராக இருந்தார்கள் என்று. நீங்கள் வந்ததற்குப் பின்னால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னாலே, நீங்கள் வந்து செய்த ஒரே ஒரு வேலை 1056 என்ற 4 digit number–ஐ, 3 digit number–ஆக 108 என்று பெயர் மாற்றம் செய்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணியை, சேவையை நாங்கள் தொண்டு நிறுவனத்திற்கு வழங்கினோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு வழங்கியிருந்தோம். நீங்கள் ஒட்டுமொத்தமாக GVK EMRI என்ற நிறுவனத்திற்கு வழங்கினீர்கள். இதுதான் வித்தியாசமேயொழிய நிச்சயமாக 108 ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு முழுக்க முழுக்க உரிமை கோர முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லி, சொல்லி எங்கள் வாயை அடைக்கின்றீர்கள்; கைத்தட்டு வாங்குகிறீர்கள். ஆனால், அந்த ஆம்புலன்ஸை தனியாக ஒரு call centre வைத்து, எங்கு அழைப்பு வந்தாலும், எங்கு accident நடந்தாலும், 108–க்கு எங்கிருந்து அழைத்தாலும், உடனே 15 நிமிடங்களில் attend செய்ய வேண்டும். எப்போதும் regular ஆக மருத்துவமனைகளில் ஆம்புலென்ஸ் இருக்கும்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [*2017 ஜூலை 4 பிற்பகல் 3–10*

தாலுகா மருத்துவமனைகளுக்கு ambulance *கிடையாது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டும், அதுவும் மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையில் ஒரு* ambulance *இருக்கும்; எப்போதாவது* refer *பண்ணுவதற்காக மட்டும். அதைக் கொண்டு போகமாட்டார்கள். ஆனால், உண்மையாக 108–க்கு அழைப்பு கொடுத்தால் ஒரு* call centre *வைத்து, அதை* centre–*ஆக, சென்னையில் ஒரு இடத்தில் வைத்து, எல்லா இடங்களுக்கும் இணைப்புக் கொடுத்து, அந்த* ambulance–*க்கு* attender *கொடுத்து, அவருக்கு* accident–*ஆ அல்லது பாம்பு கடித்ததா என்று என்ன வைத்தியம் வேண்டுமோ அவர்கள் உடனடியாக அந்த மருத்துவரைத் தொடர்பு கொண்டு. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *அதற்குரிய சிகிச்சையை* ambulance–*லேயே தொடர் சிகிச்சை செய்து கொண்டு போகிற திட்டம்தான் '108'* ambulance *திட்டம். அதை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமையை யாராலும் எடுக்க முடியாது. வெளியிலிருந்து சொல்கிறார்கள், நாங்கள்தான் கொண்டு வந்தோம், நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். அதைச் சொல்வதற்கு வாய்ப்பில்லை.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *அதை ஆரம்பித்தது எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அதைத் தொடங்கி வைத்தார்கள். அது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கைதட்டி உரிமை கொண்டாடாதீர்கள். கை தட்டியதால் உரிமை கொண்டாட முடியாது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி. விஜயதரணி, பேசுங்கள்.*

2017 ஜூலை 4]

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரண்டுபேரும் மிகவும் போட்டி போட்டு, நான்தான் கொண்டு வந்தேன் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். உங்கள் எல்லோருக்கும் நான் சொல்ல விரும்புவது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் இந்த ambulance திட்டமே வந்தது. ஆகையால் இருவரும் பெருமை கொள்ளுங்கள். எங்களுக்கு ஆட்சேபணையே கிடையாது; செம்மைப்படுத்துங்கள். ஆனால், காங்கிரஸ்தான் கொண்டு வந்தது என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது. அதை முன்னிலைப்படுத்துங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 29–8–2005 அன்றைய அரசாணையிலே 187 ambulance–க்கு 17 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, ambulance வாங்கப்பட்டு, நீங்கள் சொல்கிறீர்களல்லவா, control room. அது State level control room. அதாவது District level–ல் 29 மாவட்டங்களிலேயும் 70 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நீங்கள் சொல்வது மாதிரியே 24x7 control room அமைத்து ஒன்றரை வருடம் கிட்டத்தட்ட 385 ambulance வாகனங்களை இயக்கியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் வேண்டுமானால் 108 என்ற நம்பருக்கு மட்டும் உரிமை கொண்டாடிக் கொள்ளலாம். Ambulance திட்டத்திற்கு உரிமை கொண்டாடக்கூடிய அத்தனைப் பெருமையும் சிறப்பும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, பேசுங்கள். Ambulance சப்ஜெக்ட் எல்லாம் முடிந்துவிட்டது.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொண்டு வந்தது '1056' திட்டம். நாங்கள் கொண்டு வந்தது '108' திட்டம். இன்றைக்கு '108' திட்டம்தான் மக்கள் மனதில் நின்று கொண்டிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

தமிழ்நாட்டில் மொத்தம் 22 மருத்துவக் கல்லூரிகள், ஓர் அரசு பல் மருத்துவக் கல்லூரி, 240 தாலுகா மருத்துவமனைகள், 7 காசநோய் மருத்துவமனைகள், 14 நடமாடும் மருத்துவமனைகள், 1,600 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று இத்தனை மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி, 1,000 பேருக்கு ஒரு மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில், 5,000 பேருக்கு ஒருவர்தான் மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். வெளிநாட்டில் எல்லாம் 500 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். தற்போது தமிழகத்தில் அனைத்து அரசுத் துறைகளிலும் 18,000 மருத்துவர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளில் 40,000 மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிகபட்சம் போனால், தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக அரசு மருத்துவர்களும், தனியார் மருத்துவர்களும் சேர்த்து 60,000 மருத்துவர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய மக்கள்தொகை 7 கோடி. குறைந்தபட்சம் 7 கோடி மக்களுக்கு ஒரு இலட்சம் டாக்டர்களாவது இருக்க வேண்டும். ஆனால், இருப்பது 60,000 டாக்டர்கள்தான். அதிலேயும் இந்த 18,000 மருத்துவப் பணியிடங்களில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள அனைத்துப் பணியிடங்களும் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கின்றனவா? இதைக்கூட குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இதை ஒரு செய்தியாகச் சொல்கிறேன். அனைத்து மருத்துவமனைகளிலும் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் எண்ணிக்கை முழுமையாக நிரப்பப்படவில்லை. அதையெல்லாம் நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு மயிலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 7 மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 4 பேர்தான் இருக்கிறார்கள், 3 பேர் இல்லை. மருந்தாளுநர்கள் 2 பேர் இல்லை; ஒருவர்தான் இருக்கிறார். அதேமாதிரி ரெட்டணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஒரு டாக்டர்தான் இருக்கிறார். முப்புளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 டாக்டர்கள் இருக்க வேண்டும்; ஒரு டாக்டர்தான் இருக்கிறார். இது ஒரு sample–தான். எல்லா இடங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. இது ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள நிலைமை. நான் குடியிருப்பது திண்டிவனம். அங்கு வட்ட மருத்துவமனை உள்ளது.

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

பிற்பகல் 3–15

திண்டிவனம் வட்ட மருத்துவமனையில் உள்ள vacancy position–ஐப் பார்த்தால், civil surgeon post–1 இல்லை. Anaesthetist ஒருவர் இல்லை. General Surgeon ஒருவர் இல்லை. Senior Civil Surgeon ஒருவர் இல்லை. Assistant Surgeon ஒருவர் இல்லை. Lab technician ஒருவர் இல்லை. Lab Technician Grade II மூன்று பேர் இல்லை. Dark room Assistant மூன்று பேர் இல்லை. அப்படிப் பார்த்தால், ஏறத்தாழ மொத்தம் 26 பணியிடங்கள் திண்டிவனம் வட்ட மருத்துவமனையில் காலியாக இருக்கின்றன. இந்த நிலைமை வட்ட மருத்துவமனையில் மட்டும் ஆகும். மருத்துவக் கல்லூரியைப் பார்த்தீர்களென்றால், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி அல்லது செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் Dean post இல்லை. அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, வருகின்ற நவம்பர் மாதத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட 4 கல்லூரிகளில் அவர்கள் retire ஆகப்போகிறார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர்கள் retire ஆவதற்கு முன்பாக ஒரு குழு அமைத்து, யாரையெல்லாம் பதவிக்குக் கொண்டு வரவேண்டுமோ, பணியிலிருப்பவர்கள் retire ஆகும்போது, Dean post–ல் அவர்கள் இருப்பதுபோலச் செய்தால்தான் நன்றாக இருக்கும். தலையில்லாமல் இருந்தால், முண்டமாகத்தான் அந்த மருத்துவக் கல்லூரிகள் இருக்கும். எனவே, உடனடியாக அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது முண்டியம்பாக்கத்தில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்தோம். அங்கு பார்த்தால், 24 hours C.T. Scan வசதி கிடையாது. 24 hours Neuro Surgeon கிடையாது. விழுப்புரம் main road பகுதி, எப்போதும் விபத்துகள் நடக்கிற பகுதியாக இருக்கிறது. எப்பொழுது அடிபட்டாலும், head injury–ஆனவர்கள்தான் வருவார்கள். அடுத்த நிமிடமே மருத்துவமனைக்குப் போக வேண்டும், அடுத்த நிமிடத்திலேயே செய்கிற வேலை அது. அவையெல்லாம் referred to higher Institutions, ஒன்று JIPMER க்குப் போக வேண்டும். இல்லையென்றால் சென்னைக்குப் போகவேண்டும். அதனால் இந்த அரசு அங்கு 24 hours C.T. Scan வசதியைக் கொண்டு வர வேண்டும், 24 hours Neuro Surgeon–ஐ கொண்டு வர வேண்டும். அங்கே Nephrologist இல்லை, Gastroenterologist இல்லை. இதையும் குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. அந்தப் பணியிடங்களெல்லாம் நிரப்பப்படாமல்

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

இருக்கின்றன. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியிடங்களையெல்லாம் நிரப்ப வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய சிந்தனையில் உருவான திட்டம்தான் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ஆகும். இத்திட்டம் 2006–ல் டாக்டர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டபோது, அதற்காக ரூ.6,000/– நிதியுதவி கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டு, ரூ.12,000/– இந்த அரசால் வழங்கப்பட்டது. அதனை வரவேற்கிறேன். இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பதவியேற்கின்றபோது, போட்ட ஐந்து கையெழுத்துகளில் ஒரு கையெழுத்து டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவந்த தொகை ரூ.12,000/– என்பதை ரூ.18,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டிருக்கிறார். அதையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் கையெழுத்திட்டு ஐந்து மாதங்கள் ஆகின்றன. இன்று வரை அந்தத் திட்டத்தின்கீழ் யாருக்கும் அந்தத் தொகை வழங்கப்படவில்லை. அதற்கான வழிமுறைகளும் வெளியிடப்படவில்லை. எப்போது அதற்கான வழிமுறைகளை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ.12,000/– ஆக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உயர்த்திக் கொடுத்தது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்தவுடனே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ரூ.18,000/– ஆக உயர்த்தினார்கள். கூடுதலாக வழங்கப்படக்கூடிய ரூ.6,000/–ஐ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, nutrition supplement ஆக, தொகையாகவே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்குவதா அல்லது கர்ப்ப காலத்தில் antenatal period–ல் அவர்களுக்கு anaemia போன்ற குறைபாடுகளைக் களைவதற்கு பேரீச்சம் பழம், பால் போன்ற supplementary food ஆக வழங்கலாமா என்பது குறித்து உயர்மட்டக் குழு ஆராய்ந்து, இறுதி முடிவை எட்டக்கூடிய நிலையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அவர்கள் மருத்துவர் என்ற காரணத்தினால் இதைச் சொல்கிறேன். இந்த மாதத்திலே அதுகுறித்த இறுதி முடிவு எட்டப்பட்டு, வழங்கப்படும் என்ற நல்ல தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, பணியாளர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருக்கே தெரியும். பொதுவாக மருத்துவப் பணியாளர் காலியிடங்கள், ஒன்று retirement–ல் ஏற்படும். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். We are creating new posts. அதாவது கடந்த வருடம் இந்த மாமன்றத்திலே நானே உரையாற்றியிருக்கின்றேன். Medical Recruitment Board ல் 14,761. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அமைதியாக இருக்கவும். உங்களுடைய உறுப்பினர்கள் பேசும்போது, அவர்கள் அங்கே பேசமாட்டார்களா? அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: கடந்த ஆண்டு நான் இந்த மாமன்றத்தில் மானியக் கோரிக்கையின்மீது பேசியபோது, M.R.B. மூலம் 14,761 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை வரலாற்றுச் சாதனையாக சொன்னேன். இந்த ஒரு வருடத்திலே 6,262 பேர் நியமனம் செய்யப்பட்டு, இன்றைக்கு மொத்தமாக 21,023 பேர் மிகச் சிறப்பாக M.R.B. மூலமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற விழுப்புரம் மருத்துவமனையில் என்ன census, அதேபோல திண்டிவனத்தில் என்ன census என்றால், திண்டிவனத்தில் 4 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. விழுப்புரம் மருத்துவமனையில் 243 sanctioned posts இருக்கின்றன. அதில் 225 பேர் பணியில் இருக்கிறார்கள். அதில் 18 பணியிடங்கள் மட்டும் காலியாக இருக்கின்றன. அதையும் நாங்கள் தொடர்ந்து counselling மூலம் நிரப்பி வருகிறோம். Counselling என்பது ஏதோ ஆண்டுக்கு ஒருமுறை அல்ல, தொடர்ந்து counselling வைத்துக்கொண்டிருக்கிறோம். P.G. seat–க்குப் போகிறார்கள். Retirement மூலம் vacancy ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Dean post பற்றிச் சொன்னார். கடந்த மாதம் Dean retire ஆகியிருக்கிறார். விரைவில் இந்த மாதத்திலே அந்தப் பணியிடம் நிரப்பப்படும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணியிடத்தை விரைவாக நிரப்ப வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் இங்கு வைத்திருக்கிறேன். 20–2–2017 அன்று டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காக G.O. போடப்பட்டிருக்கிறது. போரூர் மேம்பாலத்தைப் பற்றி பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'ஒரு திட்டத்தை வகுக்கின்றபோது, அதற்கான திட்டப் பணிகளையெல்லாம் வகுக்காமல், எப்படி அடிக்கல் நாட்டினார்கள்' என்று கேட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்கு வழிமுறைகளை தற்போது வெளியிடாமல் எப்படி இந்தத் திட்டத்தை அறிவித்தீர்கள்? ஏன் இன்று வரை இத்திட்டத்திற்கான வழிமுறைகள் கொடுக்கப்படவில்லை? அதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 3–20

அதுமட்டுமல்ல, இப்போது மத்திய அரசாங்கம் இன்னொரு திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான G.O.–வையும் உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதாவது, Maternity Benefit Programme என்பது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டமாகும். இந்தத் திட்டத்தின்மூலம் பாலூட்டும் தாய்மார்களுக்கு, கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000/– நிதியுதவியாகத் தர வேண்டுமென்று ஒரு circular–ஐ அனுப்பியிருக்கிறார்கள். இந்த ஆண்டே துவங்க வேண்டுமென்றும், நிதியும் ஒதுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இது மத்திய, மாநில அரசின் பங்களிப்போடும், மாநில அரசாங்கத்தின் 60 சதவிகித நிதியுதவியோடும், மத்திய அரசாங்கத்தின் 40 சதவிகித நிதியுதவியோடும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று உங்களுக்கு தாக்கீது அனுப்பியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்தப் போகின்றீர்கள், இதற்கு என்ன வழிமுறை என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்ததாக, தமிழகத்தில் மீண்டும் டெங்கு காய்ச்சல் வந்திருக்கிறது. உடனே எழுந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டாம். பலமுறை இதுசம்பந்தமாக நீங்கள் விளக்கத்தை கொடுத்திருக்கிறீர்கள். நாங்களும் அந்த

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்த டெங்கு காய்ச்சல் பரவியிருக்கிறது என்பதுபற்றி நாங்கள் சொல்லவில்லை. மத்திய சுகாதாரத் துறை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஜனவரி மாதத்திலிருந்து இந்த 5 மாத காலத்தில் நாடு முழுவதும் டெங்கு காய்ச்சலால் 11,402 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாட்டிலேயே அதிகமாக கேரளாவில் 4,735 பேரும், தமிழகத்தில் 3,750 பேரும், கர்நாடகாவில் 750 பேரும் மற்றும் ஆந்திராவில் 502 பேரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று மத்திய சுகாதாரத் துறையினுடைய புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியென்றால், தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் இருக்கின்றது என்பது உண்மை. இது அறிவிக்கப்பட்ட புள்ளிவிவரம். இன்னும் அறிவிக்கப்படாத புள்ளிவிவரம் நிறைய இருக்கின்றது. எனவே, நான் சொல்ல விரும்புவது, டெங்கு காய்ச்சல் என்பது முன்பெல்லாம் பருவமழைக் காலத்தில் மட்டும்தான் வந்து கொண்டிருந்தது. தென்மேற்குப் பருவமழை, வடமேற்குப் பருவமழை போன்ற மழைக் காலங்களில் தேங்கி நிற்கின்ற தண்ணீரின் மூலமாக Aedes Aegypti என்ற கொசுவின் மூலமாகத்தான் பரவி வந்தது. இப்போது என்னவென்றால், அரசியல்வாதி மாதிரி கொசுவும் தன்னுடைய நிறத்தை மாற்றிக் கொண்டது. என்னவென்றால், இப்போது ஆண்டு முழுவதுமே அந்த கொசு கடிக்கின்றது. வெயில் காலத்திலேயும் இந்தக் கொசு கடிக்கின்றது. மழைக் காலத்திலேயும் இந்தக் கொசு கடிக்கின்றது. தற்போது சுத்தமான தண்ணீரிலும் அந்தக் கொசு பரவுகின்றது. எனவே, இந்த டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும், மருத்துவர்களிடமும், வட்டார அளவில் கலந்துபேசி, கூட்டம் போட்டு நடவடிக்கை எடுப்பதற்காக எல்லா ஆலோசனைகளையும் சொல்லியிருக்கிறோம் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள். ஆனால், களத்திலே நின்று பணியாற்றுபவர்களில் ஒன்று, மஸ்தூர் என்ற அந்த களப் பணியாளர்கள். இரண்டாவது, சுகாதார ஆய்வாளர்கள். இந்த மஸ்தூர் post–ஐப் பொறுத்தவரைக்கும், உங்களுடைய ஆட்சியில், வருடத்தில் நான்கு மாதத்திற்கு மட்டும்தான் அவர்களை எடுக்கின்றீர்கள். அதுவும் தினக் கூலி அடிப்படையில், மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்பேரில், வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக நான்கு மாதத்திற்கு

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

மட்டும்தான் அவர்களைப் பணியில் அமர்த்துகின்றீர்கள். மீதி 8 மாதங்களுக்குப் பணியே கிடையாது. அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.200/–தான் கூலியாகக் கொடுக்கின்றீர்கள். 200 ரூபாய்க்கு அவர்களால் பணியாற்ற முடியாது. அதிலே அவர்கள் உணவருந்த வேண்டும். கிராமங்களுக்குப் பேருந்தில் செல்வதற்கும் அந்தத் தொகையிலே பயணச் சீட்டை எடுக்க வேண்டும். ஆகையால், இந்த மஸ்தூரை நிரந்தரப் பணியாளர்களாக, எல்லா நாட்களிலும் அவர்கள் பணியாற்ற, அதாவது, மாதங்கள் முழுவதும் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவதற்காக அனுமதி கேட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் விவாதம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் ஒரு நல்ல பதிலைச் சொல்கிறேன். இதில் ஒன்றும் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) மிகவும் ஆரோக்கியமான கருத்தைத்தான் நான் சொல்லப் போகிறேன். ஓர் ஆரோக்கியமான கருத்தை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, அதில் அரசும் என்ன வியூகத்தில் இருக்கிறது என்பது பற்றியும் நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும். நான் அவரோடு விவாதம் செய்ய விரும்பவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்றமாதிரி, இப்போது டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை, நான் ஒரேயொரு கருத்தைச் சொல்கிறேன். மாநில அரசுதான் மத்திய அரசுக்கு அந்த புள்ளிவிவரத்தைக் கொடுக்கின்றது. இந்திய அளவில் diagnostic system நம்முடைய தமிழ்நாட்டில் வலுவாக இருக்கின்றது. எந்தக் காய்ச்சல் ஆனாலும் அதற்கு உடனே diagnose செய்து, அது என்ன காய்ச்சல் என்று கண்டுபிடிக்கக்கூடிய system இருப்பதால், நாம் அதை proper ஆக diagnose செய்து, அதனுடைய எண்ணிக்கையை நாம் மத்திய அரசுக்குக் கொடுக்கிறோம். இதைத்தான் நீங்கள் இப்போது படித்தீர்கள். நான், ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். கேரளாவில் அதிகமாக டெங்கு காய்ச்சல் இருப்பதால், கேரளா border–ல் இருக்கக்கூடிய மாவட்டங்களுக்கு

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அது ஒரு சவாலாக இருக்கின்றது. அதற்கு நாங்கள் வேகமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்லக்கூடிய மஸ்தூர் பணியாளர்கள் நான்கு மாதங்களுக்கு மட்டும்தான், அந்த பருவக் காலங்களில் மட்டும்தான் அவர்கள் பணியில் நியமிக்கப்படுவது வழக்கம். அதையும் நாங்கள் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். அந்தப் பணியாளர்களை ஆண்டு முழுவதும் பணியாற்ற வைப்பதற்கு அரசு இப்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. அது கனிவான பரிசீலனையில் இருக்கின்றது என்ற நல்ல தகவலையும் நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் அவர்கள் பேசும்போது நன்றாக இருக்கின்ற தண்ணீரிலும் டெங்கு கொசு பரவுகின்றது என்று சொன்னார்கள். நன்றாக உள்ள தண்ணீரில்தான் டெங்கு கொசு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் காய்ச்சலுக்குண்டான மருந்துகளைப் பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே ஒருமுறை கேட்டிருக்கிறேன். பன்றிக் காய்ச்சல் சம்பந்தமாகவும் நான் கேட்டேன். இந்த மருந்தை ஏன் நீங்கள் சித்த வைத்தியம் மாதிரி நீங்கள் தனியாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அனைத்து மருந்தகங்களிலும், சிறிய கடைகளிலும் அந்தக் காய்ச்சலுக்கான மருந்துகள் கிடைக்க வேண்டுமென்று நான் சொன்னேன். எந்த மருந்தகங்களில் கேட்டாலும் பன்றிக் காய்ச்சலுக்கு மருந்து கொடுக்கின்றீர்களா என்றால் இல்லை. அதை ஒருவர் வந்து பார்த்து, நீங்கள் satisfy ஆகி, அதற்குப் பின்னர் கொடுப்பதற்குள் அவர்கள் இறந்தே போய்விடுகின்றார்கள். அதனால் மருந்து கொடுப்பதை free பண்ணுங்கள். அதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? நான் முன்புகூட கேட்டேன். மருந்து கிடைக்கிறது என்று சொன்னீர்கள். சரி, என்னுடன் வாருங்கள், இரண்டு மருந்துக் கடைகளுக்குப் போய்வரலாம். எங்கேயாவது மருந்து கிடைக்கிறதா என்பதைப் பாருங்கள்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்பொழுது கூப்பிட்டாலும் நான் வரத் தயாராக இருக்கிறேன். அதில் எந்த மாற்றமும் இல்லை. காய்ச்சல் மருந்தைப் பொறுத்தவரைக்கும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மருந்துக் கடைக்குப் போங்கள். அவர் கூப்பிடுகிற இடத்துக்கெல்லாம் போகக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரைக்கும் உலக சுகாதார நிறுவனத்தில் இருக்கக்கூடிய WHO protocol விதிமுறைப்படிதான் treatment கொடுக்கவேண்டும். Over the counter–ல் போய் மருந்து மாத்திரை வாங்கி சாப்பிடுவதால்தான் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது என்பதை அரசுத் தரப்பில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதனால் எங்கே வேண்டுமானாலும் அந்த மருந்தை நாம் வாங்கி சாப்பிட முடியாது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அனைத்து தாலுகா வட்டார மருத்துவமனைகளிலும் WHO protocol trained Doctors இருக்கிறார்கள். அதனால்தான் அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். எல்லா இடங்களிலும் Over the counter–ல் விற்பனையை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மட்டும் கூடுதலாக 13 கோடி ரூபாய் டெங்கு, மலேரியா, போன்ற காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அது அறிவிப்பிலே வர இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களை நீங்கள் அவசியம் செய்ய

2017 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

வேண்டும் Sir. இது ஒன்று, இன்னொன்று பாம்புக் கடிக்கு மருந்து. அது பஞ்சாயத்தில் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன். யூனியனில் கூட தேவையில்லை. அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதிகமானவர்கள் பாம்புக் கடியில் இறந்து விடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உள்ளிட்ட இந்த மாமன்றம் முழுவதற்கும் நான் சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக மருந்து இல்லை என்ற நிலை தமிழ்நாட்டில் நிச்சயமாகக் கிடையாது. Tamil Nadu Medical Services Corporation உருவாக்கப்பட்ட பிறகு அதுபோன்ற நிலை எள்ளளவும் இல்லை. குறிப்பாக, fashion மாதிரி நாய்க்கடி மருந்து இல்லை, பாம்புக்கடி மருந்து இல்லை என்று எல்லோரும் சொல்வார்கள். உங்களுக்கு தகவலுக்காகச் சொல்கிறேன், நேற்று evening stock position கேட்டால், 5 மாத இருப்பு 1,04,000 vial பாம்புக் கடி மருந்து stock இருக்கிறது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், வட்டார மருத்துவமனைகளிலும் தயார் நிலையில் இருக்கிறது. அதேபோல நாய்க் கடி மருந்து 2 மாதங்களுக்கான stock 1,28,000 குப்பிகள் தயார் நிலையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல டெங்கு காய்ச்சல் ஒழிப்பில் மஸ்தூர் மட்டுமல்லாமல், சுகாதார ஆய்வாளர்களுக்கும் பங்கு இருக்கிறது. ஏறத்தாழ 9,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஒரு சுகாதார நிலையத்திற்கு ஓர் ஆய்வாளராவது இருக்க வேண்டும். கிட்டத்தட்ட 9,000 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், 3,200 ஆய்வாளர்கள்தான் இருக்கிறார்கள். உடனடியாக அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

அடுத்ததாக, மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். டாக்டர் கலைஞர் அவர்களால் சீரிய நோக்கத்தோடு கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் நோக்கம் என்னவென்றால் அரிதிலும் அரிதான, rarest of rare disease–க்காக ஒரு சிறப்பு சிகிச்சை. இங்கே அரசு மருத்துவமனைகளில் அந்த வசதி இல்லை, தனியார் மருத்துவமனைக்குத்தான் போக வேண்டும். பணமில்லாத காரணத்தால் அவர்கள் உயிரிழந்துவிடக் கூடாது என்கின்ற தாயுள்ளத்தோடுதான் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னர் ஆட்சி மாற்றம் வந்த பின்னர், நீங்கள் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி அரசாங்க மருத்துவமனைக்குக் கொண்டு போய்விட்டீர்கள். இன்றைக்கு அரசு மருத்துவமனையின் காப்பீட்டுத் திட்டமாக வைத்து கிட்டத்தட்ட 1,004 நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுவதோடு, இந்த வருடம் 302 சிகிச்சைகளை சேர்த்திருக்கிறீர்கள்; அதில் சில குறைபாடுகள். அதில் தவறு இருந்தால் திருத்திக்கொள்ளுங்கள். உண்மையாக இருந்தால் மாற்றிக்கொள்ளுங்கள். இப்பொழுது இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக ஒரு basic வியாதிக்குக்கூட காப்பீட்டுத் திட்டத்தின்மூலம்தான் மருத்துவம் செய்ய வேண்டுமென்ற ஒரு கட்டாயத்தை மருத்துவத் துறையில் உருவாக்கியிருக்கிறீர்கள். மருத்துவமனைக்குச் சென்றவுடனே காப்பீட்டு கார்டு இருக்கிறதா, காப்பீட்டு கார்டு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அரிதான ஒரு heart operation, by–pass operation, neuro surgery, அதற்கு நீங்கள் கேட்க வேண்டும். சாதாரண appendicitis–லிருந்து gallbladder operation–க்குக் கூட காப்பீட்டுத் திட்டம் இருக்கிறதா என்று கேட்கிறீர்கள். இதனால் என்ன ஆகிறதென்றால், மருத்துவர்களுடைய முழு நேரமும் காப்பீட்டுத் திட்டத்திற்கான card verify செய்வதற்கு ஆகிவிடுகிறது. மருத்துவர்களுடைய வேலை என்ன ஆகிறது என்றால் மருத்துவப் பணியை விட்டுவிட்டு எழுத்தர் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். காப்பீட்டுத் திட்ட அட்டையைப் பார்த்தவுடன் காப்பீட்டுத் திட்டத்தை verify செய்ய வேண்டும். Pre–authorisation letter உடனே எழுத வேண்டும். இதைக்கொண்டுபோய் காப்பீட்டுக் கழக அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். அங்கே 10 query கேட்பார்கள். அதன்பின்னர் இணையதளத்தில் பதிவேற்றம் பண்ண வேண்டும். மருத்துவர்கள் பதிவேற்றம் செய்தபின்னர் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஒப்புதல்

கொடுக்க வேண்டும். அதன்பின்னர்தான் treatment ஆரம்பிக்க வேண்டும். ஆகவே, இந்த மருத்துவத்தில் emergency golden hour என்று சொல்வார்களல்லவா, அது பாதிக்கப்படுகிறது. எனவே, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வாருங்கள். ஆனால், எழுத்துப் பணியைச் செய்வதற்கு Data entry operators–ஐப் போடுங்கள். மருத்துவர்களை அதற்குப் பயன்படுத்தாதீர்கள் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்த அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருப்பதாக நீங்கள் கருதியிருக்கிறீர்கள். அதிலே நிச்சயமாக எந்தவிதமான குறைபாடுகளும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அனைத்து வேலைகளையும் துறை பார்த்துக்கொள்கிறது என்பதை நான் உங்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்கின்றேன்.

இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்றுவிட்டோம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னது முற்றிலும் தவறு. இன்றைக்கு அம்மா அவர்களின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலே, மொத்தம் 807 மருத்துவமனைகள் empanel செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இதில் 197 அரசு மருத்துவமனைகள்தான் empanel செய்யப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 600–க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளை, மிகப் பெரிய 100 bed இருக்கக்கூடிய அனைத்து multi–specialty தனியார் மருத்துவமனைகளையும் empanel செய்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் இதே அவையில் சொல்லியிருக்கிறார்கள்; ஒரு நோயாளி எங்கே சிகிச்சை பெற வேண்டும் என்ற அந்த option நோயாளியிடம்தான் உள்ளது. ஒன்று அவர் விரும்புகிற தனியார் மருத்துவமனையிலா அல்லது அவர் விரும்புகின்ற அரசு மருத்துவமனையிலா என்கின்ற option patient–டம்தான் தருகிறோம்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

அதேபோன்று, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான அந்த card–ஐ கொண்டு வந்தால்தான் சிகிச்சை அளிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னார். அடுத்த second, Zero Delay Ward–ல் நாம் treatment start செய்கிறோம். நோயாளி 3 நாள் கழித்துகூட மருத்துவக் காப்பீட்டு அட்டையைக் கொடுக்கலாம். மருத்துவக் காப்பீட்டு அட்டை கொடுத்தால்தான் உங்களுக்கு treatment என்ற எந்த நிபந்தனையும் எங்கேயும் நிச்சயமாகக் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஏன் இந்த சந்தேகம் வருகிறது என்றால், அந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வருகின்ற அந்த வருவாயில், 15 சதவிகிதம் ** அதனால் என்ன ஆகிறது என்றால், இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ** என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்ததாக இந்த online மருந்து விற்பனைமூலம் ஒரு மிகப்பெரிய ஆபத்து உள்ளது. சுகாதாரத் துறைக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்ற இந்த இணையதள மருந்து விற்பனையைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். Online மருந்து விற்பனை என்பது 1940 ஆம் ஆண்டு Drugs and Cosmetics Act–படி தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் Netmeds, Medplus, Medlife, 1mg என்று பல கம்பெனிகள் இங்கு free ஆக online–ல் மருந்துகளை விற்பனை செய்கின்றன. இதில் என்ன ஆபத்து என்றால், இன்றைய இளைய தலைமுறையினர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதேபோன்று, இளம் பெண்களுக்கு கர்ப்பத்தடை மாத்திரைகளெல்லாம் free ஆக online–ல் கிடைக்கின்றன. இதனால் பண்பாடு, கலாச்சார சீரழிவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த கம்பெனிகள் எல்லாம் எங்கிருந்து செயல்படுகிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் இல்லை; வெளிமாநிலங்களிலிருந்துதான் இந்த விற்பனையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

அப்படியென்றால், மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாயும் அதில் போய்க்கொண்டிருக்கிறது. மருந்து விற்பனையில் மட்டும் 45,000 சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த Drugs and Cosmetics Act, 1940 மூலமாகத் தடை செய்யப்பட்ட இந்த online மருந்து விற்பனையைத் தடை செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பணியிட மாறுதலில் சில குறைகள் இருக்கின்றன. குறைகள் என்று தெரியவில்லை; ஓர் ஐயப்பாடு என்னவென்றால், இதில் வெளிப்படைத் தன்மையில்லை என்று பொதுவாக மருத்துவர்கள் மத்தியில் ஓர் ஐயப்பாடு இருக்கிறது. கல்வித் துறையில் இருப்பதைப்போல, online transfer system–ஐ ஏன் நீங்கள் கொண்டு வரவில்லை? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்தியைப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு அனைத்துச் செய்தியாளர்களிடமும் இதே வார்த்தையைச் சொல்லியிருக்கிறேன். கல்வித் துறையில் இருப்பதைப் போலவே, 100 சதவிகிதம் இனி செவிலியர்களும், மருத்துவர்களும் online–ல் பணி மாறுதல் செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பை எற்கெனவே வெளியிட்டு, இப்போது அந்த software–ஐத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இப்போது M.R.B. மூலம் நியமனம் செய்யப்பட்டிருக்கும் அத்தனை நியமனங்களுமே, M.R.B. on merit நியமனம் செய்து, first appointment கலந்தாய்வு மூலம்தான் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நல்ல கோரிக்கை. எற்கெனவே அரசு அதைச் செயல்படுத்திக்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனையில் தடை செய்யப்பட்ட online மருந்துகள் எதையும் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாக்குறுதிக்கு நன்றி. அதுபோல, அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்ற மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம்தான் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் அந்த மருந்துகள் தரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறதா? அப்படி தரக்கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டால், எத்தனை மருந்துகள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன? அதில் எவை தரமற்றவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதையும் ஒரு வெள்ளை அறிக்கையாக நீங்கள் தர வேண்டும். ஏனென்று சொன்னால், சில மருந்துகள் தேவையில்லாமல் வாங்கப்பட்டு அது expiry ஆகியிருக்கிறது. உதாரணத்திற்கு, Tacrolimus என்கின்ற immuno suppressive drug, urology problem–த்திற்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த மருந்துகள் காலாவதியாகிவிட்டதால், இந்த அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தணிக்கைத் துறையின் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: We are very particular about the quality of the drug. அதனால் ஒவ்வொரு batch–லிருந்தும் sample எடுத்து, உயர்தர ஆய்வுகளின் மூலமாக அதனைப் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றோம். அந்த sample, o.k. ஆன பிறகுதான் எங்களுடைய drug warehouse–லிருந்து அந்த மருந்து மொத்தமாக மருத்துவமனைக்குச் செல்லும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த batch–ல் ஒரு sample negative–ஆக இருந்தால்கூட அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கின்றோம். அவர்களை blacklist கூட செய்திருக்கின்றோம். தேவையென்றால் அந்த அறிக்கை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Tamil Nadu Medical Services Corporationதான் இந்தியாவிலேயே No.1 Corporation. மற்ற மாநிலங்கள் எல்லாம் இன்றைக்கு அம்மா அவர்கள் கொண்டு வந்த Tamil Nadu Medical Services Corporation–ஐப் பார்த்து வியந்து தங்கள் மாநிலத்திலும் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மற்ற மாநிலங்களான பாண்டிச்சேரி, அந்தமான் நிக்கோபார் ஆகிய இடங்களில், எங்களுக்கு நீங்களே மருந்துகளை procure செய்து தாருங்கள் என்று சொல்லும் அளவிற்கு இந்தத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள். அடுத்து, மனநல மருத்துவமனையை நீங்கள் தரம் உயர்த்த வேண்டும். இது ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகின்றன. அந்த மனநல மருத்துவமனையில் பூரண நலம் அடைந்தவர்கள்கூட அங்கேயிருந்து வெளியில் வர முடியாமல் மீண்டும் அவர்கள் சித்ரவதைக்கு ஆளாகின்றார்கள். அங்கு அப்படித்தான் இருக்கின்றது. அவர்களுடைய உறவினர்கள் உள்ளே கூப்பிட்டுச் செல்கின்றார்கள், ஆனால், வெளியே கூப்பிட்டுச் செல்வதில்லை. இப்படி பூரண குணம் அடைந்தவர்களை அழைத்து வந்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அவர் சப்ஜெக்ட்டில் பேசுகிறார் என்று அமைதியாக இருந்தேன்.

டாக்டர் இரா. மாசிலாமணி: இறுதியாக இங்கே ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தக் கொள்கை விளக்கக்

[டாக்டர் இரா. மாசிலாமணி] [2017 ஜூலை 4

குறிப்பில், சுகாதாரத் துறையில் உலகத்தர குறியீடுகளை அடைவதற்காக Vision 2023 என்று அந்த அம்மையார் அவர்கள் அறிவித்ததை இணைத்திருக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இங்கே நான் வைத்திருப்பது Vision 2023–ல் Health Sector. அதில் நீங்கள் அறிவித்த திட்டங்கள், ஒன்று, உலகத்தரம் வாய்ந்த 10 ஆயிரம் படுக்கை வசதி கொண்ட ஒரு Medical City, மருத்துவ நகரம்; அனைத்து வசதிகளோடு உலகத் தரம் வாய்ந்த எல்லா Super Speciality–ஐயும் உள்ளடக்கிய மருத்துவ சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் ஒரு மருத்துவமனை ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அதற்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீடு என்றும் சொல்லியிருக்கின்றீர்கள். 2013 ஆம் ஆண்டு அதற்கான திட்ட அறிக்கை வெளியிடப்படும், 2015 ஆம் ஆண்டு அது தொடங்கப்படும் என்று சொன்னீர்கள். அதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா, எந்த இடத்தை நீங்கள் தேர்வு செய்தீர்கள் என்பதை நீங்கள் இந்த மன்றத்தில் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இன்னும் 2 Medical City, 5 ஆயிரம் படுக்கை வசதியோடு ஒன்று பெருந்துறையில், மற்றொன்று மதுரையில். அதுவும் என்ன ஆனது? நீங்கள் சொன்னது 2013 ஆம் ஆண்டு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நன்றாகப் படிக்க வேண்டும். Vision 2023–ல் மருத்துவத் துறையைப் பற்றிச் சொன்னது எல்லாமே It is both from Corporate and Government. தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் சேர்த்துதான் நாங்கள் அந்த Vision 2023–ல் குறிப்பிட்டிருக்கின்றோம். அது நடைமுறையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று Centre of Excellence for Cancer, 500 கோடி ரூபாய் செலவில் 5 நகரங்களில் ஆரம்பிக்கப்படும் என்று

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

சொன்னீர்கள். எந்த இடத்திலாவது ஆரம்பித்திருக்கின்றீர்களா? அதற்கான திட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றனவா? 2013–ல், முதலாவது Centre of Excellence for Cancer செயல்படும் என்று சொன்னீர்கள். அது எங்கே என்று தெரியவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் புதிது புதிதாக points–ஐத் தேடிக்கொண்டிருக்க வேண்டாம். நீண்ட காலத்திற்குப் பிறகு பேசுவதனால், உங்களுக்கு நீண்ட நேரம் பேச வாய்ப்புக் கொடுத்தேன். சீக்கிரம் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றே ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 2014–2015 ஆம் ஆண்டில், கரூரில் சுமார் 250 கோடி ரூபாய் செலவில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டது. அதற்கு குப்பச்சிப்பாளையம் என்ற ஊரில் இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடம் தானமாக வழங்கப்பட்டு, அது மருத்துவக் கல்லூரி இயக்குநர் பெயருக்கு மாற்றப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, அதற்காக 25 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. அதோடு அறிவிக்கப்பட்ட புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி வந்துவிட்டது. ஏன் இன்னும் கரூரில் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நான் படித்ததாகக் கருதி தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேச அழைத்துவிடுவேன்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகின்றேன். இறுதியாக நான் ஒரு வரலாற்று நிகழ்வினைப் பதிவுசெய்து முடிக்க விரும்புகின்றேன். கிரேக்கத்து ஸ்பார்ட்டாவின் மன்னன் லியோனிடாஸ், பெர்ஷியாவின் மிகப் பெரிய படையை தெர்மாபைலே கணவாயில் ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்கு நின்று போராடி அந்தப் படையை உள்ளே வர விடாமல் தடுத்து

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

நிறுத்தினான். ஆனால், காலம் செய்த துரோகம் அந்த ஸ்பார்ட்டா வீரன் லியோனிடாஸ் தலைமையிலேதான் அந்த 300 வீரர்கள் அந்த தெர்மாபைலே கணவாயில் போராடிக் கொண்டிருந்தார்கள். எஃபியால்டஸ் என்கிற ஒருவருடைய துரோகத்தால் அந்த ஸ்பார்ட்டன் வீரர்கள் வீழ்த்தப்பட்டார்கள். ** இதையெல்லாம் தடுத்து நிறுத்துகிற. . .

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக் கடைசி வரிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

டாக்டர் இரா. மாசிலாமணி: நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இதில் ஒன்றும் தவறு இல்லை. நான் உங்களைச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) நான் உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உட்காருங்கள். கைபர் போலன் கணவாய் வழியாக வந்த இந்த ** இன்றுவரை தமிழ்நாட்டில் தன்னுடைய ஆக்டோபஸ் கரங்களை நீட்ட விடாமல் தடுத்திருக்கிற இயக்கம் இந்தத் திராவிட இயக்கம். தந்தை பெரியார் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களால், கலைஞர் அவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அண்ணாவின் பெயரை வைத்திருக்கும் நீங்கள், திராவிடத்தின் பெயரை வைத்திருக்கும் நீங்கள், அந்த ** (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்

மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூட்டேரிப்பட்டு கூட்டுப்பாதையில் ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் ஆம்புலன்ஸ் வசதியுடன் ஒரு அவசர சிகிச்சை மையமும், ஒரு தீயணைப்பு நிலையமும் அமைத்துத் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், கடுகுப்பட்டு மேல்ஓலக்கூர் செல்லும் சாலையில் தொண்டி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். வல்லம் ஒன்றியம்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

கீழையூர் மணியப்பட்டில் இருந்து கொங்கரப்பட்டு செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டும். மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். நெடிமோழியனூர் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும். ஓலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமம், ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். மயிலம் ஒன்றியம், நெடிமோழியனூர் கிராமத்தையும் வல்லம் ஒன்றியம், நெகனூர் புதூர் கிராமத்தையும் தனித்தனி பஞ்சாயத்தாகப் பிரித்து அறிவித்திட வேண்டும். வல்லம் ஒன்றியம், திருவம்பட்டு கிராமம், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், பேரணாம்பட்டு கிராமத்தில் ஒரு திறந்தவெளிக் கிணறு வெட்டித் தர வேண்டும். சோழங்குணம், தைத்தான்பட்டி பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டும். மயிலம் ஒன்றியம், பள்ளிக்குளம் ஊராட்சிக்குட்பட்ட இந்திரசன்குப்பம் கிராமத்திலுள்ள மயானத்திற்குப் பாதை அமைத்துத் தர வேண்டும். ஓலக்கூர் ஒன்றியம், செம்பாக்கம் பஞ்சாயத்து, மேட்டூர் கிராமத்தில் பகுதி நேர ரேஷன் கடை இயக்கப்பட வேண்டும். மயிலம் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். மயிலம் ஒன்றியம், பெரியதச்சூர் செல்லும் பழுதடைந்த சாலையையும், சாலைமடம், அகரம் மற்றும் விநாயகபுரம் செல்லும் சாலைகளையும் புதிய தார்ச் சாலைகளாக அமைத்துத் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமம், பழுதடைந்து பயன்பாடு இல்லாத பால்வாடி கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும். வல்லம் ஒன்றியம், தென்புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட ஏரியில் உள்ள மதகை புதியதாக கட்டித் தர வேண்டும். ஓலக்கூர் ஒன்றியம், கொடியம் ஊராட்சி, பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். ஓலக்கூர் ஒன்றியம், கீழ்காரணை கிராமம், சத்துணவுக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும். வடம்பூண்டி பஞ் சாயத்து, பெரப்பேரியில் எஸ்.டி. பிரிவினருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். மாம்பாக்கம்–கணேசபுரம் செல்லும் இணைப்புச் சாலையை சரிசெய்து, புதிய சாலை அமைத்துத் தரவும், கணேசபுரம் கிராமத்தில் ஒரு திறந்தவெளி கிணறு வெட்டவும் வேண்டும். ஓலக்கூர் ஒன்றியம், கருவம்பாக்கம்–கிராண்டிபுரம் புதூர் செல்லும் சாலையைச் செப்பனிட்டு புதிய தார்ச் சாலை அமைத்திட வேண்டும். வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை

[டாக்டர் இரா. மாசிலாமணி] [*2017 ஜூலை 4*

கிராமத்திற்கு சுடுகாட்டுப் பாதை அமைத்துத் தர வேண்டும். வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமம், பால்வாடிக் கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மேல்சேவூர் பஞ்சாயத்து, ஈச்சூர் கிராமம், புதிதாக சுடுகாட்டுப் பாதை அமைத்துத் தர வேண்டும். மேல்சேவூர் பஞ்சாயத்து, கல்லாங்குப்பம் கிராமம், புதிய ரேஷன் கடை கட்ட வேண்டும். கம்பந்தூர் பஞ்சாயத்து, பாண்டியன்குளம் சாலையைச் சீரமைத்து புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டும். கீழ்பாப்பாம்பாடி–சேவூர் பாரஸ்ட் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டும். தென்புத்தூர் தளவாளப்பட்டு இடையே ஆற்றில் தரைப் பாலம் அமைக்க வேண்டும். செங்கமேடு கிராமத்திற்கு புதியதாக பேருந்து இயக்க வேண்டும். விழுப்புரத்திலிருந்து செ.குன்னத்தூர் வரும் 15 ஆம் நெம்பர் டவுன் பஸ் செ.குன்னத்தூர் கிராமத்திலிருந்து கல்லாளிப்பட்டு, மட்டப்பாறை வழியாக விழுப்புரம் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். தடம் எண் 15 டவுன் பஸ்ஸை காலை 8–00 மணிக்கு கல்லாளிப்பட்டு கிராமத்திலிருந்து செஞ்சிக்கும், மாலை 4–30 மணிக்கு செஞ்சியிலிருந்து கல்லாளிப்பட்டு கிராமத்திற்கும் இயக்கிட வேண்டும். திண்டிவனத்திலிருந்து செ.குன்னத்தூர் செல்லும் தடம் எண் 35 டவுன் பஸ்ஸை கல்லாளிப்பட்டு வரை நீட்டித்து இயக்க வேண்டும். திண்டிவனத்திலிருந்து மரூர் வரை செல்லும் தடம் எண் 16 பேருந்தை மரூரிலிருந்து திருவம்பட்டு வரை நீட்டித்து, பள்ளி மாணவர்கள் ரெட்டனைப் பள்ளிக்குச் சென்று வரவும், தற்போது நிறுத்தப்பட்டுள்ள பேருந்தை மீண்டும் இயக்கிடவும் வேண்டும். வல்லம் ஒன்றியம், ராஜாம்புலியூரிலிருந்து செஞ்சிக்கு புதிய பேருந்து இயக்கிட வேண்டும். விழுப்புரத்திலிருந்து கீழ்வயலாமூர் செல்லும் தடம் எண் 29–ஐ மாலை 4–30 மணியளவில் வி. பாஞ்சாலம் வரை சென்று வர நடவடிக்கை எடுக்க வேண்டும். திண்டிவனத்திலிருந்து வி.நல்லாளம் செல்லும் தடம் எண் 28 டவுன் பஸ் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்கிட வேண்டும். மயிலத்திலிருந்து விழுப்புரம் செல்லும் தடம் எண் 11 சி பேருந்தை மயிலத்திலிருந்து பாதிராப்புலியூர், வீடூர், வீடூர்டேம், ஆத்திக்குப்பம், ஏழாய், சித்தனி வழியாக விழுப்புரம் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். திண்டிவனத்திலிருந்து பாஞ்சாலம், ஏவளூர், கீழ்காரணை, புறங்கரை வழியாக ஓலக்கூர் செல்லும் தடம் எண் 21 பேருந்தை மீண்டும் இயக்கிட வேண்டும். திண்டிவனத்திலிருந்து மோழியனூர் செல்லும் தடம் எண் 8 பேருந்தை தொடர்ந்து விழாக் காலங்களிலும் இயக்கிட வேண்டும். செஞ்சியிலிருந்து திருவம்பட்டு, கொத்தமங்கலம் வழியாக பேரணி

2017 ஜூலை 4] [டாக்டர் இரா. மாசிலாமணி]

கூட்டுரோடு செல்லும் பேருந்தை கல்லடிக்குப்பம் சென்றுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். விழுப்புரத்திலிருந்து ரெட்டணை செல்லும் தடம் எண் 38–ஐ காலை 10–00 மணிக்கும், மாலை 6–00 மணிக்கும் கூடுதலாக இயக்கிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் தெளிவாகப் பேசினார். அதற்குப்பிறகு கடைசியாக உரையை முடிக்கின்றபோது, ** என்று தேவையில்லாத வார்த்தைகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். இந்தக் கருத்தை 1999 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை இருக்கின்றபோது சொல்லியிருந்தால் இவர்கள் உண்மையிலேயே திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அன்றையதினம் அவர்களோடு கூட்டணியில் இருந்து அமைச்சரவையிலும் இடம் பெற்றுவிட்டு, இப்போது வந்து கூட்டணி மாறிய காரணத்தினால் அவர்கள் தேவையில்லை என்று அந்த இயக்கத்தைப் பற்றி மாற்றிச் சொல்வது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து ஏற்கெனவே நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், 1999–2004–லேயே இதைக் கேட்க வேண்டியதுதானே என்று கேட்டார்கள். ** ஆகவே, அப்போது எதிர்க்க வேண்டிய அவசியம் எழவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*2017 ஜூலை 4*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** எப்போதும்போல்தான் இருக்கின்றார்கள். உங்களுடைய மனநிலைதான் மாறியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, MEDIPARK பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். செங்கல்பட்டு அருகில் TIDCO joint venture–உடன் நிலத்தைக் கையகப்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு முன்வந்துள்ளது. உடனடியாக அந்தத் திட்டப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இரண்டுபேர் சொன்னதும் முடிந்தது. அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) போதும், வேண்டாம். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையை அளிக்கட்டும். (குறுக்கீடு) போதும், இனி வேண்டாம். நீங்கள் சொன்னது, அவர் சொன்னது எல்லாம். . . (குறுக்கீடு) வேறு பொருள் குறித்துப் பேசப் போகிறீர்களா? சரி. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, NEET தேர்வு தேவையில்லை, அதற்கு exemption வேண்டுமென்று நாம் அனைவரும் ஒன்றாக இருந்து இந்த மாமன்றத்தில் ஒரு மசோதாவை நிறைவேற்றினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போராடி அதற்கு ஒரு exemption வாங்கியிருந்தால், இன்றைக்கு நமது பிற்படுத்தப்பட்ட*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2017 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

மாணவர்கள் அதிகளவில் மருத்துவக் கல்லூரிகளில் சேர வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், அதில் தவறிவிட்டார்கள். அதேபோன்று சுகாதார முறையில் இருக்க வேண்டுமென்று சொல்வதுதான் சுகாதாரத் துறை. அந்தத் துறையினரே **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எதற்காக, ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) வெளிநடப்புச் செய்வதற்காக இவ்வாறு பேசுகிறீர்களா?

திரு. துரைமுருகன்: இந்த அவையில் ஏற்கெனவே இதுகுறித்துப் பேசியிருக்கிறோம். அவையில் ஏற்கெனவே பேசி பதிவு செய்யப்பட்டுள்ள விஷயம்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது எதற்காக அதுகுறித்துப் பேசுகிறீர்கள்? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) நீங்கள் அதைத்தான் செய்யப் போகிறீர்கள்; செல்லுங்கள். நீங்கள் அதைத்தான் செய்வதற்குத் தயாராகிவிட்டீர்கள் என்று நான் ஏற்கெனவே தெரிந்துகொண்டுவிட்டேன். (குறுக்கீடுகள்) நேரமாகிவிட்டதல்லவா, அதனால் வீட்டிற்குப் போக வேண்டும் என்று செல்கிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டதெல்லாம் துலங்க வைத்த தூய ஒளிச் சுடராம் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, எப்போதும் எல்லாமும் வென்றீர்கள். அம்மா எப்போதும் எல்லாமும் வென்றீர்கள் எங்கள் அம்மா இப்போது எங்கேயோ சென்றீர்கள்.

பிற்பகல் 3–45

தவிக்கின்றோம், துடிக்கின்றோம், தினம் தினம் கண்ணீர் வடிக்கின்றோம், எங்கள் அம்மா இப்போது எங்கே சென்றீர்கள்? நாங்கள் நித்தம் தொழுது நினைத்துருகும் தெய்வத் திருமுகம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

எங்கே அம்மா? மானுடம் போற்றிட, மக்கள் காத்திட மலர்ந்த புன்னகை எங்கே அம்மா? கடைக்கோடி குடிமகனையும் கண்டு உதவிட்ட கருணைப் பார்வை எங்கே அம்மா? தங்கள் கருணை பார்வை எங்கே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்த் தாய் செவிகளில் தேன் பாய ஒலிக்கும் எங்கள் தாயின் குரல் எங்கே அம்மா? எங்கள் தாயின் சிங்கக் குரல் எங்கே அம்மா? நோயின்றி வாழ 100 திட்டங்கள் அறிவிப்பீர்களே, நோயின்றி, நாங்கள் வாழ, நாடும் வாழ 100 திட்டங்கள் இந்த மன்றத்திலே 110 விதியின்கீழ் அறிவித்தீர்களே அம்மா, தாயின்றிப் பிள்ளைகளாய் தவிக்கின்றோம் நாங்கள், மீண்டும் வருவீர்களா அம்மா, திட்டம் எமக்குத் தருவீர்களா அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா என்பது வெறும் வார்த்தை மட்டுமல்ல, அது வேத வார்த்தை, எமது ஜீவ வார்த்தை, அது எங்கள் உயிர் வாழ்க்கை. எண்ணிப் பார்க்கின்றோம். கோமான்களுக்கு மட்டுமே உரித்தான பதவிகளை, எங்களைப் போன்ற சாமானியருக்கும் பொதுவாக்கிய பூவுலகத்தின் அதிசயம், எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

போயஸ் தோட்டம், எங்கள் புனித ஸ்தலம். எங்கள் தெய்வம் குடியிருந்த திருத்தலம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு சில நிகழ்வுகளை நான் இப்பொழுது காட்சிப்படுத்த விரும்புகின்றேன்.

பொதுவாக எங்கள் அம்மா அவர்கள் கோட்டைக்குப் புறப்படுகிறார் என்று சொன்னால், convoy alert என்ற செய்தி வந்து சேரும். Convoy alert என்ற செய்தி வந்தாலே நாங்கள் எல்லோரும் alert ஆகி விடுவோம். ஏன் ஒட்டுமொத்தக் கோட்டையே full alert ஆகிவிடும். அதற்குப் பின்னாலே, சிறிது நேரத்திலே convoy left என்கின்ற செய்தி வரும். அதற்குப் பின்னாலே, சிறிது நேரத்திலே convoy left என்ற செய்தி வந்துவிட்டால் எங்கள் அம்மா அவர்கள் சட்டசபைக்குப் புறப்பட்டு விட்டார்கள் என்று அர்த்தம். எங்கள் அம்மா அவர்கள் சட்டசபைக்குப் புறப்பட்டுவிட்டார்கள் என்று சொன்னால், இங்கே மொத்த சபைக்கும் மூச்சிரைக்கும். அம்மா அவர்கள் வருகின்ற வழியிலே, வழி நெடுக நிற்கும் காவல் துறையின் காக்கிச் சீருடைக்கும் கூடுதல் கம்பீரம் வந்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) நிலமகளே மகிழ்ந்து, புகழ்ந்து, நிமிர்ந்து நிற்பார்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அம்மா அவர்களுடைய கார், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையைக் கடந்து, சென்னை கடற்கரை சாலையிலே இடதுபுறமாகத் திரும்பும். நான் எண்ணிப் பார்க்கின்றேன். அப்படி அம்மா அவர்கள் வாகனம் கடற்கரைச் சாலையிலே இதோ வருகிறது என்று சொன்னால், அந்த வங்கக் கடலே அம்மா அவர்களை வணங்கி நிற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், அந்த வங்கக் கடலே அலைகளை அனுப்பி அம்மாவை ஆசீர்வதிக்கும். அலைகளோ உயர எழுந்து எங்கள் அம்மாவை ஈரக் கண்ணால் ஆவலோடு எட்டிப் பார்க்கும் அந்தக் காட்சியை நான் எண்ணிப் பார்க்கின்றேன். கடற்கரைச் சாலையைத் தாண்டி அம்மாவின் வாகனம் வேகமாக நேப்பியர் பாலம் அருகே வரும், தெய்வத்தின் தேர் பவனி போல எங்கள் அம்மாவின் கார் பவனி என் கண் முன்னே இன்றைக்கு நின்று கொண்டிருக்கிறது. அம்மாவின் திருமுக தரிசனம் காண இருபுறமும் மக்கள் வெள்ளம் பூத்திருக்கும், விழிகளோடு காத்திருக்கும். அந்தக் காட்சியை நாங்கள் நினைத்துப் பார்க்கின்றோம்.

பிற்பகல் 3–50

இரு விரல் காட்டி புன்னகைக்கும் அத்திருமுகத்தை ஒரேயொரு முறை பார்த்துவிட்டால் பிறவிப் பயன் பெற்றுவிட்ட பெருமகிழ்ச்சியில் அகமெல்லாம் நிறைந்த ஆனந்தத்தில் மிதப்பார்கள் மக்கள், அந்தக் காட்சியை நான் காட்சிப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் கோட்டைக்கு வருகிறார்கள் என்றால் அம்மா அவர்களை வரவேற்க அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தயாராக இருப்போம். அம்மாவுடைய கார் நம்பர் TN 09 B 6167. அம்மாவின் அந்த அழகு வாகனம் அற்புதமாய் தன் முகப்பை கோட்டைக்குள் நுழைகின்ற அந்த ஒற்றை நொடியிலே தாயைக் கண்ட கன்றாக, நாங்களெல்லாம் ஒன்றாக, கரிசன கடவுளின் தரிசனம் கிடைக்க வேண்டி கரம் குவித்து தவம் இருப்போம். சிரம் பணிந்து காத்திருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அதிசய நினைவுகள், அடிக்கடி வந்து எங்கள் நெஞ்சில் சுழன்று சுழன்று சுட்டெரிக்கின்றது தாயே! தீர்க்க முடியாத துயரம் எங்களைத் துளைத்தெடுக்கிறது தாயே! துக்கம் எங்களை வாட்டுகின்றது. நித்தம் எங்களை வாட்டுகின்றது. அம்மாவின் convoy alert–ம், convoy left–ம், மீண்டும் எங்கு காண்போம்,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

எப்போது காண்போம் என்று எங்கள் மனம் ஏங்குகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

அம்மாவினுடைய கார் இந்தக் கம்பீரமான கோட்டையின் போர்ட்டிகோவிலே வந்து நிற்கும். போர்டிகோவிலே அம்மாவினுடைய கார் நின்றதற்குப் பிறகு அம்மா அவர்கள் காரை விட்டு இறங்குவார்கள். எப்படி இருக்கும் அந்தக் காட்சி? அம்மா, தேரிலிருந்து இறங்கும் தேவதைபோல காரிலிருந்து தாங்கள் இறங்கும்பொழுது (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பார்வைபட்டவர் அன்றே பாக்கியசாலி. தாங்கள் அழைத்துப் பேசினால் அக்கணமே அவர் அதிர்ஷ்டசாலி என்ற நிகழ்வுகளை நாங்கள் எத்தனை முறை கண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைச்சர் பெருமக்கள் எல்லோரும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், இன்று அம்மா அவர்கள் என்னைப் பார்த்துதான் புன்னகைத்தார் என்று எண்ணியெண்ணி எங்களை rechargeசெய்து கொண்டோமோ அந்த நிகழ்வை நான் இன்றைக்கு எண்ணிப் பார்க்கின்றேன். அப்படிப்பட்ட அம்மா அவர்களுடைய ஒற்றைப் புன்னகை, ஓரப்புன்முறுவல், கடைக்கண் பார்வை, கனிவான கையசைவு, தாயே எங்கள் நாடி, நரம்பில், ஊனில், உயிரில், உதிரத்தில், உணர்வுகளில் புகுந்து பிறவிப்பயன் அடைந்த பேரின்பத்தை இன்றும் எண்ணியெண்ணி பார்க்கின்றோம் தாயே! இன்றும் எண்ணியெண்ணி பார்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு பிறகு அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திற்குள்ளே தங்களுடைய பொற்பாதம் பதிப்பார்கள். அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திற்கு எப்படி வருவார்கள்? சரித்திரத்திலே நிலைத்திட்ட எங்கள் அம்மா அவர்கள், இந்தச் சட்டசபை வளாகத்திற்குள் மெல்லமெல்ல அடியெடுத்து இந்தப் பச்சை விரிப்பில் பொற்பாதம் பதிக்கும் மறுநொடியிலிருந்து எங்கள் இதயம் வழக்கத்தைவிட கொஞ்சம் வேகமாக துடிதுடிக்கும். ஓடும் இரத்த ஓட்டம் ஒலிம்பிக்கை தோற்கடிக்கும். பயத்தில் உடல் கொஞ்சம் படபடக்கும். ஆனால், மறுகணமே உலகப் பேரரசியாம் தங்களைக் கண்டவுடன் உடலின் ஒவ்வொரு cell–ம் உற்சாகத்தில் ஓடி விளையாடுமே தாயே; அந்த நினைவுகளை நாங்கள் எண்ணிப் பார்க்கின்றோம்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன். அதுவரை சலசலத்த இந்த மன்றம், அதுவரை சலசலத்த சபையோ சப்தநாடியும் ஒடுங்கி மாண்புமிகு சபை எழுந்து தங்களின் முகம் பார்த்து வணங்கும் சபைக்கு, பதில் வணக்கம் சொல்லியபடி முதல்வரின் அரியாசனத்தில் தாங்கள் அமரும் அழகோ அழகு தாயே! அந்தக் காட்சியை எண்ணிப் பார்க்கின்றேன்.

இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராக இருக்கட்டும் அல்லது பேரவைத் துணைத் தலைவராக இருக்கட்டும், தன்னை வணங்கிய தொண்டராகிய தங்களுக்கும் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆசனத்தைத் தந்து, தான் வணங்கும் இந்த ஆசனத்தைத் தந்து, அந்த ஆசனத்திலே அமர்ந்து நீங்கள் வணங்குகின்ற அந்த வணக்கத்தையும் கனிவோடு ஏற்றுக்கொள்கின்ற அந்தப் பாங்கையும் நான் எண்ணிப் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் காட்சியையும் நான் எண்ணிப் பார்க்கின்றேன்.

அளவிட இயலாத கம்பீரம், கோடிப் பூக்கள் கொட்டியதைப்போல புன்னகைப் பூத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய முகம் இன்று கனவுகளாய், நெஞ்சில் சுமக்கும் கனத்த நினைவுகளாய் காற்றுவெளியிலே கலந்துவிட்டது. தாயே, நெஞ்சில் சுமக்கும் கனத்த நினைவுகளாய் காற்றில் கலந்துவிட்டது தாயே. நீங்கள் இல்லாத சபை நிலவு இல்லாத வானமாக, நீரில்லாத பூமியாக, அலையில்லாத கடலாக உயிர் இல்லாத உடலாக உள்ளது. துக்கம் தொண்டையை அடைக்கின்ற நேரத்திலே ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கின்றேன் தாயே! தெய்வமாய் இருந்து, எங்கோ இருந்து, எங்கள் உரையைக் கேட்கிறீர்கள் என்ற நம்பிக்கையில் என் உரையை நான் இங்கே துவங்க விரும்புகின்றேன். எங்கோ இருந்து எங்கள் உரையைக் கேட்பது மட்டுமல்லாமல், எங்கோ தெய்வமாக இருந்து எங்களை வழி நடத்துகின்றீர்கள் என்ற நம்பிக்கையிலே நாங்கள் எங்கள் பணியைத் தொடருகின்றோம் தாயே!

பிற்பகல் 3–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

படபடக்கும் மனிதரெல்லாம் உயர் பதவி காண்பதில்லை, பண்பாளர் உங்களைப்போல் எளிமை காண்பதில்லை. மறைந்த அம்மாவோடு மறையும் இவ்வாட்சி, மறைந்த அம்மாவோடு மறைந்துவிடும் இவ்வாட்சி என சில பேர் மனப்பால் குடித்தார்கள். மனப்பால் குடித்தவர்கள் எல்லாம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் ஆட்சி கண்டு மலைப்பாகிப் போனார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அடியொற்றி, முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் சிறப்புற பல்வேறு ஆக்கமும், ஊக்கமும் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நன்றியோடு இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பதவியேற்றவுடன், முதல் 5 கோப்புகளிலே ஒன்றாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 12 ஆயிரம் ரூபாயாக இருந்த மகப்பேறு நிதியை, 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 20 கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்ட மகப்பேறு ஒப்புயர்வு மையத்தை நேரிலே வந்து தொடங்கி வைத்தீர்கள். எங்களது மாவட்டம் புதுக்கோட்டையிலே பிரமிக்கத்தக்க புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைத் தங்கள் திருக்கரங்களால் தொடங்கி வைத்தீர்கள். சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்து cochlear implant அறுவை சிகிச்சை செய்த 200 குழந்தைகளை கண்டு மகிழ்ந்து, மருத்துவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, 505 புதிய மருத்துவர்களுக்கு Multi Super Speciality மருத்துவமனையிலே பணி நியமன ஆணைகளை வழங்கி தொடர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அள்ளி, அள்ளிக் கொடுத்து மருத்துவத் துறையை ஒரு மகத்தானச் சேவைத் துறையாக உருவாக்கிக் காட்டினார்கள். 'என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று இவர்கள் எண்ணும் முன்னே, 'பொன்னும் கொடுப்பார், பொருளும் கொடுப்பார், போதாது, போதாது என்றால் இன்னமும் கொடுப்பார் இவையும் போதாது என்றால் அள்ளி அள்ளிக் கொடுப்பார்'; அவர் தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய வழியிலே தொடர்ந்து மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய, அம்மா அவர்களின் வழியில் ஆட்சியைத் திறம்பட நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மரியாதைக்குரிய

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையை இன்றைக்கு மிகச் சிறப்பான துறையாக, இன்றைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஒரு சிறப்பான துறையாக ஒரு role model துறையாக, well performing department ஆக இன்றைக்கு அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கின்றார்கள். ஒரு மாநிலத்தை எப்படி அளவிட வேண்டுமென்று சொன்னால், சுகாதாரக் குறியீடுகளினுடைய நிலையை வைத்துதான் அளவிட முடியும். அந்தவகையிலே இன்றைக்கு விவாதத்திலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதுபோல, நம்முடைய ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை குறியீடுகளிலே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தக் குறியீடுகளைப் பொறுத்தவரையிலே இந்திய அரசு, Union Minister, WHO–உலக சுகாதார நிறுவனம் என அத்தனை பேரும் பாராட்டத்தக்க வகையிலே மிகச் சிறப்பான குறியீடுகளை நாம் அடைந்திருக்கின்றோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 3,888 கோடி ரூபாய் budget என்ற நிலையை மாற்றி, 10,158 கோடி ரூபாயை இன்றைக்கு அள்ளி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் அதற்குக் காரணம் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். பல்வேறு விளக்கங்களை இந்த விவாதத்தின்போது நாங்கள் அளித்திருந்தாலும்கூட, இன்றைக்கு நான்கூட மீண்டும், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களைப் பார்த்து கேட்டேன். என்ன திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, உங்களுடைய தலைவர் கொண்டு வந்தார் என்று பட்டியலிடுங்கள் என்று கேட்டேன். காரணம், அவர்களாலே பட்டியலிட இயலாது. ஏனென்றால், அந்த ஒட்டுமொத்தப் பட்டியலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்கும், அம்மாவிற்கும் சொந்தம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இன்றைக்கு நாடு போற்றக்கூடிய அம்மா குழந்தைகள் நலப் பரிசு பெட்டகமாக இருக்கட்டும், இன்றைக்கு தாய்மார்கள் பாராட்டக்கூடிய அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டமாக இருக்கட்டும், அம்மா ஆரோக்கியத் திட்டமாக இருக்கட்டும்,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டமாக இருக்கட்டும், உலகத்திலே இருக்கக்கூடிய அத்தனைப் பேரும் பாராட்டக்கூடிய முன்னோடித் திட்டமான தாய் பால் வங்கித் திட்டமாக இருக்கட்டும், பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகளாக இருக்கட்டும், விலையில்லாத sanitary napkin வழங்குவதாக இருக்கட்டும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டமாக இருக்கட்டும், 126 CEmONC மையங்கள், பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், birth companion திட்டம் என தாயும் சேயும் வீடு திரும்பக்கூடிய drop home facility ஆக இருக்கட்டும், 108 ஆம்புலன்ஸ் திட்டமாக இருக்கட்டும், எல்லாத் திட்டங்களையும் இன்றைக்கு மிகச் சிறப்பாக இந்திய அளவிலே திறம்படச் செயலாற்றக்கூடிய துறையாக இன்று மக்கள் நல்வாழ்வு துறை விளங்கி வருகிறது.

பிற்பகல் 4–00

காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் Tamil Nadu Medical Services Corporation–ஐ கொண்டு வந்தார்கள்; மாண்புமிகு அம்மா அவர்கள்தான் TANSACS–Tamil Nadu State Aids Control Society–ஐ கொண்டு வந்தார்கள்; மாண்புமிகு அம்மா அவர்கள்தான் Tamil Nadu Health System Project–TNHSP–ஐ கொண்டு வந்தார்கள்; மாண்புமிகு அம்மா அவர்கள்தான் MRB–Medical Recruitment Board–ஐ கொண்டுவந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் TRANSTAN என்ற அமைப்பைப் புதிதாக உருவாக்கினார்கள்; இரண்டு முறை மத்திய விருதைப் பெற்று, இப்போது மூன்றாவது முறையாக முன்னணியில் இருக்கக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடுத்தது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துகின்ற திட்டம் முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என எல்லாத் திட்டங்களையும் மிகச் சிறப்பாகக் கொடுத்த அம்மா அவர்கள் கனவு கண்டார்கள். இன்றைக்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, வலிமையான, சக்தி வாய்ந்த, வளர்ச்சியான, ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான் அம்மா அவர்களுடைய கனவு. 'இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற அந்தஸ்தை தமிழ்நாடு அடைந்து மக்கள் நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டுமென்பதே என் கனவு'

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் கண்ட கனவை நனவாக்க வேண்டுமென்று அம்மா வழியிலே இருக்கக்கூடிய நம்முடைய அரசு, முதலமைச்சர் தலைமையிலே தொடர்ந்து அம்மா அவர்களுடைய பாதச் சுவடுகளை வேதச் சுவடுகளாகப் பற்றி, அதை நிறைவேற்றக்கூடிய அந்தப் பணியிலே தொடர்ந்து இருக்கின்றது. இன்றைக்குப் பேசுகின்றபோது உறுப்பினர்கள் சொன்னார்கள், M.B.B.S. மருத்துவ இடங்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே வெறும் 300 M.B.B.S. மருத்துவ இடங்களைக் கூடுதலாக 5 ஆண்டுகளிலே பெற்றுக் கொடுத்தார்கள். இப்போது 6 ஆண்டுகளிலே அந்த 300 இடங்களை 1,000 இடங்களாக உருவாக்கிக் கொடுத்திருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 1,000 இடங்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு ரூ.2,000 கோடி அளவிற்கு infrastructure வேண்டும். அதேபோல, பணி நியமனங்கள். 600 கோடி ரூபாய்க்குமேல் equipments, நவீன உபகரணங்கள் அத்தனையும் கொடுத்து, Medical Council of India, இந்திய மருத்துவக் கழகத்திடம் அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு other States are struggling to maintain the status quo. மற்ற மாநிலங்களில் எல்லாம் தங்கள் நிலையைத் தக்க வைத்துக்கொள்வதற்கே தடுமாறிக் கொண்டிருக்கின்ற நிலையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு நிலையைத் தக்க வைத்துக்கொள்வதோடு, உயர் இலக்கை அடைகின்ற வகையிலே 1,000 M.B.B.S. இடங்களைப் பெற்றிருக்கிறது. P.G. seats–ஐ பொறுத்தவரையில் இந்த ஆண்டு மட்டுமே அதாவது, ஓர் ஆண்டிலேயே 305 seats பெறப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மருத்துவர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் பேசும்போது, ஒரு seat, இரண்டு seats P.G. seat–ஐ நாங்கள் increase செய்தோம் என்று சொன்னார். அது உண்மை. ஆனால், இப்பொழுது இந்த ஓராண்டில் மட்டும் 305 M.D., M.S., P.G. seats–ஐ இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். M.R.B.–ன் மூலமாக 21,023 பேர் பணி நியமனம் செய்யப்பட்டு, கலந்தாய்வின் மூலமாகப் பணியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களெல்லாம் வந்து, வியந்து, பார்த்து, இதேபோன்ற திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டுமென்று எண்ணுகின்ற அளவுக்கு முதன்மைத் திட்டமாக இருப்பது இன்றைக்கு முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். இதிலே ஒரே ஒரு சிறப்பம்சம் என்னவென்று சொன்னால், கடந்த ஆண்டுவரை 497 ரூபாய் ஒருவருக்கு premium. இப்பொழுது அதை 699 ரூபாய் என 202 ரூபாயைக் கூடுதலாக அரசு கொடுத்து, பின்னர் ரூ.702 கோடி என்று இருந்ததை ரூ.1,348 கோடி அளவிற்கு ஆண்டுக்கு ஒதுக்கி, இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே Heart transplantation—இருதய மாற்று அறுவை சிகிச்சை, Lung transplantation, Liver transplantation போன்ற மாற்று அறுவை சிகிச்சைகளை 40 இலட்சம் ரூபாய் செலவில் செய்து கொள்ள ஏதுவாக முதலமைச்சருடைய காப்பீட்டுத் திட்டத்திலே அதற்கு நிதி ஒதுக்கக்கூடிய அற்புதமான நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு உறுதி செய்திருக்கிறது. 5,040 பேர் இதுபோன்ற high end surgery–ல் சிகிச்சையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று இந்த TRANSTAN அமைப்பு என்பது மிக அற்புதமான அமைப்பு. அதைக்கூட உறுப்பினர் சொன்னார், நீங்கள் வெளியிட வேண்டுமென்று. TRANSTAN–ஐ பொறுத்தவரையில், ஒளிவு மறைவற்ற முறையிலே, நேர்மையான முறையிலே அதில் எந்தவிதமான பரிந்துரைக்கும், எதற்குமே இடமளிக்காத வகையிலே TRANSTAN என்ற அமைப்பு வெளிப்படையாக online மூலமாக இன்றைக்கு உடல் உறுப்பு வேண்டுமென்று சொல்லக்கூடிய நோயாளிகள் பதிவு செய்துகொள்ளலாம். Seniority அடிப்படையிலே, முதலிலே அரசு மருத்துவமனை, அதற்குப் பின்னால் தனியார் மருத்துவமனை, அதற்கும் இல்லையென்றால், வெளி மாநிலத்தைச் சார்ந்தோர் என்ற வகையிலே இன்றைக்கு மிகச் சிறப்பாக உடல் உறுப்பு தான மையம் நம்முடைய Multi Speciality மருத்துவமனையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 4–05

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோது சொன்னதுபோல, இன்றைக்கு JICA என்பது அற்புதமான திட்டம். மாண்புமிகு

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

முதலமைச்சர் அவர்கள், இந்த மாதத்திலே ஜப்பான் நாட்டு நிறுவனங்களோடு சேர்ந்து, ரூ.1,634 கோடியில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். அதாவது இந்தத் திட்டத்தினுடைய நோக்கமே மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட கனவு என்பது ஏதோ சென்னை மட்டும் தமிழகத்தினுடைய மருத்துவத் தலைநகரமாக, இந்தியாவினுடைய மருத்துவத் தலைநகரமாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல. இந்தியாவினுடைய மருத்துவத் தலைநகரமாக ஏற்கெனவே சென்னையை மாற்றிக் காட்டியவர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு சேர்த்து அம்மா அவர்கள் என்ன கனவு கண்டார்கள் என்று சொன்னால், Tier II cities, சென்னையை அடுத்திருக்கக்கூடிய, இரண்டாம் நிலை நகரங்களையும், சென்னையை அடுத்து மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் போன்ற இரண்டாம் நிலை நகரங்களையும் மருத்துவத் தலைமையிடங்களாக மாற்றக்கூடிய ஓர் அற்புதமான முயற்சிதான் இந்த JICA திட்டம். இத்திட்டம் ரூ.1,634 கோடி நிதியொதுக்கம் பெற்றிருக்கிறது. இத்திட்டப் பணிகளெல்லாம் தற்போது தொடங்கவிருக்கின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தத் திட்டம் முடிக்கப்படுகின்ற நேரத்திலே, high end equipments—அதாவது மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், 'You should not compare our Department with other States, பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களோடு நீங்கள் தமிழகத்தை ஒப்பிட வேண்டாம் என்று.' தமிழகத்தினுடைய சுகாதாரத்தைப் பொறுத்தளவிலே வளர்ந்த மேலை நாடுகளோடு, well developed nations-உடன் நீங்கள் ஒப்பிட வேண்டும்' என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட கனவு. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதியொதுக்கத்தின் மூலமாக வேகமாக, சுறுசுறுப்பாக செயலாற்றி வருகிறது. 'You should compare with well developed nations' என்று சொன்னார்கள். வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, on par with well developed nations என்ற வகையிலே இன்று மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பாக அடியெடுத்து வைக்கின்றது. நிச்சயமாக இந்தத் திட்டம் முடிக்கப்படுகின்ற நேரத்திலே, நிறைவுபெறுகின்ற நேரத்திலே, ஒரு சிறப்பான கட்டட அமைப்பு, மிகச் சிறப்பான comprehensive treatment of complex cases என்ற வகையிலே மிகச் சிறப்பாக உருவாக்கப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

இங்கே பேசிய மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களும் மூன்று விஷயங்களை முன்வைத்தார்கள். நான் அதனை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவற்றில் ஒன்று, heart attack வந்துவிட்டால், Cath Lab– –மாரடைப்பு வந்துவிட்டால், அவர்களை உடனடியாக treat செய்ய வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தார்கள். இரண்டாவது, Accident Trauma Centres. நிறைய விபத்து காய சிகிச்சை மையங்கள் வேண்டுமென்ற கருத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் இருக்கிறது. அதைத் தொடர்ந்து புற்றுநோய் சிகிச்சை. இந்த மூன்று பிரதான நோய்கள் குறித்த கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நான் அதனைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் இதற்கென பிரத்யேகமாக ஆய்வுக் கூட்டம் நடந்தபொழுது, இந்த மூன்று நோய்களுக்குமே அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டு, திட்டம் தீட்டப்பட்டு, 'தாய்' என்று அந்தத் திட்டத்திற்குப் பெயரிடப்பட்டு, தற்போது அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறையிலே இருக்கக்கூடிய தாய்த் திட்டம், Tamil Nadu Accident and Emergency Care Initiatives–ல் இரண்டு emergencies இருக்கின்றன. இங்கே நிறைய மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒன்று, Medical emergency, மற்றொன்று, Surgical emergency. ஆக Medical emergency என்று எடுத்துக்கொண்டால், நமக்கு இருக்கக்கூடிய M.I.–Myocardial Infarction மாரடைப்பு, அதேபோல Stroke அதற்குப் பின்னாலே poisoning, suicide போன்றவை. Surgical emergency என்று சொன்னால், விபத்து. ஆக, இரண்டையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மனதிலே வைத்துக்கொண்டு, இப்பொழுது அற்புதமான ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. Hub and spoke model; உதாரணத்திற்கு மதுரையை எடுத்துக்கொண்டால், மதுரை என்பது தலைநகரம், அதை hub ஆக வைத்துக்கொள்வோம். spokes என்று சொன்னால், ஒரு சைக்கிளில் hub மற்றும் spokes கம்பிகள் எப்படியிருக்குமோ, அதுபோன்று அந்தத் திட்டத்தை நாங்கள் மிகச் சிறப்பாக

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

ஆய்ந்து, கூராய்ந்து, இதனை வடிவமைத்திருக்கின்றோம். மதுரையை hub ஆக வைத்துக்கொண்டால், spokes என்பது சமயநல்லூர், திருப்பரங்குன்றம், திருமங்கலம், மேலூர், இவ்வாறு அருகில் இருக்கக்கூடிய, சுற்றியிருக்கின்ற நகரங்களைக் குறிக்கும். எங்கோ ஒரு கிராமத்தில், உதாரணத்திற்கு திருப்பரங்குன்றத்தில், திருமங்கலத்தைத் தாண்டி கள்ளிக்குடி என்ற கிராமத்தில், ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டால், உடனடியாக 108 வாகனம் சென்று அவரை pick–up செய்யும். அங்கே எடுக்கப்படுகின்ற அந்த ECG அவர் திருமங்கலத்திற்கு வருவதற்கு முன்பாகவே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ECG reading–ஐ பார்த்துவிட்டு மருத்துவர் அங்கு தயாராக இருப்பார். அதற்குப் பின்னாலே அவருக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது என்றால், Thrombolysis செய்யப்பட்டு, Angioplasty Stent பொருத்த வேண்டுமென்று சொன்னால், அவர் திருமங்கலத்திலிருந்து நேராக மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்து, அங்கே அவருக்கு Cath Lab இருக்கும். இதுவரை இதுபோன்று Cath Lab அமைக்கப்பட்டதில்லை. இப்போது 11 இடங்களில் ரூ.50 கோடி செலவில் Cath Lab அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் மூன்று மாதங்களில் அவை திறந்து வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலே, இந்த Hub and spoke model மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து நகரங்களுக்குமாக உருவாக்கப்பட்டு Hub and spoke model–STEMI என்று சொல்லக்கூடிய மிகச் சிறப்பான இந்த Cath Lab திட்டம் தொடங்கி வைக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, விபத்து காய சிகிச்சை மையங்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விபத்து காய சிகிச்சை மையங்கள் எத்தனை நகரங்களிலே, எத்தனை பெரு நகரங்களிலே ஏற்படுத்தப்படும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது என்ன, திருமங்கலத்திற்கு மட்டும், பொள்ளாச்சிக்கு இல்லையா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: ஓர் உதாரணத்திற்கு சொல்கிறேன். பொள்ளாச்சிக்கும் உண்டு. ஓர் உதாரணத்திற்காக நான் Hub and spoke model என்றால் என்ன என்பதை விளக்கினேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமங்கலத்திற்கு மட்டும். . .

[2017 ஜூலை 4

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இது எல்லா மாவட்டங்களுக்குமான திட்டம், (குறுக்கீடு) அது குறித்து அறிவிப்பு வருகிறது, சற்று பொறுமையாக இருங்கள். தமிழ்நாடு முழுவதிலும் இந்தத் திட்டத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒப்புதலைக் கொடுத்திருக்கிறார்கள். Hub and spoke model என்றால் என்ன என்பதை எடுத்துக்காட்டுகின்றவண்ணமாக பக்கத்திலிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மதுரையை உதாரணமாகச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பக்கத்திலிருக்கிற மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து, அவருடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொன்னதாலே அவர்கள் கேட்கிறார்கள். சரி, சொல்லுங்கள்.

பிற்பகல் 4–10

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இல்லை, இல்லை, அப்படியில்லை. எல்லா இடங்களுக்கும் உண்டு. தமிழ்நாடு முழுவதும் உண்டு. வழக்கறிஞரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் நான் சொல்வதைச் சரியாகக் கவனிக்கவில்லை. எல்லா இடங்களுக்கும் உண்டு. மேலும், தொடர்ந்து இதுபோன்ற சிறப்பான சேவைகளுக்கு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது.

இன்றைக்கு பல்வேறு விவாதங்கள் வந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 108 Ambulance மூலம் மிகச் சிறப்பாக தற்போது பல சேவைகளை வழங்கி வருகின்றது. மொத்தம் 855 Ambulance இருக்கின்றன. இவை அனைத்தும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 855 Ambulance–களிலும் GPS கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் எல்லாவற்றிற்கும் நிதி வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள். ஓட்டுநர்களுக்காக 75 இலட்சம் ரூபாய் செலவில் Android phone வழங்கப்பட இருக்கின்றது. அந்த ஓட்டுநர்களிடம் Android phone இருக்கின்றபோது, எங்கேயாவது, சென்னையிலிருந்து திருச்சிக்கு செல்கின்றபோது, நள்ளிரவு நேரத்தில் விபத்து நடந்தால், எந்த இடத்தில் விபத்து நடந்து இருக்கின்றது என்பதை விபத்து நடந்ததற்குப் பின்னர் நம்மால்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

உணர முடியாது. ஆக, அந்தமாதிரியான நேரத்தில், ஓர் இருட்டு நேரத்தில், அதிகாலை 3–00 மணி அல்லது நள்ளிரவு நேரத்திலே விபத்து நடந்தால் உங்களுடைய மொபைலில் இருந்து 108 என்ற எண்ணை அழைத்தவுடனேயே, நீங்கள் இருக்கின்ற இடம், அந்த இடத்தினுடைய map மற்றும் பெயர் உள்ளிட்ட அத்தனை விவரங்களும் அந்த screen–ல் வந்துவிடும். என்ன விபத்து, எத்தனை பேர் அடிபட்டிருக்கின்றார்கள் என்ற விவரத்தை மட்டும் சொன்னால் போதும். உடனடியாக, அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் விரைந்து செல்லக்கூடிய அற்புதமான வசதியை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக நாம் admission போட்டால், எனக்கு C.T. Scan late ஆகின்றது அல்லது X–ray late ஆகின்றது அல்லது suture போடுவதற்கு காலதாமதம் ஆகின்றது என்ற ஏதேனும் கருத்து வேறுபாடு வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், zero delay ward என்ற புதிய concept–ஐ இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றோம். கடந்த வாரம்கூட நிதியமைச்சர் அவர்கள் ஸ்டான்லி மருத்துவமனைக்கு வருகைதந்து, அதைப் பார்வையிட்டு பாராட்டினார்கள். அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் இந்த zero delay ward, தாமதம் இல்லாமல் அறுவை சிகிச்சை செய்கின்ற பிரிவை உருவாக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கின்றார்கள். அதற்குண்டான பணிகள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு எந்தளவிற்கு அலோபதி மருத்துவம் மிகச் சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கின்றதோ, அதே அளவிற்கு மகத்தான நம் பாரம்பரியத்தையும், பெருமையையும், மாண்பையும், மரபையும் காக்கின்ற வகையில், நம்முடைய இந்திய மருத்துவத் துறைக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து, பல்வேறு பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அந்தவகையில், சென்னை, அண்ணா நகரில் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் உடல் பருமனைக் குறைப்பதற்கு, அலோபதியிலும்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

obesity clinic வைத்திருக்கின்றோம். அதேபோல, Aayush–லும் நம்முடைய உடல் பருமனைக் குறைப்பதற்காக, சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அங்கு நீரிழிவு நோய் உள்ளிட்ட அத்தனை நோய்களுக்கும் எந்தவிதக் கட்டணமும் இல்லாமல் இயற்கை உணவிலே, உணவே மருந்து என்ற வகையில், மிகச் சிறப்பாக புதிய கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் Lifestyle clinic–ஐ உருவாக்கினார்கள். அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் Lifestyle clinic–ஐ உருவாக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். அந்தவகையில், மேலும், 35 Lifestyle clinic–ஐ வட்டார மருத்துவமனைகளில் தொடங்குவதற்கான ஆணையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பிறப்பித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு வாரியத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சொன்னார்கள். தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இது தமிழக அளவிலே மட்டுமல்ல, உலகளவில், கியூபா என்ற நாட்டில் மட்டும்தான் Mother to Child என்று இருந்தது. அதாவது, தாய்க்கு HIV Positive இருந்தால், பிறக்கும் குழந்தைக்கும் அந்த நோய் வருவதை முழுமையாகத் தடுத்திருக்கின்ற நாடு, உலகளவில் கியூபா நாடுதான். கியூபா நாட்டிற்கு அடுத்து தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் முழுமையாக Mother to Child HIV spread–ஐ 100 சதவிகிதம் தடுத்து, சாதனை புரிந்திருக்கக்கூடிய அரசு நம்முடைய தமிழ்நாடு அரசு என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய அளவில் நோய்த் தொற்று சராசரியாக 0.29 சதவிகிதம் என்ற அளவில் இருக்கின்றது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் அரசு எடுத்த நடவடிக்கையினால் அந்த நோய்த் தொற்று 0.25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் பற்றியும், பல்வேறு சங்கங்களுடைய கோரிக்கைகளைப் பற்றியும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். செவிலியர்கள் என்று சொன்னால், அது contract to permanent, 600 பேரைத் தவிர, அத்தனை பேரையும் நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்திருக்கிறோம். 9,190 செவிலியர்கள் புதிதாகப் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து எத்தனை மருத்துவர்கள், எத்தனை சிறப்பு மருத்துவர்கள், எத்தனை செவிலியர்கள், எத்தனை pharmacists, எத்தனை VHN பணி நியமனம் செய்யப்பட இருக்கின்றார்கள் என்பதை இந்த அறிவிப்பிலே கொண்டுவர இருக்கின்றோம். இன்றைக்கு அறிவிக்கப்படுகின்ற அறிவிப்பைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைய நிதியை ஒதுக்க ஒப்புதல் கொடுத்துள்ளார்கள்.

மதுரையை ஓர் உதாரணத்திற்குச் சொன்னபோதே, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு எங்கே, எங்கே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்துக்கென தனி அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒட்டுமொத்தமாக, இதுவரை சட்டமன்றத்திலே, கேள்வி நேரம் மற்றும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் அவர்கள் கேட்ட கோரிக்கையின் அடிப்படையிலே, இன்றைக்கு பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே அறிவிக்கக் காத்திருக்கின்றோம்.

பிற்பகல் 4–15

நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உறுப்பினர்களுடைய கோரிக்கையை உற்றுநோக்கி ஒவ்வொருவரும் சொன்ன கோரிக்கைகளின் அடிப்படையிலே சுகாதாரத் துறையின் செயலாளர் உள்ளிட்ட அத்தனைபேரும் முழு ஆய்வில் ஈடுபட்டு Universal Health Coverage என்ற அடிப்படையில் அனைவருக்கும் நலவாழ்வு என்ற அடிப்படையிலே மிகச் சிறப்பான அறிவிப்புகளைக் கொடுக்க இருக்கிறார்கள். இதைவிட

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மிக மிகச் சிறப்பான அறிவிப்புகளை, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக அரசினுடைய கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்ற திட்டங்களையெல்லாம் தொடர்ந்து அறிவிக்க இருக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சிறிய கதையை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இரண்டு நிமிடம். ஒரு சாதுவான துறவி வயல்வெளியில் கண் அயர்ந்து வயல் வரப்பில் படுத்திருக்கிறார். அந்தப் பக்கமாக இரண்டு பெண்கள் குடத்துடன் தண்ணீர் எடுப்பதற்காக குளக்கரை நோக்கிச் செல்கிறார்கள். அந்தப் பெண்கள் போகின்ற வழியில்தான் சாதுவான துறவி படுத்திருக்கிறார். அதில் ஒரு பெண் வெகுளியான பெண். இன்னொரு பெண் கொஞ்சம் குதர்க்கமான பெண். ஆக இந்த குதர்க்கமான பெண்ணும் வெகுளியான பெண்ணும் பேசிக்கொண்டே போகிறார்கள். போகிறபொழுது வெகுளியான பெண் அந்தத் துறவியைப் பார்த்து சொல்கிறார், பாவமடி இந்த சாமி, பார், எப்படி இந்த வயல் வரப்பில் படுத்திருக்கிறாரே, பாவம் என்று இரக்கப்படுகிறாள். உடனே அந்த குதர்க்கமான பெண்மணி சொல்கிறாள், இதிலென்னடி பாவம். நீ சாது என்கிறாய், துறவி என்கிறாய்; ஆனால் அவர் பார் இரண்டு கைகளையும் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறார். அவர் உடம்புக்கு சுகம் தேடுது. இப்படி உடம்புக்கு சுகம் தேடுபவர் எப்படி துறவியாக இருக்க முடியும் என்று வெடுக்கென கேள்வி கேட்கிறார். இந்தப் பேச்சைக் கேட்ட துறவி பதறிப்போய் தலைக்கு வைத்திருந்த இரண்டு கைகளையும் எடுத்துவிட்டார். கைகளை எடுத்துவிட்டு சும்மா படுத்திருக்கிறார். இரண்டு பெண்களும் அந்தவழியே நடந்துபோய் தண்ணீர் எடுத்துவிட்டு மீண்டும் அதேவழியில் தண்ணீர் குடத்தோடு திரும்ப வரும்போது வருகிறார்கள். உடனே அந்த வெகுளியான பெண் சொல்கிறாள், இந்தத் துறவியைப் பார் எப்படிப் படுத்திருக்கிறார் என்று. கையை எடுத்துவிட்டார், தலையை வரப்பில் வைத்துப் படுத்திருக்கிறார். நல்ல மனிதன்டீ. இவரைப்போய் பழிப் போட்டுவிட்டாயே என்று அந்த வெகுளியான பெண் குதர்க்கமான பெண்ணிடம் சொல்கிறாள். அதற்கும் அந்த குதர்க்கமான பெண் சொல்கிறாள், இதில் என்னடி பாவம், துறவியா இவர்! இரண்டு பொம்பளைங்க தண்ணீர் எடுத்துக்கிட்டு போகும்போது என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுகேட்டு படுத்திருப்பவர் எப்படி

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

துறவியாக முடியும் என்று சொல்ல, உடனே அந்தத் துறவி துடிதுடித்துப் போய்விட்டார். ஆக என்ன செய்தாலும் சில வாய்கள் விமர்சனம் செய்து கொண்டே இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி விமர்சனம் செய்கின்ற வாய்களை புறம் தள்ளிவிட்டு நாம் செல்கின்ற பாதையிலே, 'போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை நான் எவர் வரினும் நில்லேன், செய்வேன்' என்று,

"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்குமஞ் சாதநன் னெறியும்"

என்று மக்கள் பணியிலே நாம் ஈடுபட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் மதுரையில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஓர் அழகான நாக்கு கதையைச் சொன்னார்கள். இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் காலையிலிருந்து முழுமையாக விவாதத்தில் பங்கெடுத்துவிட்டு, அவர் வெளிநடப்புச் செய்ததையெல்லாம், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகின்றதையெல்லாம் பார்க்கும்போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரேயொரு பாடல் நினைவிற்கு வருகிறது. அதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். 'சக்கரவர்த்தி திருமகள்' படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தாளம் அடித்துக்கொண்டு ஓர் அழகானப் பாட்டைப் பாடுவார். உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் எது என்று சக்கரவர்த்தித் திருமகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்பார். அதற்கு அவரோடு இணைந்து நடிக்கக்கூடிய ஒருவர் 'கத்தி' என்பார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் 'கத்தி' என்று சொல்வார். இல்லை என்று சொல்வார். கோடாரி–இல்லை; ஈட்டி–இல்லை; இதுவும் பயங்கரமான ஆயுதம் இல்லை. அப்படியெனில்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மிகப்பெரிய பயங்கரமான ஆயுதம் 'கடப்பாறை' என்று சொல்வார்; அதுவும் இல்லை. 'நிலைகெட்டுப்போன நயவஞ்சகர்களின் நாக்குதான் அது' என்று சொல்வார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி நிலைகெட்டுப்போன நயவஞ்சகர்களின் நாக்கு எதை வேண்டுமானாலும் பேசும். நிலைகெட்டுப்போன நயவஞ்சகர்களின் நாக்கு எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான் பல்வேறு விவகாரங்களிலே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களை உதாரணமாகச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நிறைவேற்றும், நிறைவேற்றும், நிறைவேற்றும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான அறிவிப்புகளை வெளியிட அனுமதி கோருகிறேன்.

பிற்பகல் 4–20

1. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் 100 எம்.பி.பி.எஸ். இடங்களும், மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் 100 எம்.பி.பி.எஸ். இடங்களும், ஆக மொத்தம் 200 எம்.பி.பி.எஸ். இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படும்.

அரசு எடுத்த தீவிர முயற்சியால், மருத்துவக் கல்வியில், எப்பொழுதும் நிகழாத அளவிற்கு, சரித்திர சாதனையாக, கடந்த 6 ஆண்டுகளில் 1,000 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் (M.B.B.S. seats) அதிகரிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரிகளில் அடுத்த கல்வி ஆண்டு முதல் தலா 100 என 200 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்படும். இதற்காக முதற்கட்டமாக சுமார் 53 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2. செங்கல்பட்டு, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை சீமாங்க் மையங்கள் ஒப்புயர்வு மையங்களாக 48 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

(சீமாங்க்) மையங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. தற்போது 126 சீமாங்க் மையங்கள், செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில், செங்கல்பட்டு, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள சீமாங்க் மையங்கள், 48 கோடி ரூபாய் செலவில் ஒப்புயர்வு மையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

3. மேட்டூர் அணை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், குளித்தலை, தென்காசி, வாலாஜா, பொள்ளாச்சி ஆகிய 7 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆத்தூர், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் ஆகிய 2 வட்ட மருத்துவமனைகளுக்கு 43 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புகளை இந்த அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டில், மேட்டூர் அணை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், குளித்தலை, தென்காசி, வாலாஜா, பொள்ளாச்சி ஆகிய 7 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆத்தூர் மற்றும் வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் ஆகிய 2 வட்ட மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவப் பிரிவு, அறுவை அரங்கம், தீவிர சிகிச்சைப் பிரிவு ஆய்வகப் பரிசோதனைக் கூடம், உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் பிரிவுகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 43 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அனைத்து மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவற்றுடன் இணைந்த மருத்துவமனைகளில் 40 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம் வலுப்படுத்தப்படும்.

அரசு மருத்துவமனைகளின் சேவையை பயன்படுத்தும் ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சேவை தங்குதடையின்றி வழங்குவதற்காக மருத்துவத் தகவல் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

சுகாதாரத் தகவல்கள் உடனுக்குடன் பெறப்பட்டு, இயக்குநரகங்களில் உடனடி முடிவெடுக்க இத்திட்டம் உதவுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் இந்தத் திட்டம் அனைத்து மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவற்றுடன் இணைந்த மருத்துவமனைகளில் 40 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

5. புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 26 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் வழங்கப்படும்.

புதுக்கோட்டை புதிய அரசு மருத்துவக் கல்லூரி 9–6–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான மருத்துவக் கருவிகள் மற்றும் புத்தகங்கள் 26 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

6. வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 26 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் தீக்காய சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தலா 6 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் தீக்காய சிகிச்சை மையங்கள் தேவையான உபகரணங்களுடன் ஏற்படுத்தப்படும்.

7. 39 இதர சுகாதார மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 24 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவைத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

கிராமப்புற மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள்மூலம் சுகாதார சேவைகள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த ஆண்டு கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய மூன்று சுகாதார மாவட்டங்களில், ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவைத் திட்டம் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்தத் திட்டம் நடப்பாண்டில் மற்ற 39 சுகாதார மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒரு வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 24 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

8. 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 13 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 20 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் முன்னோடித் திட்டமாக புதிதாக மூப்பியல் பிரிவுகள் (Geriatric) துவங்கப்படும்.

வயது முதிர்ந்தோர் மக்கள் தொகை அதிகரித்துவரும் நிலையில், அவர்களது நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தருமபுரி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தேனி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரியலூர், திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், உதகமண்டலம், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவள்ளூர், திருப்பூர், விருதுநகர் மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் புதிதாக மூப்பியல் பிரிவு 20 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும். இதன்மூலம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அனைத்து மாவட்டங்களிலும் மூப்பியல் பிரிவு உள்ளது என்ற நிலையை தமிழகம் முதலில் பெறும்.

9. தென்காசி, பெரம்பலூர், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை மருத்துவமனைகளுக்கு 12 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தென்காசி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைகளில் கூடுதல் புற நோயாளிகள் பிரிவு கட்டடம் 12 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

10. தேனி, நாகப்பட்டினம், பெரம்பலூர், திண்டுக்கல், சிவகங்கை, பெருந்துறை, கரூர், சென்னை அண்ணாநகர் மற்றும் கே.கே. நகர் ஆகிய 9 மருந்துக் கிடங்குகளுக்கு 12 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கக் கட்டடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேனி, நாகப்பட்டினம், பெரம்பலூர், திண்டுக்கல், சிவகங்கை, பெருந்துறை, கரூர், சென்னை அண்ணா நகர் மற்றும் சென்னை கே.கே. நகர் ஆகிய இடங்களில் 9 மருந்துக் கிடங்குகளுக்கு விரிவாக்கக் கட்டடம் 12 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

11. நாமக்கல், பொள்ளாச்சி, காரைக்குடி, மன்னார்குடி, கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்ட மருத்துவமனை மற்றும் சிதம்பரம், இராஜபாளையம், ஓசூர், பரமக்குடி, பட்டுக்கோட்டை ஆகிய 5 வட்ட மருத்துவமனைகளில் கூடுதல் அறுவை அரங்கம் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

நாமக்கல், பொள்ளாச்சி, காரைக்குடி, மன்னார்குடி, கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் சிதம்பரம், இராஜபாளையம், ஓசூர், பரமக்குடி, பட்டுக்கோட்டை ஆகிய 5 வட்ட மருத்துவமனைகளில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கூடுதலாக அறுவை அரங்கங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

12. கருங்காலகுடி, வெள்ளலூர், லப்பைகுடிகாடு, அம்மாபாளையம், சொக்கம்பட்டி, வாசுதேவநல்லூர், தச்சூர், பெருங்கட்டூர், புதூர் உத்தமனூர், சிறுகாம்பூர், வையம்பட்டி, தண்டலைப்புத்தூர், உப்பிலியாபுரம், லாலாபேட்டை, உசூர், ஒடுகத்தூர் பானாவரம், புதுப்பாடி, புதுப்பேட்டை மற்றும் எம். ரெட்டிபட்டி ஆகிய 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 12 கோடி ரூபாய் செலவில் புற நோயாளிகள் பிரிவுகள் கட்டப்படும்.

கிராமப்புற மக்கள் பெரிதும் நாடிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உட்கட்டமைப்பை இந்த அரசு வலுப்படுத்தி, நவீன மருத்துவக் கருவிகளை வழங்கிவருகிறது. இதன் ஒரு கட்டமாக, நடப்பாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஏற்கெனவே செயல்பட்டுவரும் கருங்காலகுடி, வெள்ளலூர், லப்பைகுடிகாடு, அம்மாபாளையம், சொக்கம்பட்டி, வாசுதேவநல்லூர், தச்சூர், பெருங்கட்டூர், புதூர் உத்தமனூர், சிறுகாம்பூர், வையம்பட்டி, தண்டலைப்புத்தூர், உப்பிலியாபுரம், லாலாபேட்டை, உசூர், ஒடுகத்தூர் பானாவரம், புதுப்பாடி, புதுப்பேட்டை மற்றும் எம். ரெட்டிபட்டி ஆகிய 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புற நோயாளிகள் பிரிவு 12 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

13. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு 366 பல்வேறு பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாக பி–பிளாக் கட்டடத்தில் செயல்படும் அரசு மருத்துவக் கல்லூரிக்கு 9 கோடியே 75 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் பல்வேறு நிலைகளில் 366 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

14. 48 அரசு மருத்துவமனைகளுக்கு 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் ஆட்டோ அனலைசர், டிப் ப்ரீசர், கோயாகுலேஷன் அனலைசர், செல் கவுன்ட்டர், எலிசா வாஷர் மற்றும் இதர உயர்தர உபகரணங்கள் வழங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் உள்ள ஆய்வகங்களை தேசிய பொது சுகாதார தரத்திற்கு (IPHS – Indian Public Health Standard) உயர்த்திடும்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 48 அரசு மருத்துவமனை ஆய்வகங்களுக்குத் தேவையான ஆட்டோ அனலைசர், டீப் ப்ரீசர், கோயாகுலேஷன் அனலைசர், செல் கவுன்ட்டர், எலிசா வாஷர் மற்றும் இதர நவீன உயர்தர உபகரணங்கள் 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

15. செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 8 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கருவிகள் நடப்பாண்டில் 8 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி வழங்கப்படும்.

16. கடலூர், சிதம்பரம், திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், கோவில்பட்டி, ஈரோடு, திருப்பூர், பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 11 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழகத்தில் முதல்முறையாக இந்திய அளவில் ஒரு முன்னோடி முயற்சியாக DNB மருத்துவ பட்டமேற்படிப்பு தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த அவையில் அறிவித்தபடி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத 15 மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நிகராக வலுப்படுத்தப்பட்டு, சிறப்பு மருத்துவர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மருத்துவமனைகளுக்கு, மேலும் சிறப்பு மருத்துவர்கள் ஏற்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர், சிதம்பரம், திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், கோவில்பட்டி, ஈரோடு, திருப்பூர், பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 11 அரசு மருத்துவமனைகளில் Diplomate of National Board 48 பட்ட மேற்படிப்பு இடங்கள், 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இதைக் கோரிக்கையாக வைத்தார்.

17. தேனி மற்றும் திருவண்ணாமலையில் 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்துடன் இணைந்த ஆயுஷ் மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையை வலுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 85 கோடி ரூபாய் வழங்கி வலுப்படுத்தினார்கள். நடப்பு ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேனி மற்றும் திருவண்ணாமலையில் தலா 50 படுக்கைகள் கொண்ட சித்தா, யோகா மற்றும் இயற்கை வைத்தியம் இணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

18. தடுப்பூசி மருந்து சேமித்து வைக்க 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 23 சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும்.

தடுப்பூசித் திட்டம் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இதனை மேலும் செம்மையாக செயல்படுத்தவும், பச்சிளம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசிகள் தங்குதடையின்றி கிடைக்கும்வகையிலும், தடுப்பூசி மற்றும் மருந்துகளை உரிய தட்பவெட்ப நிலையில் பாதுகாக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேமிப்புக் கிடங்குகள் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

19. அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு கூடுதலாக ஒரு டயாலிசிஸ் கருவியும், செங்கல்பட்டு, விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தலா ஒரு டயாலிசிஸ் கருவியும் மற்றும் 5 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 9 டயாலிசிஸ் கருவிகளும், ஆக மொத்தம் 79 டயாலிசிஸ் கருவிகள் ரூ.6.62 கோடி செலவில் வழங்கப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 37 அரசு மருத்துவமனைகளுக்கு தலா ஒரு டயாலிசிஸ் கருவி, சென்னை மாநகராட்சியில் 5 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 9 டயாலிசிஸ் கருவிகள் 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவிலும் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு கூடுதலாக ஒரு டயாலிசிஸ் கருவி 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிலும், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தலா ஒரு டயாலிசிஸ் கருவி 12 இலட்சம் ரூபாய் செலவிலும் என மொத்தம் 79 டயாலிசிஸ் கருவிகள் 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். மேலும், டயாலிசிஸ் பிரிவில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறப்பு பயிற்சி வழங்கப்படும்.

20. கடலூர், ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், கோவில்பட்டி, கும்பகோணம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய கிருமி நீக்கம் மற்றும் வழங்கல் வசதி (Central Sterile and Supply Department) ஏற்படுத்தப்படும்.

அரசு மருத்துவமனையில் நடைபெறும் அறுவை சிகிச்சைகளில், நோய் தொற்றினை குறைத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மத்திய தொற்றுநோய் கிருமி நீக்கம் மற்றும் வழங்கல் பிரிவு (Central Sterile and Supply Department) கடலூர், ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், கோவில்பட்டி, கும்பகோணம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

21. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆய்வகங்களுக்கு 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.

நகர்புற ஏழை மக்களுக்கு, குறிப்பாக குடிசைப் பகுதிகள் மற்றும் அதிக அளவில் நோய் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு, ஆரம்ப சுகாதார சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள ஆய்வுக் கூடங்கள் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆய்வுக் கூடங்கள், 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.

22. HUB and SPOKE அமைப்பில் 6.38 கோடி ரூபாய் செலவில் 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மையங்களிலும் (HUB), அவற்றை சார்ந்த 30 இதர மருத்துவமனைகளிலும் (Spokes) மாரடைப்பு சிகிச்சை பிரிவுகள் அமைக்கப்படும்.

மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு, வேலூர், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மையங்களிலும் (HUB), அவற்றை சார்ந்த 30 இதர மருத்துவமனைகளிலும் (Spoke) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள், 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

23. மதுரை, மாரண்டஹள்ளி, திருநெல்வேலி, திருவல்லிக்கேணி கஸ்தூரிபா மருத்துவமனை, திருவரங்குளம், மாணிக்கம்பாளையம், வீரபாண்டி, பூவந்தி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளிகள் 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தாய் சேய் நல பணிகளை திறம்பட செய்திடும் வண்ணம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, மாரண்டஹள்ளி, திருநெல்வேலி, திருவல்லிக்கேணி கஸ்தூரிபா மருத்துவமனை, திருவரங்குளம், மாணிக்கம்பாளையம், வீரபாண்டி, பூவந்தி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளிகள் 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

24. 14 அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு முன்கவனிப்பு வார்டுகள் மற்றும் 12 அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கான பின்கவனிப்பு வார்டுகள் 5 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் 123 செவிலியர் பணியிடங்களுடன் ஏற்படுத்தப்படும்.

இந்த அரசு, தாய்–சேய் நலத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 14 அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு முன்கவனிப்பு வார்டுகள் மற்றும் 12 அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் பின்கவனிப்பு வார்டுகள் 123 செவிலியர்களுடன் 5 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

25. கடலூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், மேட்டூர் அணை, திருப்பூர், கோவில்பட்டி, விருதுநகர், கள்ளக்குறிச்சி மற்றும் திருவள்ளூர் ஆகிய 10 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சிறுநீரக பிரிவு வலுப்படுத்தப்படும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, கடலூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், மேட்டூர் அணை, திருப்பூர், கோவில்பட்டி, விருதுநகர், கள்ளக்குறிச்சி மற்றும் திருவள்ளூர் ஆகிய 10 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சிறுநீரக சிறப்பு சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து கோரிக்கையாக வைத்தார்கள்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

26. அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 5 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் வட்டார நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் ஏற்படுத்தப்படும்.

பார்வை இழப்பு பரவலை ஒரு விழுக்காட்டிலிருந்து 0.3 விழுக்காடாக 2020 ஆம் ஆண்டுக்குள் குறைக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களில் பார்வை குறைபாடு உள்ளவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சை அளித்து பார்வை குறைபாட்டை குறைப்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் வட்டார நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் 5 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

27. '108' ஆம்புலன்ஸ் சேவை திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் 50 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் பொதுமக்களால் பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ள '108' அவசரகால ஆம்புலன்ஸ் சேவை விலை மதிப்பற்ற மனித உயிர்களை காப்பாற்றி வருகிறது. இந்த திட்டத்தில் தற்போது 855 ஆம்புலன்ஸ்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சேவையை வலுப்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 50 ஆம்புலன்ஸ்களுக்கு பதிலாக, 50 புதிய ஆம்புலன்ஸ்கள் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

28. திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மகப்பேறு ஒப்புயர்வு மையங்களுக்கு 7 மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர்கள், 2 குழந்தைகள் நல மருத்துவர்கள், 3 மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் 20 செவிலியர் பணியிடங்களும் விபத்து மற்றும் உயர் சிறப்பு மருத்துவமனைக்குக் கூடுதலாக 21 மருத்துவர் மற்றும் 30 செவிலியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகள் ஒப்புயர்வு மையங்களாக (RCH Centre of Excellence) 40 கோடி ரூபாய்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவைகள் முழுமையாகவும், சிறப்பாகவும் செயல்பட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவ்விரு மையங்களுக்கும் தலா 7 மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர்கள், 2 குழந்தைகள் நல மருத்துவர்கள், 3 மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் 20 செவிலியர்கள் என ஆண்டொன்றுக்கு 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் நியமனம் செய்யப்படுவார்கள். இது தவிர, திருச்சிராப்பள்ளி மருத்துவமனையில் உள்ள விபத்து மற்றும் உயர் சிறப்பு மருத்துவமனைக்குக் கூடுதலாக 21 மருத்துவர் மற்றும் 30 செவிலியர் பணியிடங்கள் 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் ஏற்படுத்தப்படும்.

பிற்பகல் 4–25

29. புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் 3 கோடியே 39 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த பணியாளர்களுடன் கருவிகள் வழங்கப்படும்.

நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்த நோய், புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் அரசு மருத்துவமனைகளில் மட்டும் தற்போது நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வீடு வீடாக சென்று பரிசோதனை செய்யும் வண்ணம் தற்காலிக பணியாளர்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்காக சுமார் 3 கோடியே 39 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சோதனை முறையில் புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

30. வேலூர், திருப்பூர், தேனி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் மன நல சிறப்புப் பிரிவுகள் 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாவட்ட மன நலத் திட்டம், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மன நலம் குன்றிய

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து குணப்படுத்தும்பொருட்டு, நடப்பு ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வேலூர், திருப்பூர், தேனி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் மன நல சிறப்புப் பிரிவுகள் 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

31. 91 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆட்டோக்ளேவ், பாய்ல்ஸ் கருவி, பல்ஸ் ஆக்ஸிமீட்டர், அறுவை அரங்க கருவிகள் ஆகியவையும், 140 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைஸர், ஆட்டோக்ளேவ் மற்றும் பச்சிளம் குழந்தை வார்மர் ஆகியவையும் 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ சேவை பெற்றிடும் ஏழை எளிய மக்களுக்கு தரமான சிகிச்சை அளித்திட இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 91 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆட்டோக்ளேவ், பிரசவ மேஜை, பாய்ல்ஸ் கருவி, பல்ஸ் ஆக்ஸிமீட்டர், அறுவை அரங்க மேஜை ஆகிய கருவிகளும் 140 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைஸர், ஆட்டோக்ளேவ் மற்றும் பச்சிளம் குழந்தை வெப்பமானி ஆகிய கூடுதல் உபகரணங்கள் 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

32. மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகளுக்கு எண்டோஸ்கோப்பி கருவிகள் 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிலும், 70 அரசு மருத்துவமனைகளுக்கு இயன்முறை மருத்துவக் கருவிகள் 70 இலட்சம் ரூபாய் செலவிலும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பிரிவுகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எண்டோஸ்கோப்பி கருவிகள் 2

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். மேலும், 26 மாவட்டங்களில் உள்ள 70 அரசு மருத்துவமனைகளுக்கு இயன்முறை மருத்துவக் கருவிகள் 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் என 3 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

33. பச்சிளம் குழந்தை ஆம்புலன்ஸ்களுக்கு 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் 32 பச்சிளம் குழந்தை வென்டிலேட்டர்கள் 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு 45 இலட்சம் ரூபாய் செலவில் 10 செயற்கை சுவாசக் கருவிகள் (Ventilators) வழங்கப்படும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் பச்சிளம் குழந்தைகள் ஆம்புலன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பச்சிளம் குழந்தைகள் ஆம்புலன்ஸ்களுக்கு 32 பச்சிளம் குழந்தை வென்டிலேட்டர்கள் 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிலும், 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு 10 வென்டிலேட்டர்கள் 45 இலட்சம் ரூபாய் செலவிலும் வழங்கப்படும்.

34. காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனைக்கு 3 கோடி ரூபாய் செலவில் கோபால்ட் தெரபி கருவி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு 3 கோடி ரூபாய் செலவில் கோபால்ட் தெரபி கருவி வழங்கப்படும்.

35. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள மத்திய கிருமி நீக்கல் மற்றும் வழங்கல் வசதி (Central Sterile and Supply Department) 3 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள மத்திய கிருமி தொற்று நீக்கல் மற்றும் வழங்கல் பிரிவு (Central Sterile and Supply Department), 3 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [*டாக்டர் சி. விஜய பாஸ்கர்*]

36. மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத 10 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு மற்றும் 16 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள புற்றுநோய் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத கடலூர், திண்டுக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவள்ளூர், திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள புற்றுநோய் பிரிவுகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலும், இதர 16 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள புற்றுநோய் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுக்கு பல்ஸ்ஆக்ஸிமீட்டர், மல்டி பேரா மானிட்டர் போன்ற கருவிகள் 40 இலட்சம் ரூபாய் செலவில் என மொத்தம் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

37. அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு, மூப்பியல் பிரிவு, புற்றுநோய் தொடர் சிகிச்சைப் பிரிவு மற்றும் நரம்பியல் பிரிவு ஆகியவற்றிற்கு 32 பொது மருத்துவர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

ஏழை எளிய மக்கள் அதிகம் நாடிடும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு, மூப்பியல் பிரிவு, புற்றுநோய் தொடர் சிகிச்சைப் பிரிவு மற்றும் நரம்பியல் பிரிவு ஆகியவற்றில் பொது மக்கள் தரமான சிகிச்சை பெற்றிடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கூடுதலாக 32 பொது மருத்துவர் பணியிடங்கள் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

38. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் லேப்ராஸ்கோப்பி, எண்டோஸ்கோப்பி மற்றும் ஹிஸ்ட்ரோஸ்கோப்பி கருவிகள் 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் நவீன அறுவை சிகிச்சைகளை செய்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், லேப்ராஸ்கோப்பி, எண்டோஸ்கோப்பி மற்றும் ஹிஸ்ட்ரோஸ்கோப்பி ஆகிய கருவிகள் 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

39. பத்மநாபபுரம், பட்டுக்கோட்டை, பெரியகுளம் மற்றும் திருமங்கலம் ஆகிய மருத்துவமனைகளில் நான்கு இளம் சிசு பராமரிப்பு மையங்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

இளம் சிசு நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அரசு மருத்துவமனைகளில் 69 சிறப்பு இளம் சிசு பராமரிப்பு மையங்களை நிறுவி நோயுற்ற இளம் சிசுக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பு ஆண்டில் பத்மநாபபுரம், பட்டுக்கோட்டை, பெரியகுளம் மற்றும் திருமங்கலம் ஆகிய மருத்துவமனைகளில் நான்கு இளம் சிசு பராமரிப்பு மையங்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

40. சென்னை மாநகரில் புளியந்தோப்பு, ராதாகிருஷ்ணன் நகர், அயனாவரம், வடபழனி, அடையார், மீர்ஷாகிப்பேட்டை மற்றும் சஞ்ஜீவிராயன் பேட்டை ஆகிய இடங்களில் உள்ள நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். மேலும் 9 மேம்படுத்தப்பட்ட நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களுக்கு மருந்துகளுக்காக 90 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி வழங்கப்படும். இளம் சிசு நிலைப்படுத்துதல் பிரிவுகளுக்கு 48 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டும் அவை வலுப்படுத்தப்படும்.

சென்னை மாநகரில் புளியந்தோப்பு, ராதாகிருஷ்ணன் நகர், அயனாவரம், வடபழனி, அடையார், மீர்ஷாகிப்பேட்டை மற்றும் சஞ்ஜீவிராயன் பேட்டை ஆகிய இடங்களில் உள்ள நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். 9 மேம்படுத்தப்பட்ட நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களுக்கு மருந்துகளுக்காக 90 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி வழங்கப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மேலும், சென்னை மாநகராட்சியில் 12 இளம் சிசு நிலைப்படுத்துதல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, தலா 4 செவிலியர்கள் வீதம் மொத்தம் 48 செவிலியர்கள் 44.35 இலட்சம் ரூபாய் செலவில் நியமிக்கப்படுவார்கள்.

41. சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி உயர் சிறப்பு மருத்துவமனைக்கு உதவி பேராசிரியர், உணவுமுறை வல்லுநர் போன்ற ஒன்பது பணியிடங்களுடன் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உயர் சிறப்பு மருத்துவமனையாக 2011 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் உள்ள நீரிழிவு நோய்த் துறைக்கு வரும் நோயாளிகளின் நலன் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும். மேலும், 50 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் உதவி பேராசிரியர், உணவுமுறை வல்லுநர் போன்ற ஒன்பது பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

42. பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் பேரிடர் மீட்பு மையம், சென்னையில் இருப்பதைப்போன்று அமைக்கப்படும்.

108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை தமிழ்நாட்டில் பொது மக்கள் பாராட்டைப் பெற்றுள்ளது. தற்போது அழைப்புகளை ஏற்று செயல்படும் அவசரகால மேலாண்மை கவனிப்பு மையம் (Emergency Management Response Center) சென்னையில் உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இதுபோன்றதொரு பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Center) இந்த ஆண்டில் பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

43. 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பு குடும்ப கட்டுப்பாடு முகாம்கள் நடத்தப்படும்.

உயர் பிறப்பு விகிதம் அதிகமுள்ள 120 வட்டாரங்களை கண்டறிந்து அங்கு நிகழும் மகப்பேறு தொடர்புடைய

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

மரணங்களை குறைக்கும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்பு குடும்ப கட்டுப்பாடு முகாம்கள் 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

44. பொள்ளாச்சி, விருத்தாசலம், காஞ்சிபுரம், திருச்செங்கோடு, ஆத்தூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் உள்ள சீமாங்க் மையங்கள், 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பொள்ளாச்சி, விருத்தாசலம், காஞ்சிபுரம், திருச்செங்கோடு, ஆத்தூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் உள்ள சீமாங்க் மையங்கள், 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். சீமாங்க் மையங்களை சிறப்பாக கண்காணித்து மேலாண்மை செய்ய தலைமை அலுவலகத்தில் ஒரு அமைப்பு 9 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

45. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அலுவலகத்தில் மருத்துவத் துறையில் முதல் முறையாக 24 மணி நேர பேரிடர் மேலாண்மை மையம் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 24 மணி நேர பேரிடர் மேலாண்மை மையம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அலுவலகத்தில் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

46. தருமபுரி மாவட்ட சுகாதார நலப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தருமபுரி மாவட்டம், விருப்பாட்சிபுரம்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

கிராமத்தில், மருத்துவ அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார நலப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

47. 6 அரசு மருத்துவமனைகளில் 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் தமிழகத்தில் முன்னோடித் திட்டமாக கட்டணமில்லா கருத்தரிப்பு சிகிச்சை மையங்கள் மற்றும் வீடியோ லேப்ரோஸ்கோப்பி சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

தனியார் அமைப்புகளில் குழந்தையின்மை சிகிச்சை மற்றும் வீடியோ லேப்ரோஸ்கோப்பி சிகிச்சை மையங்கள் உள்ளன. இந்த மையங்களில் சிகிச்சை கட்டணம் அதிகமாக உள்ளதால், தாய்மை பேறு அடையாத ஏழை எளிய பெண்கள் சிகிச்சைக்கு செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்தகைய மையங்கள் அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை, எழும்பூர் மகளிர் நோயியல் நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மற்றும் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

48. மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு 1 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவமனை நிருவாகம், தொழில்சார் சுகாதாரம் போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படும்.

புயல், வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர் தருணங்களில் பணிபுரிய மருத்துவ அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களை தயார்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 200 வட்டாரங்களில் பணிபுரியும் 3,000 பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி 89 இலட்சம் ரூபாய் செலவிலும், மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான சுகாதார பணியாளர்களுக்கு மருத்துவ

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

கழிவு மேலாண்மைப் பயிற்சி 28 இலட்சம் ரூபாய் செலவிலும், மருத்துவமனைகளை நிருவகிக்கும் பொருட்டு, மருத்துவர்களுக்கு நிருவாக பயிற்சி 27 இலட்சம் ரூபாய் செலவிலும், தொழில்சார் சுகாதாரம் குறித்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு 24 இலட்சம் ரூபாய் செலவிலும், நகர்ப்புற சுகாதார மையங்களில் உள்ள மருத்துவர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு 23 இலட்சம் ரூபாய் செலவில் தரக் கட்டுப்பாடு சான்றிதழ் பயிற்சியும் என 1 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படும்.

49. டெங்கு மற்றும் சிக்குன்குன்யா காய்ச்சலுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

பருவ மழை காலங்களில் பரவும் டெங்கு, சிக்குன்குன்யா போன்ற காய்ச்சல்களிலிருந்து மக்களை பாதுகாக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிலவேம்பு குடிநீரும், விழிப்புணர்வு பணிகளும் 94 இலட்சம் ரூபாய் செலவிலும், நோய் தடுப்பு முறைகளை பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் விழிப்புணர்வு பணிகள் 86 இலட்சம் ரூபாய் செலவிலும் செய்யப்படும்.

50. நீலகிரி மற்றும் திண்டுக்கல் (பெருமாள்மலை) மாவட்டங்களில் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் காசநோய் ஒழிப்பு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

காசநோய் கண்டுபிடிப்பு விகிதம் குறைவாக உள்ள நீலகிரி மற்றும் திண்டுக்கல் (பெருமாள்மலை) மாவட்டங்களில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காசநோய் ஒழிப்பு சிறப்பு திட்டம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

51. சித்த மருத்துவர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். மேலும் ஆய்வக பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஆய்வக பயிற்சிக்கூடம் 31 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சித்த மருத்துவர்கள் தொக்கணம், வர்மம் போன்ற சிறப்பு சிகிச்சைகள் அளிக்கும்பொருட்டு, 1,250 சித்த மருத்துவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பு பயிற்சி வழங்கப்படும். கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதர துணை மருத்துவ பணியாளர்களுக்கு 39 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சியும், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் இரும்புச்சத்து மாத்திரை மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சிறப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு, வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு 46 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சியும் என 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படும். ஆய்வக பணியாளர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்க ஆய்வக பயிற்சிக்கூடம் ஒன்று 31 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

52. பிரசவங்கள் அதிக எண்ணிக்கையில் நிகழும் சீமாங்க் மையங்களுக்கு 20 புதிய நவீன ஆம்புலன்ஸ்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

கோயம்புத்தூர், கன்னியாகுமரி, மதுரை, சேலம், தஞ்சாவூர், தேனி, திருநெல்வேலி, திருவாரூர், திருச்சி, தூத்துக்குடி, காஞ்சிபுரம், தருமபுரி, சிவகங்கை, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், எழும்பூர் மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் மகளிர் மற்றும் சிறார் மருத்துவமனை, சென்னை, அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை மற்றும் அரசு ஆர்எஸ்ஆர்எம் மருத்துவமனை, சென்னை ஆகிய 20 மருத்துவமனைகளில் உள்ள சீமாங்க் மையங்களில் பிரசவம் அதிக எண்ணிக்கையில் நிகழ்வதால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இம்மருத்துவமனைகளுக்கு தாய்மார்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட 20 ஆம்புலன்ஸ் வண்டிகள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

53. செங்கல்பட்டு, மதுரை, சேலம், தேனி, திருநெல்வேலி, திருச்சி, வேலூர், தருமபுரி, சிவகங்கை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 10 சி.ஆர்ம் (C–Arm) கருவிகள் நிறுவப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எலும்பு முறிவு சிகிச்சை அளிக்க ஏதுவாக செங்கல்பட்டு, மதுரை, சேலம், தேனி, திருநெல்வேலி, திருச்சி, வேலூர், தருமபுரி, சிவகங்கை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 10 சி.ஆர்ம் (C–Arm) கருவிகள் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

54. கண்புரை நோய் சிகிச்சைக்காக 62 அறுவை சிகிச்சை மையங்களுக்கு 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு கண்புரை நோய் அறுவை அரங்கங்களில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள், நோய் தொற்றின்றி தரமான முறையில் செயல்படும்விதமாக 62 அறுவை சிகிச்சை மையங்களுக்கு சுமார் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கப்படும்.

55. காஞ்சிபுரம், கோயம்புத்தூர், விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், ஈரோடு, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 அரசு மருத்துவமனைகளில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புற்றுநோயாளிகளுக்கான 10 வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புற்றுநோய் மற்றும் நாள்பட்ட நோயினால் அவதிப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம் காஞ்சிபுரம், கோயம்புத்தூர், விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், ஈரோடு, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 அரசு

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மருத்துவமனைகளில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும். மேலும், இத்தகைய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க 130 செவிலியர்களுக்கு சிறப்புப் பயிற்சியும், ஊக்கத் தொகையும் 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

56. காஞ்சிபுரம், சேலம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள காசநோய் மையங்கள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தினை மாவட்ட அளவில் சிறப்பாகக் கண்காணித்திடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம், சேலம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட காசநோய் மையங்கள் சுமார் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

57. விழுப்புரம், இராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களுக்கு வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

தற்போது வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டம் 9 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்தத் திட்டம் நடப்பாண்டில் விழுப்புரம், இராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களுக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

58. திருவரங்குளம், கொடும்பாளூர், மண்டையூர் மற்றும் கொப்பனாப்பட்டி ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவுகள் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், தும்பல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் அறை மற்றும் காத்திருப்போர் அறை 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

ஆரம்ப சுகாதார நிலையங்களில் படிப்படியாக மகப்பேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவரங்குளம், கொடும்பாளூர், மண்டையூர் மற்றும் கொப்பனாப்பட்டி ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவுகள் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், தும்பல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் அறை மற்றும் காத்திருப்போர் அறை 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டித்தரப்படும்.

பிற்பகல் 4–30

59. நாகப்பட்டினம், ஈரோடு, திருப்பூர், உதகமண்டலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் நுரையீரல் நோய்கென உயர்தர மருத்துவ சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் நலனுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம், ஈரோடு, திருப்பூர், உதகமண்டலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சுமார் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி ஏற்படுத்தப்படும்.

60. இணை இயக்குநர் அலுவலகத்தில் 31 Data Entry Operator மற்றும் கணக்கு உதவியாளர்களும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 32 முடநீக்கியல் நுட்புநர்கள்/ தொழில்முறை நுட்புநர்களும் நியமனம் செய்யப்படுவார்கள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்டங்களில் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு தொகுப்பூதியத்தில் 31 கணினி உள்ளீட்டாளர் மற்றும் கணக்கு உதவியாளர்கள் 93 இலட்சம் ரூபாய் செலவிலும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

32 முடநீக்கியல் நுட்புநர்கள்/தொழில்முறை நுட்புநர்கள் தொகுப்பூதியத்தில் 38 இலட்சம் ரூபாய் செலவிலும் என மொத்தம் 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.

61. கடலூர், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், அரியலூர், நீலகிரி, திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு பிறவி இருதய குறைபாடு உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, நோயினை உறுதி செய்ய எக்கோ கார்டியோகிராம் கருவி 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

கடலூர், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், அரியலூர், நீலகிரி, திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ள மாவட்ட ஆரம்ப இடைநிலை சிகிச்சை மையத்திற்கு (District Early Intervention Centre) *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பிறவி இருதய குறைபாடு உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து நோயினை உறுதி செய்ய எக்கோ கார்டியோகிராம்* (ECHO Cardiogram) *கருவி 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.*

62. திருச்செந்தூர், மதுக்கரை, அகஸ்தீஸ்வரம், கிள்ளியூர், குறுந்தங்கோடு, மேல்புரம், மூஞ்சிறை, தக்கலை, திருவட்டாறு, தோவாளை, அலங்காநல்லூர், மதுரை மேற்கு, வாடிப்பட்டி ஆகிய 13 வட்டாரங்களில் உள்ள சமுதாய சுகாதார நிலையங்கள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருச்செந்தூர், மதுக்கரை, அகஸ்தீஸ்வரம், கிள்ளியூர், குறுந்தங்கோடு, மேல்புரம், மூஞ்சிறை, தக்கலை, திருவட்டாறு, தோவாளை, அலங்காநல்லூர், மதுரை மேற்கு,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

வாடிப்பட்டி ஆகிய 13 வட்டாரங்களில் உள்ள சமுதாய சுகாதார நிலையங்கள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

63. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு தீவிர கண்காணிப்புப் பிரிவு மற்றும் கட்டமைப்பு வசதிகள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு தீவிர கண்காணிப்புப் பிரிவு மற்றும் கட்டமைப்பு வசதிகள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

64. 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் தேனி என்.ஆர். தியாகராஜன் நினைவு மருத்துவமனையில் மனநல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் புனர்வாழ்வு மையம் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேனி என்.ஆர். தியாகராஜன் நினைவு மருத்துவமனையில் மன நல மருத்துவ ஆராய்ச்சி மற்றும் புனர்வாழ்வு மையம் அமைக்க பல்வேறு நிலைகளில் 18 பணியிடங்களும் மற்றும் உபகரணங்களும் 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கி, இம்மையம் அமைக்கப்படும்.

65. மாவட்ட மனநலத் திட்டத்தில் 16 மாவட்டங்களில் 1 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் முதல் கட்டமாக மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மன நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதல் கட்டமாக திருச்சி, மதுரை, இராமநாதபுரம், தேனி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கடலூர், சென்னை,

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

காஞ்சிபுரம், பெரம்பலூர், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய 16 மாவட்டங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு மாவட்ட மன நலத் திட்டம் பற்றிய பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுமார் 1 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

66. சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிக்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான உபகரணங்கள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

67. 28 குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்கள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது குழந்தைகளுக்காக 28 தீவிர சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த 28 தீவிர சிகிச்சை மையங்கள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

68. 39 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் பல் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

கிராமப்புற பகுதிகளில், பல் மருத்துவ சேவை இல்லை என்பதால், இந்த அரசு ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவை படிப்படியாக ஏற்படுத்தி வருகிறது. தற்போது 348 பல் மருத்துவப் பிரிவுகள் 44 அரசு மருத்துவமனைகள் மற்றும் 304 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மேலும் 39 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் பல் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

69. 147 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் பல் சிகிச்சைப் பிரிவுகளுக்கு பல் ஊடுகதிர் கருவி (Dental X–Ray) 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 147 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் பல் சிகிச்சைப் பிரிவுகளுக்கு பல் ஊடுகதிர் கருவி (Dental X–Ray) *1 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும். மேலும், பல் சுகாதாரம் குறித்து 4 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.*

70. 7 அரசு மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறை நலப் பிரிவுகள் 98 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், அரசினர் புனர்வாழ்வு மருத்துவ நிலையம், சென்னை, மனநல நிலையம் மற்றும் அரசினர் மனநல மருத்துவமனை, சென்னை, அரசினர் மகளிர் மற்றும் மகப்பேறு நிலையம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை, அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை, தாம்பரம், அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம் மற்றும் செங்கோட்டை ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறை நலப் பிரிவுகள் 98 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

71. அனைத்து மாவட்டங்களிலும் பெண் குழந்தைகள் பிறப்பு மற்றும் PNDT சட்டம் பற்றிய விழிப்புணர்வு 93 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பெண் குழந்தைகளின் பிறப்பு குறைந்து வருவது மற்றும் PNDT

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

சட்டம் பற்றிய விழிப்புணர்வு 93 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

72. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கதிரியக்கத் துறைக்கு 86 இலட்சம் ரூபாய் செலவில் டிஜிட்டல் சப்ட்ராக்சன் ஆன்ஜியோகிராபி (Digital Subraction Angiography) வசதி செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கதிரியக்கத் துறைக்கு 86 இலட்சம் ரூபாய் செலவில் டிஜிட்டல் சப்ட்ராக்சன் ஆன்ஜியோகிராபி (Digital Subtaction Angiography) அமைப்பு வழங்கப்படும்.

73. தொழில்நுட்பம், நவீன கருவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடும்பொருட்டு, மாநில சுகாதார ஆலோசனை மையம் (State Health Resource Centre) 82 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இந்தியாவில் சுகாதாரத் துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொழில்நுட்பம், நவீன கருவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடும்பொருட்டு மாநில சுகாதார ஆலோசனை மையம் (State Health Resource Centre) 82 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

74. 108 அவசர கால ஊர்தி ஓட்டுநர்கள் அனைவருக்கும் ஆண்டிராய்டு கைபேசிகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 108 அவசர கால ஊர்தி சேவையில் பணிபுரியும் ஓட்டுநர்கள் அனைவருக்கும் ஆண்டிராய்டு வகை கைபேசிகள் (Android Smart Phone) 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டு செயலி (Pilot App.) பொருத்தப்படும். இதனால் விபத்து நடக்கும் இடத்திற்கு ஆம்புலன்ஸ் செல்லும் காலநேரம் மேலும் குறையும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

75. செங்கல்பட்டு, தேனி, தருமபுரி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் மேமோகிராம் கருவி 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறியும் மேமோகிராம் கருவி, செங்கல்பட்டு, தேனி, தருமபுரி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

76. மருந்து எதிர்ப்பு காசநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக 24 அரசு மருத்துவமனைகளில் 72 இலட்சம் ரூபாய் செலவில் உள்நோயாளிகள் பிரிவு புதிதாக தோற்றுவிக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருந்து எதிர்ப்பு காசநோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நலனைக் காத்திடும்வகையில், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், உதகமண்டலம், திருவள்ளூர், திருப்பூர், விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் தருமபுரி, கன்னியாகுமரி, கரூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தேனி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 24 அரசு மருத்துவமனைகளில் 72 இலட்சம் ரூபாய செலவில் உள்நோயாளிகள் பிரிவு புதிதாகத் தோற்றுவிக்கப்படும்.

77. கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவும், குழித்துறை அரசு மருத்துவமனையில் குழந்தை நலப் பிரிவும் 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவும், குழித்துறை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவும் 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

78. மாநில நலவாழ்வு அமைப்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநில திட்ட மேலாண்மைப் பிரிவு மற்றும் மாநில சுகாதார கணக்கு பிரிவுகள் தொடங்கப்படும்.

ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவைத் திட்டத்தை அனைத்து சுகாதார மாவட்டங்களிலும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநில நலவாழ்வு சங்க அலுவலகத்தில், மாநில திட்ட மேலாண்மைப் பிரிவு 43 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இது தவிர, மாநில சுகாதார கணக்குப் பிரிவு 7 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

79. வேலூர், திருநெல்வேலி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் நாமக்கல், காஞ்சிபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 5 தாய்ப்பால் வங்கிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

பச்சிளம் குழந்தைகள் நோய் தொற்றின்றி ஆரோக்கியமாக ஊட்டச்சத்து மிகுந்த குழந்தைகளாக உருவாகிடும்வண்ணம், ஏற்கெனவே 9 தாய்ப்பால் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் 5 தாய்ப்பால் வங்கிகள் வேலூர், திருநெல்வேலி மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், நாமக்கல் மற்றும் காஞ்சிபுரம் தலைமை மருத்துவமனைகளிலும் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

80. சென்னை மாநகராட்சியில் காசநோய் தடுப்புத் திட்டத்தில் கூடுதலாக 2 அலகுகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மாநகராட்சியில் தேசிய காசநோய் தடுப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடும்விதமாக, ஏற்கெனவே உள்ள காசநோய் தடுப்புத் திட்ட 3 அலகுகளுடன் கூடுதலாக 2 அலகுகளை ஏற்படுத்தி மொத்தம் 5 அலகுகள் கூடுதல் 73 பணியாளர்களுடன் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

81. சென்னை கன்டோன்மென்ட் மருத்துவமனையின் சித்தா மற்றும் ஆயுர்வேதா பிரிவு 46 இலட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

சென்னை கன்டோன்மென்ட் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனையின் சித்தா மற்றும் ஆயுர்வேதா பிரிவுகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 46 இலட்சம் ரூபாய் மதிப்பில் தரம் உயர்த்தப்படும்.

82. பள்ளி சிறார்களுக்கான மருத்துவத் திட்டத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு 29 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டிஸ்லெக்சியா என்ற கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளைப்பற்றி, RBSK நடமாடும் மருத்துவக் குழுவில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்தாளுநர்களுக்கு 8 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சியும், ரூமாட்டிக் இருதய நோய் குறித்து பள்ளி ஆசிரியர்களிடையே 8 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வும், 43 ஆயிரம் பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவியர்களிடையே ரூமாட்டிக் இருதய நோய் பற்றி 3 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள், சென்னை பெருநகர குடிநீர் வாரிய பொறியாளர்கள் மற்றும் ஊராட்சி/நகராட்சி பொறியாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் குறித்த பயிற்சி 10 இலட்சம் ரூபாய் செலவிலும் என 29 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பயிற்சிகளும் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்படும்.

83. அரசு மருத்துவமனைகளில் எப்பொழுதும் மருந்து இருப்பை உறுதி செய்ய மருந்து விநியோக மேலாண்மைத் திட்டம் 29 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவமனைகளில் மருந்து எப்பொழுதும் இருப்பதை உறுதி செய்ய, மருந்து விநியோக மேலாண்மைத் திட்டம் 29 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

84. தேசிய புகையிலை தடுப்புத் திட்டம் புதுக்கோட்டை, கடலூர், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் தேசிய புகையிலை தடுப்புத் திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதுக்கோட்டை, கடலூர், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில் 25 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

85. தன்னார்வ இரத்த தானம் செய்பவர்களை ஊக்குவிக்க பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் சேகரிக்கப்படும் மொத்த இரத்த அளவில் 99 விழுக்காட்டிற்கும் மேல், இரத்தக் கொடையாளர்களிடமிருந்து பெறப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தன்னார்வ இரத்த தானம் செய்பவர்களை ஊக்குவிக்க பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

86. சென்னை அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரிக்கு, கணினி மற்றும் தளவாடப் பொருட்கள் 19 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரிக்கு, கணினி மற்றும் தளவாடப் பொருள்கள் 19 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

87. மதுரை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 2 ஊட்டச்சத்து புனர்வாழ்வு மையங்கள் 18 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 12 செவிலியர்கள், 3 ஊட்டச்சத்து ஆற்றுநர்களுடன் 2 ஊட்டச்சத்து புனர்வாழ்வு மையங்கள் 18 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

88. மூன்றாம் பாலினர் மற்றும் பழங்குடியினருக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சேவை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பாதிக்கப்பட்ட குழுக்களான மூன்றாம் பாலினர் மற்றும் பழங்குடியினருக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்படும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

89. சுகாதாரப் பணியாளர்கள், ஆஷா மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு 14 இலட்சம் ரூபாய் செலவில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பிரசவத்திற்குப் பின் பொருத்தப்படும் காப்பர்–டி சேவையை அளிக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும், பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையும் 9 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். மேலும், ஆஷா மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஒன்றுபட்டு கிராமப்புறங்களில் மருத்துவ சேவைகள் அளித்து வருவதை ஊக்குவிக்கும்பொருட்டு இவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் செலவில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

90. 13.75 இலட்சம் ரூபாய் செலவில் ஒருமுறை உபயோகிக்கும் பிரசவ கிட்கள் அரசு மருத்துவ நிலையங்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒருமுறை உபயோகிக்கும் பிரசவ கிட் 13.75 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மருத்துவ நிலையங்களுக்கு வழங்கப்படும்.

2017 ஜூலை 4] [*டாக்டர் சி. விஜய பாஸ்கர்*]

91. பழங்குடியினர் பகுதியில் உள்ள சூளாங்குறிச்சி, கருமந்துறை மற்றும் தும்பல் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 13.14 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

பழங்குடியினர் பகுதியில் உள்ள சூளாங்குறிச்சி, கருமந்துறை மற்றும் தும்பல் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 13.14 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

92. மாவட்ட அரசு ஆரம்ப சிகிச்சை மையங்களுக்கு சுவரொட்டி மற்றும் பரிந்துரை படிவங்கள் மற்றும் பிறவிக் குறைபாடு கண்டறிதல் விளக்கக் கையேடு 12.90 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 31 மாவட்ட ஆரம்ப நிலை தலையீடு மையங்களுக்கு 8.40 இலட்சம் ரூபாய் செலவில் சுவரொட்டி மற்றும் பரிந்துரை படிவங்களும், அனைத்து பிரசவ நிலையங்களுக்கு, குழந்தை பிறந்தவுடன் பிறவிக் குறைபாடு கண்டறிய விளக்கக் கையேடு 4.50 இலட்சம் ரூபாய் செலவில் என மொத்தம் 12.90 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

93. தொற்றா நோய், வாய் புற்றுநோய், சம்பந்தப்பட்ட செயலிகளை ஒன்றுபடுத்த க்ளவ்டு கம்ப்யூட்டிங் (Cloud Computing) மென்பொருள் 8.25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொற்றா நோய், வாய் புற்றுநோய், சம்பந்தப்பட்ட செயலிகளை ஒன்றுபடுத்த க்ளவ்ட் கம்ப்யூட்டிங் மென்பொருள் 8.25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

94. சென்னை மாநகராட்சி போன்றே தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இணையதளம் மூலமாக, பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

தற்போது பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் சென்னை மாநகராட்சியில் மட்டும் இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பு ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இணையதளம் மூலமாக, பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

95. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நலப் பிரிவு, சிறப்பு தடுப்பூசி பிரிவுகளில் வாரத்தில் ஏழு நாட்களும் தடுப்பூசி போடும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

தற்போது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வாரத்தில் புதன்கிழமை மட்டும் குழந்தைகள் நலப் பிரிவில் தடுப்பூசி போடப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வரும் காலங்களில் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நலப் பிரிவு, சிறப்பு தடுப்பூசி பிரிவுகளில் வாரத்தில் ஏழு நாட்களும் தடுப்பூசி போடும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

96. சென்னை மனநல நிலையத்தில் போஸ்ட் பேசிக் மனநல செவிலியர் பட்டயப் படிப்பு தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மனநல நிலையத்தில் இந்தக் கல்வி ஆண்டு முதல் ஓராண்டு போஸ்ட் பேசிக் மனநல செவிலியர் பட்டயப் படிப்பு (Post Basic Diploma in Psychiatry Nursing) தொடங்கப்படும்.

பிற்பகல் 4–35

97. சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஏத்தாப்பூர், தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஆகிய இடங்களில் விபத்து காய சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளது. மேலும், சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர், தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ளன. தேசிய நெடுஞ் சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மகுடஞ் சாவடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும், ஏத்தாப்பூர் மற்றும் தஞ்சை மாவட்டம் சேதுபாவா சத்திரத்திலும் விபத்து காய சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

98. 11 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.3,000/– மதிப்புள்ள ரோட்டா வைரஸ் தடுப்பு சொட்டு மருந்து கட்டணமின்றி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 11 இலட்சம் குழந்தைகளுக்கு ரோட்டா வைரஸால் ஏற்படும் வயிற்றுப்போக்கைத் தடுத்திட இந்த ஆண்டு முதல் 3,000 ரூபாய் மதிப்புள்ள ரோட்டா வைரஸ் தடுப்பு சொட்டு மருந்து கட்டணமின்றி வழங்கப்படும்.

99. நோய்த் தடுப்பு மருந்துகளை பாதுகாக்க 893 Ice Lined Refrigerators மற்றும் 803 Deep Freezers வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய தடுப்பூசித் திட்டத்தை வலுப்படுத்தும் வகையில் நோய்த் தடுப்பு மருந்துகளை பாதுகாக்க, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 893 Ice Lined Refrigerators மற்றும் 803 Deep Freezers வழங்கப்படும்.

100. தமிழ்நாட்டில் இருதயம் மற்றும் இரத்தநாளங்கள் பாதிப்பினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாநில இருதய சிகிச்சை கொள்கை வகுக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில், இருதயம் மற்றும் இரத்த நாளங்கள் பாதிப்பினால் ஏற்படும் மரணங்களை மூன்றில் ஒரு

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

பங்காக (70 வயதுக்குட்பட்டவர்கள்) குறைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாநில இருதய சிகிச்சை கொள்கை வகுக்கப்படும். இதனால், இருதயம் மற்றும் இரத்த நாளங்களைப் பாதிக்கும் நோயினால் ஏற்படுகின்ற காலத்திற்கு முந்தின மரணங்கள் குறைதல், தமிழ்நாட்டில் இருதயம் மற்றும் இரத்த நாளங்கள் நோய் பாதிப்பு நிகர் விகிதம் குறைதல், இவற்றை ஏற்படுத்தும் நோய்க் காரணிகள் குறித்து மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வு ஏற்படுவதால் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை குறைதல் மற்றும் நோயாளிகளின் வாழ்க்கைத் தரம் உயர்தல் ஆகிய விளைவுகள் ஏற்படும்.

101. புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், புற்றுநோய்க்கான உயர்தர மருத்துவ சிகிச்சை வழங்கவும், மாநில புற்றுநோய் கவனிப்புக் கொள்கை (State Cancer Policy) வகுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படும்.

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் தொற்றா நோய் கண்டறியும் வாயிலாக புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்தல், நோய்க்குரிய சாத்தியக்கூறை கண்டறிதல் (Screaning), கண்டறிந்து சிகிச்சையளித்தல், மிகவும் தரமான உயர்தர சிகிச்சையை உள்ளடக்கிய புற்றுநோய்க்கான மருத்துவம், தொடர் கண்காணிப்பு, இறுதி நிலையில் உள்ளவருக்கு தேவையான ஆதரவு சிகிச்சை ஆகியவற்றிற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநில புற்றுநோய் கவனிப்பு கொள்கை வகுக்கப்படும். இக்கொள்கை புதியதாக புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறையவும், புற்றுநோயால் இறப்போரின் எண்ணிக்கை குறையவும், வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி வழங்கப்படும் தரமான சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும் புற்றுநோயாளிகளின் வாழ்க்கை தரம் மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

102. விபத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான சிகிச்சை கொள்கை (Trauma Care Policy) வகுக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாநில விபத்தினால் ஏற்படும்

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பாதிப்புகளுக்கான சிகிச்சை கொள்கை, விபத்தால் பாதிப்பு மற்றும் காயம் ஏற்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன்பும் மற்றும் மருத்துவமனையில் சேர்த்த பின்பும் உயிர்காக்கும் சிகிச்சை அளிப்பது தொடர்பான முறைகளை கவனத்தில் கொண்டு வகுக்கப்படும். அடுத்த பத்து ஆண்டுகளில் விபத்து சிகிச்சைப் பிரிவுகளை, முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில் அமைப்பது குறித்து விரிவாக திட்டமிடப்பட்டுள்ளது.

103. முன்னோடி முயற்சியாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டையை, மின்னணு முறையில் பயனாளிகள் இனி பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி (e–cards) ஏற்படுத்தப்படும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அடையாள அட்டை இன்றியமையாததாகும். இத்திட்டத்தில் 1.58 கோடி குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதனை பெறாதவர்கள் தங்களது குடும்ப அட்டை மற்றும் கிராம நிருவாக அலுவலரிடம் பெறப்பட்ட வருமானச் சான்றிதழ் (72,000 ரூபாய்க்கு குறைவான) ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அடையாள அட்டை வழங்கும் இடத்தில் சமர்ப்பித்து காப்பீட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் முன்னோடி முயற்சியாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டையை மின்னணு முறையில் பயனாளிகள் இனி பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி (e–cards) ஏற்படுத்தப்படும்.

104. மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்க வேண்டும் என்பது தான் அத்தனை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கை. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, மருத்துவப் பணியளார் தேர்வு வாரியம் மூலமாக 1,224 எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள், 600 சிறப்பு உதவி மருத்துவர்கள், 700 செவிலியர்கள், 137 உதவி மருத்துவ அலுவலர்கள் (சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோபதி, யோகா (ம) இயற்கை மருத்துவம்) 333 மருந்தாளுநர்கள்,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூலை 4

1,234 ஆய்வு நுட்புநர்கள், 179 இதய வரைபட நுட்புநர்கள், இயன்முறை சிகிச்சையாளர், நுண்கதிர் வீச்சாளர் மற்றும் விழிஒளி பரிசோதகர்கள் தேர்வு செய்யப்பட்டு உடனடியாக நிரப்பப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு அறிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு வாரியம் மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் என இதுவரை 20,862 பணியாளர்களை தேர்ந்தெடுத்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் 1,224 எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள், 600 சிறப்பு உதவி மருத்துவர்கள், 1010 செவிலியர்கள், 137 உதவி மருத்துவ அலுவலர்கள் (சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோபதி, யோகா (ம) இயற்கை மருத்துவம்) 333 மருந்தாளுநர்கள், 1,234 ஆய்வக நுட்புநர்கள், 179 இதய வரைபட நுட்புநர்கள், இயன்முறை சிகிச்சையாளர், நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும் விழிஒளி பரிசோதகர்கள் அரசு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவார்கள்.

105. தமிழகத்தில் டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற நோய்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வண்ணம் ஏற்கெனவே எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன் கூடுதலாக 13 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்களை கட்டுப்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பைரத்ரம், டெமிபாஸ் முதலான கொசு ஒழிப்பு மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்காகவும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் 13 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

2017 ஜூலை 4] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

106. தமிழகத்தில் காசநோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் 141 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் முழு வீச்சில் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் 1.13 விழுக்காடாக இருந்த எச்.ஐ.வி./எய்ட்ஸ் தாக்கம் 0.27 விழுக்காடாக குறைந்துள்ளது. புதிய தொற்று பரவுதலை தடுக்கும்பொருட்டும் காசநோய்–எச்.ஐ.வி. கூட்டு நடவடிக்கைகள், டாட் பிளஸ் மற்றும் உகந்த வழிமுறைகளை மேம்படுத்துவதன்மூலம் காசநோய்–எச்.ஐ.வி., எம்.டி.ஆர். காசநோய் மற்றும் பிற சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 141 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் திட்டப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

107. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சார்ந்த அனைத்துக் கல்லூரிகளில் மருத்துவம் பயிலும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி அதாவது முதற் கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் டிஜிட்டல் நூலகம் (Digital Library) அமைக்கப்படும்.

இன்றைய நவீன யுகத்தில் டிஜிட்டல், தகவல் தொழில்நுட்ப முறையில் ஆயிரக்கணக்கான நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரிய தகவல்கள் எளிதில் கிடைக்கின்றன. மேலும் எண்ணற்ற விபரங்களை சேமித்து வைக்கவும், எளிதில் தேவையான விபரங்களை மருத்துவக் கல்வி மாணவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கிடைத்திடவும், டிஜிட்டல் நூலகம் அவசியமான ஒன்று. இந்த தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 26 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் டிஜிட்டல் நூலகம் (Digital Library) அமைக்கப்படும்.

108. பொது மக்களுக்குப் பொதுச் சுகாதாரம் குறித்த பரந்த அளவிலான விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவசர காலங்களில் முன்னெச்சரிக்கை தகவல்களை மக்களிடையே பரப்பிடவும் அம்மா நலவாழ்வு வானொலி சேவை (Amma Health Radio) துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

மக்கள் தொடர்பு சாதனங்களில் மகத்தான வலிமை பெற்ற வானொலி மூலம் தகவல்கள் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எல்லோரையும் எளிதில் சென்றடைகின்றன. நலவாழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரத்யேக வானொலி சேவையை முதன் முதலாக தமிழகத்தில் உருவாக்கிட அம்மாவின் அரசு முனைந்துள்ளது. இதனால், சுகாதார விழிப்புணர்வு செய்திகள் அதிக அளவில் மக்களை சென்றடையவும், அவசர காலங்களில் மக்களுக்குத் தேவைப்படும் பொது சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கவும் முடியும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்பு மருத்துவர்கள் மற்றும் பல்துறை நிபுணர்களின் நேர்காணல்கள், விவாதங்கள், கேள்வி–பதில்கள் போன்ற நிகழ்ச்சிகளால் பொதுமக்கள் சந்தேகங்கள் களையப்பட்டு, பயனடைய "அம்மா நலவாழ்வு வானொலி சேவை" நடப்பாண்டில் தொடங்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, பேசிய உறுப்பினர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பு. (குறுக்கீடு) பரவாயில்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய அமைச்சர், அருமை சகோதரர், மிக அற்புதமான தமிழகம் முழுவதுமான திட்டங்களை அறிவித்ததில் மகிழ்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் convoy புறப்பட்டதிலிருந்து இங்கு வந்து அமரும் வரை அவர்களுடைய ஒவ்வொரு நிகழ்வுகளையும் சொல்லி, இந்தச் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய அதிகமான உறுப்பினர்களின் கண்களிலிருந்து கண்ணீரை வரவழைத்தார்கள். இறுதியாக 108 திட்டங்களை அறிவித்ததில் ஒன்றுகூட என்னுடைய தொகுதிக்கு வரவிடாமல் என் கண்களிலும் கண்ணீரை வர வைத்தது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் பல முறை சொல்லியிருக்கிறேன். திருவாடனை தொகுதியில் இருக்கக்கூடிய பொது மருத்துவமனையில் postmortem

2017 ஜூலை 4] [திரு. சே. கருணாஸ்]

செய்வதற்கான mortuary கட்டடமே இல்லை. திறந்த வெளியிலே அது நடந்து கொண்டிருக்கிறது. அதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். ** நிகழ்வாக நடக்கக்கூடிய செயல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு ஏதாவது கேளுங்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே எல்லோருக்கும் சலுகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிவிட்டார்கள். என்னுடைய தொகுதிக்கும் வழங்க வேண்டும் என்ற என்னுடைய சிரம் தாழ்ந்த கோரிக்கையை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 108 சிறந்த அறிவிப்புகளை நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எந்த ஊரையும் விடாமல் முக்கால்வாசி ஊர்களை cover செய்திருக்கிறார். நல்ல விஷயம்.

அதேபோல, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மேல்புறம் சமுதாய சுகாதார நிலையம் மேம்படுத்தப்படும், தரம் உயர்த்தப்படும் என்றுதான் நான் நினைக்கிறேன். Upgraded PHC ஆக தரமுயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–40

என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட அறிவிப்புகளெல்லாம் நான் வைத்த கோரிக்கைகள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவற்றைச் சரியாகப் பரிசீலனை செய்திருக்கிறார். அருமனை அரசு மருத்துவமனையில் x–ray பிரிவும், குழித்துறை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல பிரிவும் ரூ.60 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் additional request–ம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி எஸ். விஜயதரணி] [*2017 ஜூலை 4*

கொடுத்திருக்கிறேன். அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரே ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதியில் கடுமையான மலைப் பகுதியில் உள்ள கடையாலுமூடு பேரூராட்சியில் களியல் பகுதியில் உள்ள சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும். அங்கு கூடுதல் வசதி செய்து கொடுத்தால்தான் distance keep up செய்ய முடியும். அங்கு எல்லா கருவிகளும் கொடுத்தால்தான் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

அதேபோல, பளுகல், குழித்துறை, உண்ணாமலைக்கடை போன்ற பகுதிகளிலெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள். நீண்ட நேரம் பேச வேண்டாம்.

திருமதி எஸ். விஜயதரணி: உரையை முடித்துவிடுகிறேன். அந்தப் பகுதிகளில் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நிரந்தரக் கட்டடம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அவற்றைத் தரம் உயர்த்துவதற்கும் ஆவன செய்ய வேண்டும். இடைக்கோடு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடங்கள் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) பேசுங்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் 108 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தர மாட்டேன். (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) அவை எதுவுமே அவைக் குறிப்பில் வராது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அப்படியெல்லாம் பேசக் கூடாது. அதெல்லாம் முறையல்ல. நீங்கள் அங்கே போய் கூப்பிட்டெல்லாம் பேசக் கூடாது. என்னைப் பார்த்துதான் பேச வேண்டும். மரபுகளை முதலில் கற்றுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அங்கே போய் நீங்கள் எதுவும் சொல்லக் கூடாது. என்னிடத்தில்தான் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் 108 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அனைத்தும் முத்தான அறிவிப்புகள்; சத்தான அறிவிப்புகள்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசுக்கு சிறப்பு சேர்க்கக்கூடிய வித்தான அறிவிப்புகள். 108 அறிவிப்புகளிலே, நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையைச் சார்ந்த 8 அறிவிப்புகளை வெளியிட்டதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய பெயர் 'விஜய பாஸ்கர்'; நீங்கள் 'விஜய பாக்ஸர்' என்று உங்களுடைய பெயரை மாற்றிக் கொள்ளலாம். வாழ்த்துகள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர்களான மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகியோருடைய அரசியல் வாரிசு நாங்கள் என்பதை நிரூபிக்கின்றவிதமாக அற்புதமான அறிவிப்புகளை (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிட்டிருக்கின்ற, எளிமையின் சிகரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் எறும்பின் சுறுசுறுப்பை உடம்பில் வைத்து, குழந்தையின் துறுதுறுப்பை மனதில் வைத்து, சுகாதாரத் துறையில் அம்மா அவர்களின் புகழை ஓங்கச் செய்த, அயராது

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜூலை 4*

உழைக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆகிய இருவரையும் வாழ்த்த வயதின்றி, வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரத் துறையின் சார்பாக D.N.B. Courses, Radiotherapy for Dindigul Government Hospital, Palliative Care for Oncology patients, மன நல மருத்துவத்திற்கு அதிகமான முக்கியத்துவம், Radio channel for health, டி.வி. என பிற்காலத்திலே தரம் உயர என்னுடைய வாழ்த்துக்களை சொல்லி, அத்தனைத் திட்டங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ** என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி, அரசு மருத்துவர்களையெல்லாம் கொச்சைப்படுத்துவதாக ஒரு வார்த்தையை பதிவு செய்தார்கள். அருள்கூர்ந்து அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என அன்போடு உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொன்னது உட்பட, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியது இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.

***டாக்டர் கா. கதிர்காமு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பகுதியிலும், எந்த ஒரு நோயாளிக்கும் ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், உடனே 108 ஆம்புலன்சுக்கு phone செய்தால், அது எவ்வளவு வேகமாக வருகின்றதோ, அதைவிட வேகமாக 108 அறிவிப்புகளை வாசித்ததோடு மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செயல்படுத்துவதிலும் வல்லவர் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவர் என்ற முறையில் அத்தனை அறிவிப்புகளும் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவர்கள் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சின்ன சேலம் ஒன்றியம், நயினார்பாளையத்திற்கு ஒரு ambulance–ம், கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 2 dialysis machine–களும் வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், தற்போது, கள்ளக்குறிச்சி மாவட்ட தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம், அறுவை அரங்கம், Central Sterile Supply Department அறுவைப் பிரிவை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா பெருமைகளும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் சாரும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே உங்களுக்கு எப்பொழுதும் ஆனந்தக் கண்ணீர்தான் வர வேண்டும். ஆகையினால், உங்கள் தொகுதியினுடைய மருத்துவமனை குறித்து தாங்கள் நேரிலே கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான ஏற்பாடுகள் நடந்தாகிவிட்டன. அதாவது, அரசாணை போடப்பட்ட 200 கோடி ரூபாய் அளவிற்கான திட்டங்களை இந்த அறிவிப்பிலே சேர்க்கவில்லை. ஏனென்றால், இந்த இரண்டு மாதங்களில் அரசாணை வெளியிடப்பட்ட திட்டங்களிலே, அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை. ஆகையினால், உங்கள் தொகுதி மருத்துவமனைக்கான ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன என்ற நல்ல தகவலை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜூலை 4*

(மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இதிலே ஒரு சில உறுப்பினர்களினுடைய தொகுதிகளின் பெயர்கள் வரவில்லையென்றாலும்கூட, ஒட்டுமொத்த அந்த எண்ணிக்கை மட்டும் சொல்லப்பட்டிருக்கும். பக்கங்களினுடைய எண்ணிக்கையைக் கருதி, புத்தகத்தில் அந்தப் பெயர்கள் இடம் பெறவில்லை. 234 தொகுதிகளும் இதில் வந்திருக்கின்றன. முத்து முத்தான, சத்து சத்தான அறிவிப்புகள் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்சாரி அவர்கள் தெரிவித்தார்கள். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் வைரம், வைடூரியம், பவளமான அறிவிப்புகளெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள், விதி 110–ன்கீழ் அறிவிக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல், நம்முடைய அண்ணன் மரியாதைக்குரிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்— மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்களுக்கும் சிறப்பான அறிவிப்புகள் இருக்கின்றன என்ற நல்ல தகவலையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு, என்னுடைய உரையில் தெரிவித்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய ஆக்கப்பூர்வமான கருத்துகளையும், ஆலோசனைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இனிவரும் காலங்களில் அவையும் நிறைவேற்றப்படும், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு விடைபெற்றுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

2017 ஜூலை 4] [பேரவைத் துணைத் தலைவர்]

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,104,10,29,000/–, மூலதனக் கணக்கில் ரூ.52,66,14,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–7–2017) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

88. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)